# நேசம் தந்தவள் நீதானே!



## 1

வானம், நிலவுக் கிரீடத்தை பெரும் ஒளிவட்டத்துடன் சூடிக்கொண்டிருந்தது.

காற்றில் குளிரின் சீற்றத்துடன், உதிர்கின்ற ஒளித்துகளாய் அந்தரத்தில் பொன்னூஞ்சல் ஆடியபடி கண்சிமிட்டின, மின்மினிகள்!

மஞ்சம் கலைத்து உறங்கிக் கொண்டிருந்த மனிதர்களின் கனவுகளைக் கலைக்க மனமின்றி, மஞ்சள் வைரங்களாய் மவுன மொழி பேசியபடி நட்சத்திரங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்த இரவு நேரம்!

அன்று, தேஜஸ்வனிக்கு மட்டும், ஏனோ உறக்கம் கையகப்பட மறுத்து சத்தியாக்கிரகம் செய்தது.

அவள் இருந்தது தனி அறையாக இருந்தாலும், புதிய இடமென்பதால் மனம் தன் இமை மூட மறுத்து விழித்திருக்க, சில்வண்டுகளின் ரீங்காரம் செவிமடல்களை சிலிர்ப்புடன் ஊடுருவிச் செல்வதாய்...!

நினைவலைகள் எங்கோ தாவிச் செல்ல, சென்னையிலுள்ள தன் வீட்டிலிருக்கும் ஏசியும், அரையடி அமுங்கித் தன்னை உள்வாங்கிக் கொள்ளும் மெத்தையும் மறக்க முடியாமல் நினைவில் படர்ந்தன.

எல்லாவற்றையும் மீறி, அன்றொரு நாள் அவளிடம் புன்னகைப் பூக்களாய் விடை பெற்றுச் சென்ற பெற்றோரின் முகமும்...!

சோக நினைவுகள், மெல்ல எழுவதும் அமிழ்வதுமாய் கண்ணாமூச்சி ஆட, களைத்துப் போன மனதுடன் விடியலை எதிர்நோக்கி விழித்திருந்தவளை, வெகு நேரம் கழித்து, உறக்கம் வந்து மெல்லத் தழுவியது.

மறுநாள் காலையில் கண் விழித்து எழும் போதே, தான் எங்கிருக்கிறோம் என்றே புரியாத ஒரு உணர்வு மனதைத் தீண்ட, சுற்றிலும் பார்த்த போது இன்றைய நிஜம் புரிந்தது.

சோம்பல் முறித்தபடி எழுந்து ஜன்னலருகில் சென்று வெளியில் பார்வையைப் பதித்த போது, மனம் உற்சாகமானது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரவித் தெரிந்த வயல்களும், தென்னந்தோப்புகளும் கண்ணைக் கவர்ந்து, தான் ஒரு புதிய உலகத்துக்கு வந்திருப்பது போல் தோன்றியது.

மாடி ஹாலின் கோடியிலிருந்த குளியலறைக்குச் சென்று குளித்துத் தயாராகி அவள் கீழே வந்த போது, பின்புற வராண்டாவில் பண்ணையார் சென்னியப்பனுக்கு கை கால்களில் எண்ணெய் தேய்த்து உருவி விட்டுக் கொண்டிருந்தான் ஒருவன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு பக்கவாதம் தாக்கியதில், ஒரு கையும், காலும் செயலிழந்து போய் அவரால் நடக்க முடிவதில்லை.



சக்கர நாற்காலியிலிருக்கும் அவருக்குத் துணையாக எப்போதுமே அந்த ஆள் உடனிருந்தான்.

அவனைக் கண்டதும் புன்னகைத்தவரிடம் ''குட்மார்னிங் சார்'' என்றாள் தேஜஸ்வினி சிறு முறுவலுடன்.

எப்போதும் புன்னகையுடன், தன் நிலைக்கு வருந்தி சுயபச்சாதாபம் கொள்ளாமல், இந்த நிலைமையிலும் கம்பீரத்துடன் மிளிரும் அவரைக் கண்ட போது மனதில் மதிப்பும், மரியாதையும் வந்தன.

பதிலுக்கு வாழ்த்தியவர், ''என்னம்மா ராத்திரி நல்லாத் தூங்கினியா? இல்லை... புது இடம்கிறதால தூக்கம் வரலையா?'' பரிவுடன் விசாரித்தார்.

''இல்லை சார்! நல்லாத் தூங்கிட்டேன். நான் போய் ஆபீஸ் ரூமிலே எல்லாத்தையும் ரெடியா அடுக்கி வைக்கிறேன். அப்புறமா நீங்க வந்து என்னென்ன கணக்குகளை எப்படிப் பாக்கணும்னு சொல்லுங்க'' என்றாள்.

''இன்னிக்குத் தானேம்மா முதல் நாள்! ஊரில இருந்து நாளைக்கு தீபன் வந்தவுடனே, எல்லாம் எப்படிச் செய்யலாமின்னு அவன் சொல்லுவான். இன்னிக்கு எங்க ஊர் எப்படி இருக்குன்னு போய் சுத்திப் பாத்துட்டு வா! பட்டணத்துல இருந்தவங்களுக்கு எங்க ஊர் வித்தியாசமா நல்லாருக்கும்'' என்றவர் அந்த ஆளிடம் திரும்பினார்.

''சன்னாசி வெளியே நம்ம முனியன் இருப்பான் பாரு. தேஜாவை அழைச்சிட்டுப்போயி ஊரைச் சுத்திக் காட்டச் சொல்லு'' என்றார்.

அவரிடம் விடை பெற்று வெளியில் வந்த போது, முனியன் அவளுக்காகக் காத்திருந்தார்.

''வாங்கம்மா...'' என்றபடி அவர் முன்னே செல்லப் பின் தொடர்ந்த போது தான், அந்தக் கிராமத்திற்கு இயற்கை யன்னை பல அற்புத வளங்களை வாரி வழங்கியுள்ளது தெரிந்தது.

அவளுடைய அப்பா சதானந்தத்தின் நண்பர் வக்கீல் சிவநேசன் கோபி செட்டிப்பாளையத்துக்கு அருகிலிருந்த இந்த ஊரைப் பற்றி எல்லாமே கூறியிருந்தாலும், நேரில் பார்க்கும் போது புதிய அனுபவமாய்...! இருந்தது

நேற்று இரவு தான் சிவ நேசனுடன் அவள் இங்க வந்ததால், அவளால் இப்போது தான் வெளிச்சத்தில் இந்த கிராமத்தின் அழகை ரசிக்க முடிந்தது.

சென்னையிலேயே படித்து வளர்ந்தவளுக்கு, எழில் கொஞ்சும் பசுமையுடன் தூரத்து மலைத்தொடர்கள் அரணாய் நிற்க, இதமான தென்றல் குளிச்சியாய் சாமரம் வீச, காற்றிலாடும் பச்சைப் பசேலென்ற நாத்துகளுடனும், இதமளித்த அந்த இடம் நெஞ்சத்தை அள்ளிச் சென்றது.

சிவநேசன் கிளம்புகையில் நேற்று சென்னியப்பனிடம் கூறிய வார்த்தைகள் நிழலாய் ஞாபகம் வந்தன.

''சென்னி! இவ என்னோட நண்பன் சதாவோட மக. ராம்ப வசதியா வாழ்ந்த குடும்பம். செல்லமா வளர்ந்த பாண்ணு. ஆனா பாவம் தேஜா. அவ அப்பா, அம்மாவ ழந்து ரெண்டு மாசம் தான் ஆகுது. இப்ப கொஞ்சம் கஷ்ட ரம். அவளுக்கும் ஒரு மாற்றம் தேவைன்னு தான் இங்கு



அழைச்சிட்டு வந்தேன். நீ இவளை உன் வீட்டுப் பொண்ணாட்டம் பாத்துக்கணும்'' என்று கேட்டுக் கொண்டார்.

''சிவா! நீ ஒண்ணும் கவலைப்படாதே. எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன். இங்க ஒண்ணும் பெரிசா எந்த வேலையும் கிடையாது. மில்லை தீபன் பாத்துக்கறான். வயல் கணக்கு, பால் பண்ணைக் கணக்கெல்லாம் பாக்க ஆளிருக்கு. எல்லாத்தையம் பொறுப்பா சரி பார்த்து கம்ப்யூட்டர்ல ஏத்தி வச்சிடணும். அவ்வளவுதான். இப்ப என்னாலயும் முடியலையா. அதான் உடனே ஒருத்தர் வேணும்னு கேட்டேன். நான் தேஜாவப் பாத்துக்கறேன். தைரியமாப் போயிட்டு வா'' என்று கூறி அவரை அனுப்பி வைத்தது, கனவாய்த் தோன்றியது.

அவளுடைய நினைவுகளைக் கலைத்தது ஒரு குரல். நிமிர்ந்து பார்த்தால் வழியில் எதிர்ப்பட்ட ஊர்க்காரர் ஒருவர் அவளை யாரென்று முனியனிடம் விசாரித்துக் கொண்டிருந் தார்.

''இவங்க நம்ம பெரியய்யா வீட்டுக்குப் புதுசா வந்திருக்கற மேனேஜரம்மா. கணக்கப்பிள்ளை ஐயா தான் இறந்துட் டாரில்லை. அதான் கணக்கு வழக்கெல்லாம் பாக்க பட்டணத்துல இருந்து வந்திருக்காங்க'' என்றார்.

அவர் உடனே தேஜாவைப் பார்த்து புன்னகைத்து ''நல்லாயிருக்கீங்களாம்மா...?'' என்று நலம் விசாரித்து விட்டு மரியாதையுடன் வணங்கிச் சென்றார்.

பதிலுக்கு முறுவலித்த போது, பக்கத்து வீடுகளில் இருந்தாலும் முகத்தில் சிறு புன்னகைக்குக் கூடப் பஞ்சமாய்

முகம் திருப்பும் பட்டணத்து மனிதர்கள் அவள் நினைவில் நடம் பதித்தனர்.

அவள் யாரென்றே தெரியாத ஒரு நிலையில், தொலைதூரத்தில் இருந்து வந்திருந்தாலும் மனித நேயத்துடன் பாசம் சுமந்த மனிதர்களைப் பார்த்த போது, மனதிற்கு புதிய பலம் வருவது போல் ஒரு உணர்வு!

வீட்டுக்குத் திரும்பிய போது, பெரிதாக இருந்த அந்த வாசலின் அமைப்பும் உள்ளே எங்கு திரும்பினாலும் தெரிந்த பாரம்பரியம் மிக்க அலங்காரங்களும், மரவேலைப்பாடுகள் நிறைந்த அறைகளும், அவர்களுடைய பழம் பெருமையைப் பறைசாற்றுவது போலிருந்தன.

சென்னியப்பன் குளித்துத் தயாராகி முன் ஹாலில் அமர்ந்திருந்தார்.

அவளைக் கண்டதும், ''என்னம்மா தேஜஸ்வினி... எங்க ஊரை சுத்திப்பாத்தியா? உங்க சென்னை மாதிரிப் பெரிசா இல்லைன்னாலும், நல்ல வளமா இருக்கும்! உனக்காகத்தான் காத்துட்டிருந்தேன். வாம்மா சாப்பிடலாம்'' என்று அழைத்தார்.

பின்புறம் திரும்பி ''சன்னாசி!'' என்று அவர் அழைக்கும் போதே ''நான் அழைச்சிட்டுப் போறேன் சார்!'' என்றபடி சக்கர நாற்காலியை மெதுவாக டைனிங் ஹாலுக்குத் தள்ளிச் சென்றாள் அவள்.

ஒரே நாளில் தன்னைத் தனியே தவிக்க விட்டு விட்டு மறைந்த தாய், தந்தையின் நினைவு, அந்த நிமிடம் ஏனோ மனதை ஆக்ரமித்து சுயபச்சாதாபத்தை அவளுக்குள் விதைத்தன.



அவளை மேஜையருகில் உட்கார வைத்து விட்டு சமையலறைக்குள் நுழைந்த போது கனிவும் புன்னகையுமாக நின்ற பார்வதியைக் கண்டதும், மன இறுக்கம் லேசாகத் தளர்ந்தது.

''என்கிட்டக் கொடுங்கம்மா... நான் எல்லாத்தையும் கொண்டு போய் டேபிள்லே வைக்கிறேன்'' என்றபடி உதவி செய்ய ஆரம்பித்தாள்.

பார்வதி, தன் சிறு வயதிலே கணவரை இழந்து விட்டதால் தூரத்து உறவில் அண்ணன் முறையான சென்னியப்பனின் வீட்டில் சமையல் வேலைக்குச் சேர்ந்து, இப்போது குடும்பத்தில் ஒருவராக இணைந்து விட்டவர்!

அவள் பரிமாற ஆரம்பித்ததும், ''நீ உக்காந்து சாப்பிடும்மா தேஜா! பார்வதி அதெல்லாம் பாத்துப்பா!'' என்றார் சென்னியப்பன்.

''இல்லை சார்! நீங்க முதல்லே சாப்பிடுங்க. நான் அவங்களோட சாப்பிடறேன்'' எனும் போது பார்வதி அவளை அமர வைத்தார்.

''நீ அண்ணனோட உக்காந்து சாப்பிடு. நான் பாதி நாள் விரதம் இருப்பேன். டிபன் சாப்பிடறதில்லை. இன்னிக்கும் கிருத்திகை விரதம்'' என்ற போது அவளால் மறுக்க முடியவில்லை.

பிறகு முன்புறமிருந்த ஆபீஸ் ரூமிற்குச் சென்று எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கி வைத்தவளுக்கு, இந்த வேலை சுலபமானது தானென்று தோன்றியது.

## 2

அன்று மாலை, பழைய கணக்குகளை எல்லாம் சரிபார்த்துக் கொண்டிருந்த தேஜா யாரோ வரும் சத்தம் கேட்டு நிமிர்ந்த போது எதிரே உயரமான ஒரு இளைஞன் நின்றிருந்தான்.

கருமை கலந்த மாநிறத்தில் வசீகரமான முகத்தில் அடர்ந்த மீசையுடன் கண்களில் சிறு கர்வத்தை தேக்கியபடி கம்பீரமாய் நின்றிருந்தவனை இவன் யாரென்ற பாவனையுடன் விழிகளால் அளவெடுத்தாள் தேஜா.

மனதில் ஏனோ ஒரு மரியாதை வர, மெதுவாக எழுந்து "நீங்க.. ஓ! தீபன் சாரோட பிரெண்டா? அவர் இல்லையே. ஊருக்குப் போயிருக்கார். நாளைக்குத்தான் வருவார்ன்னு நினைக்கிறேன்" என்றாள் சிறு முறுவலுடன்.

புருவங்கள் நெரிய, உதட்டோரம் ஏளனமாய் ஒரு புன்னகையுடன் ''ஓஹோ.. நீங்க?'' என்றான் அவன் கேள்வியாக.

''நான் இங்கே புதுசா வேலைக்கு சேந்திருக்கேன்'' என்றவுடன் ''ம்... அவங்க அப்பாவ நான் பாக்கலாமா?'' விழிகளில் ஒருவிதக் கூர்மையுடன் கேட்டான்.

''வாங்க... உள்ளே இருக்காங்க'' என்றபடி அவனை அழைத்துச் சென்றாள்.

சாய்வு நாற்காலியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ன்னியப்பனிடம், ''சார்.. தீபன் சாரைப் பார்க்க யாரோ ந்திருக்காங்க" என்று மெதுவாகக் கூறினாள்.



மெதுவாகக் கண்களைத் திறந்தவர் உடனே சிரிக்க ஆரம்பிக்கவும், திரும்பினால் வந்தவன் ஒரு நமட்டு சிரிப்போடு நின்றிருந்தான்.

இதழ்கள் விரியாமலே விழிகள் மட்டும் புன்னகைக்க, இவன் மனம் விட்டுச் சிரித்தால் மிகவும் நன்றாக இருக்குமென்று தோன்றியது.

தறிகெட்டு ஓடும் நினைவுகளை விலக்கி நிறுத்தி விட்டு, புரியாமல் விழித்தபோது ''இவன்தாம்மா என் மகன் ஆதிபன்... தீபன்னு கூப்பிடுவோம்'' என்று கூறினார் சென்னியப்பன்.

தன்னுடைய மடத்தனத்தை எண்ணி தர்ம சங்கடத்துடன் உதட்டைக் கடித்தவள், ''சாரி...'' என்று நிமிர்ந்தபோது, பெரியவரின் குரல் இடைமறித்தது.

"தீபன் நான் சொல்லலை.. இங்க கணக்கு வழக்கெல்லாம் பாக்க சிவா ஒரு பொண்ணை அழைச்சிட்டு வரதா சொன்னான்னு. அது இவங்க தான். பேர் தேஜஸ்வினி'' என்று அறிமுகப்படுத்தினார்.

அவள் 'வணக்கம்' என்று கை குவிக்கும்போது, அவன் விழிகளில் சிறு கேலி வந்து போனதையும், ஒரு மவுனத் தலையசைப்புடன் அதை ஏற்று கம்பீரமாய் திரும்பிச் சென்றதையும் கண்டபோது, ஏனோ அவன் மேல் ஒரு ஆர்வம் வந்தது.

அன்றிரவு, தன் அறையிலிருந்து சிவநேசனுக்கு 'செல்'லில் தொடர்பு கொண்டாள் தேஜா.

உடனே பேசியவர், ''என்னம்மா... எப்படி இருக்கே? அந்த ஊர் உனக்குப் பிடிச்சிருக்கா? உன் முதலாளி என்ன சொல்றாரு?'' கிண்டலாகக் கேட்டார்.

''அங்கிள்... மனுஷங்களே இல்லாத ஒரு இடத்துக்குப் போகணும் அப்படின்னு ஆசைப்பட்டேன். ஆனா நல்லவங்க இருக்கற இடத்துக்கு கொண்டு வந்து விட்டிருக்கீங்க. ரொம்பத் தேங்க்ஸ்''

''வெல்கம். என்ன தீபன் நாளைக்குத்தான் வரானா?'' ஆர்வத்துடன் கேட்டார் சிவநேசன்.

''இல்லை... அவர் இன்னிக்கே வந்திட்டாரு. நான் தான் வந்தது அவர் தான்னு புரியாம, ஒரு காமெடி பண்ணிட்டேன்'' என்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறிச் சிரித்தாள்.

அவர் உடனே, ''எப்படிம்மா என் செலக்ஷன்?'' என்றபோது அமைதியானவள், ''நல்லாத்தான் இருக்காரு. ஆனா வெளித் தோற்றத்தை வச்சி யாரையும் எடை போட இப்பல்லாம் பயமா இருக்கே அங்கிள்'' என்றாள் மெல்லிய குரலில்.

''நீ பயப்படவே வேண்டாம் தேஜா. உனக்கு அங்கிள் மேல நம்பிக்கை இருக்கில்லே. சின்ன வயசல இருந்தே நானும் சென்னியும் குளோஸ் பிரெண்ட்ஸ். அவங்க குடும்பத்தப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். அத நீயும் புரிஞ்சுக்கறதுக்காகத்தான் இந்த ஏற்பாடே. சரிம்மா. குட்நைட்'' என்று முடித்தார்.

'செல்'லை ஞாபகமாக உயிரிழக்கச் செய்து விட்டுப் படுத்தபோது, பழைய நினைவுகள் வேகமாய் மனதை



ஆக்ரமிக்க ஆரம்பித்தன. மனதின் ஓட்டம் வேகமாய் பின்னோக்கிச் சென்றது.

கண்களை மூடி நினைவுகளை வரிசைப்படுத்தியபோது, நிறம் மாறிய மனிதர்களின் முகங்கள் வரிசையாய் கண் முன் அணிவகுத்தன.

**சென்னை**யில் பெரும் தொழிலதிபரான சதானந்தத்துக்கு தேஜா ஒரே செல்ல மகள். ஒரு பாதுகாப்பான கூட்டில் தாய், தந்தையின் அன்பிலும் அரவணைப்பிலும் இருந்த அந்தச் சிறு பறவை, இன்று அனாதையாய்.

ஒரே நாளில் கேள்விக்குறியான தன் வாழ்க்கையை நினைத்தால் மனதைப் பெரும் வேதனை சூழ்ந்தது. அவளுடைய பெற்றோரின் பதினாறாம் நாள் காரியத்தன்று நடந்த நிகழ்ச்சிகள், ஞாபக அடுக்குகளில் தடம் பதித்தன.

முதல் நாளிரவு அவளைத் தனியே அழைத்த சிவநேசன், வெகு நேரத் தயக்கத்துக்குப் பிறகு,''தேஜா! உனக்கு வருத்தம் தர இன்னொரு விஷயத்தையும் இப்ப நான் சொல்லித்தான் ஆகணும். ஆனா அதை எப்படி சொல்றதுன்னு தான் தெரியலை'' என்றார் இறுகிய முகத்துடன்.

அவள் ''என்ன அங்கிள்... சொல்லுங்க'' என்றபோது தொடர்ந்து வரப்போகும் அதிர்ச்சிகளால் தன் மனம் மரத்துப்போகப் போவது, அப்போது தெரியவில்லை.

மெதுவாக ஆரம்பித்தார் சிவநேசன். ''தேஜா! நீ தைரியமா இருக்கணும். உங்கப்பா உனக்கு மாப்பிள்ளையா முடிவு பண்ணியிருக்காரே அந்த சங்கர்... அவன் நடத்தையில ரொம்ப மோசமானவனாம்மா. அதோடு ட்ரக் அடிக்கிறான்னு வேற கேள்விப்பட்டேன்.

''அவங்க குடும்பமே ரொம்ப பணத்தாசை புடிச்ச குடும்பமாம். சங்கரோட அண்ணன் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பொண்ணு ஒரு ஏழைங்கறதாலே அதத் துரத்தி விட்டுட்டு பணக்காரப் பொண்ணாப் பாத்து கல்யாணம் பண்ணி வச்சிருக்கறதா வேற கேள்விப்பட்டேன்.

''இதெல்லாம் தெரிஞ்ச உடனே சதாகிட்டே சொல்லி இந்தக் கல்யாணத்தை எப்படியாவது நிறுத்திடணும்னு அவசரமா ஊரில் இருந்து கிளம்பி வந்தப்பதான், இங்கே இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்துடுச்சி. சங்கரோட அண்ணனால ஏமாத்தப்பட்ட பொண்ணு எங்க ஊரு தான்.

''அவங்க மூலமாகத்தான் எல்லாமே தெரிஞ்சது. இப்ப உன் கார்டியன்கிற முறையில, உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சித் தரவேண்டிய பொறுப்புல நான் இருக்கேன். அதனால தான் நான் இப்ப ஒரு முடிவெடுத்திருக்கேன்'' என்று பீடிகையுடன் முடித்தார். அதிர்ந்து போய் கேள்வியாய் நிமிர்ந்தவளிடம்,

''நான் அவங்களுக்கெல்லாம் ஒரு அதிர்ச்சி வைத்தியம் தரப்போறேன்'' என்று தன் திட்டத்தை அவர் கூறியபோது முதலில் மறுத்தாலும், பிறகு சம்மதித்தாள் தேஜா.

மறுநாள் படபூஜை முடிந்து எல்லோரும் சென்ற பிறகு, நெருங்கிய உறவினர்கள் சிலரும், அவளுக்கென நிச்சயிக்கப் பட்டிருக்கும் சங்கரும் அவன் குடும்பத்தினரும் மட்டுமே அங்கிருந்தனர்.

சிவநேசன் அவர்களிடம், ''நான் உங்ககிட்ட எல்லாம் முக்கியமான ஒரு விஷயத்தப் பத்திப் பேசத்தான் எல்லாரையும் இருக்கச் சொன்னேன்.



''சதாவுக்கு நான் நண்பன்னாலும் அவனோட வக்கீலும் நான்தான்னு உங்களுக்கெல்லாம் தெரியும். சதாவோட சொத்துக்கள்ல முக்கால்வாசி கடன்களுக்கு ஈடா போயிடுச்சி. தொழிலும் நஷ்டத்தில் நடந்து வரதாலே அது மேலயும் நிறைய கடன் இருக்கு. எனக்கு தெரிஞ்சு இந்த வீடு மட்டும் மிச்சமா இருக்கும்னு நான் நினைக்கிறேன். அவனோட கார்டியன்கிற முறையில இதை வித்து நல்லபடியா அவ கல்யாணத்தை நான் நடத்தி வைக்கிறேன்'' என்று அவர் தெரிவித்தபோது, ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

அதுவும், சங்கருடைய குடும்பத்தினர் அனைவரின் முகமும் பேயறைந்தாற் போல்...!

பிறகும் அங்கு கனத்த அமைதியே நிலவ, அன்று மாலை ஒவ்வொருவராக விடைபெற்றுச் சென்று விட, சிவநேசன் குடும்பத்தினரும், ராணி சித்தியும் மட்டுமே உடனிருந்தனர்.

மறுநாள் போன் செய்து பேசிய சங்கரின் அப்பா, தேஜாவின் அம்மாவும், அப்பாவும் இறந்ததை தாங்கள் ஒரு சகுனத்தடையாக நினைப்பதாகவும், சங்கருக்கு வெளிநாடு செல்ல அழைப்பு வந்திருப்பதால், நடந்து முடிந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்தி விடும்படியும், கூறியபோது தான் அவர்களின் சுயருபமே தெரிய வந்தது.

ஒரு கணம் நெஞ்சம் அதிர்ந்து போக பணம் என்ற ஒன்றை மட்டுமே பிரதானமாக மதிக்கும் மனிதர்களை நினைத்தால் உள்ளத்தின் அடி ஆழம்வரை கசந்தது.

மனதில், மனிதர்களின் மேலிருந்து நம்பிக்கை ஊற்றே வறண்டு போய்!

முன்பு சங்கரின் வீட்டினர் தரகரை விட்டு அலையாய் அலைந்தது. தன் அப்பாவிடம் இந்தத் திருமணத்தைப் பேசி முடித்தது. இன்று வேதனையுடன் கண் முன் விரிந்தது.

ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டத்திடமிருந்து தப்பி விட்டோமென்ற நிம்மதி மனதில் பரவினாலும், காயப்பட்ட மனதுக்கு ஆறுதலாக இல்லாமல் மூழ்கும் கப்பலில் இருந்து தப்பி ஓடும் எலிகளைப்போல் சிதறியவர்களின் நிஜம், வாழ்க்கையின் கோர முகத்தைப் புரியவைப்பதாய்! இருந்தது

மனிதத் தடங்களற்ற பூமிக்கு சென்று விடமாட்டோமா என்ற ஏகாந்த உணர்வு அவளுக்குள் எழுந்து இதயக்கடலில் துயர அலைகள் வேதனைய ய் ஒதுங்கின.

அதை சிவநேசனிடம் கூறி, இந்த ஊரை விட்டு வெகுதூரம் சென்று விட வேண்டுமென்று தான் விரும்புவதாக சொன்னபோது தான், அவர் தீபனின் குடும்பத்தைப் பற்றிக் கூறினார்.

''தேஜா.. என்னோட பிரெண்ட் ஒருத்தன் கோபிச்செட்டிப் பாளையத்துக்குப் பக்கத்துல பெரிய பண்ணையார். நிறைய நிலங்கள், பால் பண்ணை எல்லாம் இருக்கு! அவனோட பையன் தீபன் பி.டெக். முடிச்சிட்டு ஒரு டெக்ஸ்டைல் மில்லை நடத்துறான்.

''ரொம்ப பாரம்பரியம் உள்ள குடும்பம். உன்னை அருமையாகப் பாத்துப்பாங்க. தீபனுக்குத்தான் உன்னைப் பேசி முடிக்கலாமின்னு உங்கப்பாகிட்டே கேட்டேன். நீ சிட்டியில வளந்ததாலே உன்னை ஒரு கிராமத்துக்கு அனுப்ப அவருக்கு இஷ்டமில்லை.



''அப்புறம் தான் இந்த சங்கரோட வீட்டில் இருந்து வந்து பேசினாங்க. நிச்சயமும் முடிஞ்சது. ஆனா இப்பதான் அது முடிஞ்சி போச்சே. இப்ப நானே என் நண்பன்கிட்ட எல்லாம் பேசி முடிக்கிறேன் தேஜா'' என்றார் அவர்.



3

தேஜாவின் மனதுக்குள், அம்மா, அப்பாவைப் பற்றிய நினைவுகள் வேதனையுடன் சோகச் சதிராடின.

''வேண்டாம் அங்கிள்.. இப்ப எனக்கு ஒரு மாற்றம் வேணும்தான்! ஆனா அது கல்யாணமாதான் இருக்கணும்கிற அவசியமில்லை. வரவர எனக்கு மனுஷங்க மேல இருக்கற நம்பிக்கையே போயிடுச்சி!'' என்றாள்.

''தேஜா.. இப்பத் தான் உனக்கு ஒரு துணை கட்டாயம் வேணும்! ஏன்னா, மனசு நொந்து போயிருக்கும்போது, ஆதரவா சாஞ்சுக்கறதுக்கும், நம்ம சுமைகளைப் பகிர்ந்துக் கறதுக்கும் ஒருத்தர் வேணும்.''

''இல்லை அங்கிள்! ஏதாவது ஒரு வேலை இருந்தா வாங்கிக்குடுங்க. நான் யாருங்கறதே தெரியாத ஒரு இடத்துல. ஆனா அது இந்தச் சென்னையில இருந்து ரொம்ப தூரத்திலே இருக்கணும்! அப்புறமா மத்ததைப் பத்தி எல்லாம் யோசிக்கலாம்'' என்ற போது அவர் யோசனையுடன் சம்மதித்தார்.

''ஒரு மாசம் போகட்டும் தேஜா. அப்புறம் பாப்போம்'' என்று கூறி விட்டுக் கிளம்பினார்.

இழப்பின் கொடுமை புரிந்த ராணி சித்தியும் அவளைப் பூவாய்த் தாங்கினார். ஆனால் அவருக்கும் கணவர், குழந்தைகள் என்ற கடமைகள் அழைக்க, அவர் கிளம்பிச் செல்லும் நாளும் வந்தது.

அவளைத் தனியே விடாமல் தன் வீட்டுக்கே அழைத்துச் சென்று விட்டார் சிவநேசன். அவருடைய ஒரே பெண் கவிதாவும் திருமணம் முடிந்து அமெரிக்காவில் இருப்பதால், இருவருக்கும் அவள் துணை பெரும் இதமாய்...! இருந்தனை

அவளுடைய வீட்டிலிருந்த பொருட்களை எல்லாம் மாடியில் போட்டுப் பூட்டி விட்டு, கீழ்ப்பகுதியை அவர்களுடைய கம்பெனியின் கெஸ்ட் ஹவுசாக மாற்றி இருந்தார் சிவநேசன்.

கம்பெனியை சதானந்தனின் நண்பர் பொறுப்பேற்றுக் கொள்ள, காலம் மனப் புண்ணை ஆற்றும் என்பது உண்மை போல், நெஞ்சம் மெல்ல மெல்லத் தன் சோகத்தைத் தள்ளுபடி செய்ய ஆரம்பித்தது.

மனம் தனிமையுடன் கைகோர்க்கப் பழகிக் கொள்ள, போன வாரம் தான் இங்கு வேலைக்கு ஒருவர் தேவையென்பது தெரிந்தது.

அன்று மாலை அவள் தோட்டத்திலிருந்த போது அங்கு வந்த சிவநேசன், "தேஜா! நான் சொன்னேனே என் நண்பனைப் பத்தி... அவங்க வீட்டில இருந்த கணக்கப்பிள்ளை ஹார்ட் அட்டாக்கில இறந்துட்டாராம். சென்னிக்கும் இப்ப ஸ்ட்ரோக் வந்து முடியாம இருக்கான்...

"யாராவது நம்பிக்கையா ஒருத்தர் வேலைக்கு வேணும்னு கேட்டான். நீ. பி.காம் முடிச்சிட்டு கம்ப்யூட்டரும் படிச்சிருக்கறதாலே உன்னையே அனுப்பலாம்னு முடிவு பண்ணினேன். நீ என்னம்மா சொல்றே?" என்றார்.



சிறிது நேரம் யோசித்தவள், "சரி அங்கிள்.. நான் அங்க போய் வேலை செஞ்சு பாக்கறேன். ஆனா நான் யாருங்கற விபரம் எல்லாம் அவங்களுக்குத் தெரிய வேண்டாம்!" கூறும் போதே குரலில் காயப்பட்ட தடம் தெரிந்தது.

"இல்லைம்மா! நீ என் நண்பனோட பொண்ணு.. இப்ப நொடிச்சிப் போய் அப்பா அம்மாவையும் இழந்து நிக்கறேன்னு சங்கர்கிட்ட சொன்ன பொய்யத் தான் இங்கயும் சொல்லப் போறேன். அப்புறம் இன்னொரு நியூஸ்! தீபனுக்கும் இன்னும் பெண் அமையலையாம். எந்த வரன் வந்தாலும் தட்டிக்கழிச்சிட்டே இருக்கானாம்! அதனால பழகிப்பாரு.. அவனை உனக்குப் பிடிச்சிருந்தா பாப்போம்"

"எனக்கு. இப்ப கல்யாணம் குடும்பம் இதிலெல்லாம் சுத்தமா நம்பிக்கையே இல்லை.. அங்கிள் எனக்கு ஒரு ஆறு மாசம் டைம் கொடுங்க. அதுக்குள்ளே என்னால ஓரளவு அவங்களைப் பத்திக் கணிக்க முடியும்னு நினைக்கிறேன். இதப்பத்தி நாம அப்புறமா முடிவு பண்ணுவோமே!"

இருவரும் அன்று பேசி முடிவெடுத்தபடி, இப்போது அவள் தீபனின் வீட்டுக்கு வந்திருக்கிறாள்.

பழைய நினைவுகள், வீதியுலாவை முடித்து நிகழ் காலத்துக்குள் நுழைந்தன. இன்று மாலை நடந்த நிகழ்ச்சியில் மனம் மெல்லப் படர்ந்து, அவளுடைய இதழ்களில் சிறு முறுவலை வரவழைத்தது.

தீபன், முதல் அறிமுகத்திலேயே, தன் நேர் கொண்ட பார்வையால் தன் மனதைக் கொள்ளையடித்து விட்டானோ என்ற சிறு சந்தேகம் தோன்றி, இதயம் படபடத்தது.

மறுநாள் காலையில் எழுந்து ஜன்னல் வழியே பார்த்த போது, உயிர்த்தெழுந்த சித்திரமாய் கீழ்வானில் உதயமாகிக் கொண்டிருந்தான் சூரியன்!

பிறகு அவள் கீழே சென்ற போது, வரவேற்கும் விதமாய் கனிவுடன் புன்னகைத்த சென்னியப்பனைக் கண்டதும், மனதில் இனம் புரியாத ஒரு பாசம் சுரந்தது.

'குட்மார்னிங் சார்!' என்றபடி அருகில் சென்றவள், "நான் ஒன்னு சொன்னாத் தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?" என்றாள் தயக்கத்துடன்.

"என்னம்மா... சொல்லு! அதுக்கு முன்னால நான் ஒன்னு சொல்லணும்! நீ என்னை 'சார்'னு கூப்பிடறதை நிறுத்திட்டு, 'அங்கிள்'னு கூப்பிட்டா, நானும் நீ என்ன சொன்னாலும் தப்பாவே நினைச்சிக்க மாட்டேன்"

"ம்... சரி சார்! சாரி.. அங்கிள்! டவுன்லே இருந்து யாராவது ஒரு 'பிஸியோ தெரபிஸ்ட்ட' வரவழைச்சி எக்சர்சைஸ் பண்ணினீங்கன்னா, சீக்கிரமாவே, நல்ல ரிசல்ட் கிடைக்கும். அது மாதிரி செய்யலாமே!"

"தீபன் கூட சொன்னான். நான் தான் நம்ம ஆயில் மஜாஜில வராததான்னு அலட்சியமா விட்டுட்டேன். பாப்போம்மா" என்றார் யோசனையுடன்.

"நீங்க அட்மிட் ஆகியிருந்த ஹாஸ்பிடல் போன் நம்பர் இருந்தாக் குடுங்க அங்கிள். நான் விசாரிச்சிப் பாக்கறேன்." தேஜா ஆர்வத்துடன் கேட்டாள்.

தன் அறையிலிருந்த பைலை எடுத்து வரும்படி சன்னாசியிடம் கூறியவரின் முகத்தில், சிறு வருத்தம் தோய்ந்த புன்னகை!



அந்த நம்பரைக் குறித்துக்கொண்டவள் உடனே அங்கு போன் செய்து விசாரித்த போது தினமும் வந்து பயிற்சியளிக்க அவர்கள் கேட்ட தொகை அதிகமாகத் தோன்றியது.

வீட்டினரிடம் கேட்டு விட்டுப் பிறகு கூறுவதாகச் சொல்லி போனை வைத்து விட்டுப் பின்புறம் வந்த போது, சென்னியப்பனுக்கு மசாஜ் செய்து கொண்டிருந்தான் அந்தப் பண்ணையாள்.

"அங்கிள்! நான் விசாரிச்சிட்டேன். பீஸ் தான் கொஞ்சம் அதிகமாகத் தெரியுது! நீங்க சரின்னு சொன்னா நாளைக்கே அனுப்பறோம்னு சொன்னாங்க!" என்று அவர்கள் கேட்ட தொகையைக் கூறினாள்.

ஒரு நிமிடம் யோசித்தவர், "பரவாயில்லை.. நாளையில இருந்து வரச்சொல்லிடும்மா" என்ற போது அவள் மனதில் ஒரு நிம்மதிப் பெருமூச்சு! அந்த நிறைவுடனே சென்று வேலையிலாழ்ந்த போது, மனம் சுலபமாய் அதில் ஒன்றியது.

அன்று மாலை வேலையை முடித்து எழுந்த போது, அன்றைய தினசரிப் பேப்பர் கண்களில் பட எடுத்துப் பிரித்த போது முதல் பக்கத்திலேயே போடப்பட்டிருந்த செய்தி, நெஞ்சை முள்ளாய்க் கீறி வலிக்கச் செய்து.

சுனாமியால் இறந்த குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்க முன் வந்திருக்கும் நல்லிதயங்களைப் பற்றி படித்த போது, சிறு மகிழ்ச்சி எழுந்தாலும், வேதனையும் அழுகையும் போட்டி போட்டுக்கொண்டு வந்தன.

கண்ணீர் எழுத்துக்களை மறைக்க, நினைவுகள் எங்கோ சென்று மறுகின.

அப்போது உள்ளே வந்த தீபன், அவளை இருமுறை அழைத்தும் பதில் கூறாமல் அவள் அமர்ந்திருந்ததால், ஒரு கணம் பொறுமை இழந்தான்.

முகத்துக்கு முன் சொடக்குப்போட்டபடி, ''மிஸ். தேஜஸ்வினி'' இடியாய் வந்த அவன் குரலில் உள்ளம் பதறி விழிக்க, பதட்டத்துடன் எழுந்து நின்றவளின் கையிலிருந்த பேப்பர்கள் தரையில் சிதறின.

''என்ன... எத்தனை தடவை கூப்பிட்டாலும் என்னென்னு கூடக் கேக்க முடியாம அப்படி என்ன கனவு கண்டுட்டு இருக்கே? ஓ! காதல் தோல்வியா... பாத்தும்மா! அப்புறம் உன் காதலன் திரும்பி வந்து கூப்பிட்டவுடனே பாதியில வேலையை விட்டுட்டுப் போயிடாதே!'' அவன் குரலில் தெரிந்த ஏளனமும், குத்தலும் மனதைக் கூறு போட்டன.

கண்ணீரில் பளபளத்த விழிகளுடன் நிமிர்ந்த தேஜாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. வேகமாக ஒரு விம்மலுடன் மாடிக்குச் சென்று விட்டாள்.

அவளையே தொடர்ந்த தீபனின் உதடுகள் ஏளனமாக வளைந்தாலும் மனதிற்குள் ஒரு விதக் கோபமும் சஞ்சலமும் திடீரென்று நிலைபெற்றது மட்டும் ஏனென்று அவனுக்கு விளங்கவில்லை.

தன் அறைக்குள் சென்ற தேஜாவுக்கு பழைய நினைவுகள் ஊற்றாய்ப் பெருக, மன ஊஞ்சல் மெல்ல ஆட ஆரம்பித்தது.



# 4

அந்த டிசம்பர் இருபத்தைந்தாம் தேதி காலையில் தேஜாவின் அம்மாவும், அப்பாவும் அவளிடம் விடைபெற்று உற்சாகமாய் கிளம்பிய அந்த நிமிடம் இன்று நடந்தது போல்...! இருந்தது

சென்னையிலிருந்து வேனில் கிளம்பியவர்கள், தங்கள் சொந்த ஊருக்குச் சென்று அங்கிருந்த உறவினர்களையும் வேளாங்கண்ணிக்கு அழைத்துச் செல்வதாக முடிவு செய்திருந்தனர்.

கம்ப்யூட்டர் கோர்ஸில் மறுநாள் முக்கியமான பரீட்சை இருந்ததால், தேஜா அவர்களுடன் செல்லவில்லை.

அதைத் தொடர்ந்து, பலரைப் பலி வாங்கிய சோக தினமான மறுநாளும் நினைவில் தடம்பதித்து மனதை உலுக்கியது.

வேளாங்கண்ணியில் செய்ய வேண்டியிருந்த ஒரு நேர்த்திக்கடனை முடிப்பதற்காக சதானந்தனும், சுபத்ராவும் கிளம்பி சென்ற அன்று தான், இருவரையும் அவள் கடைசியாகப் பார்த்தது!

அந்த இறுதி விடைபெறுதல் உள்ளத்தை உருக்கி, உயிரைப் பதறச் செய்து, இன்றும் கண்களில் நீர்கோர்க்கச் செய்தது.

டிசம்பர் இருபத்தியாறாம் தேதி காலையில் மகளிடம் போன் செய்து பேசிவிட்டு சர்ச்சுக்கு செல்வதற்கு முன் கடலலையில் சுகமாய் கால்களை நனைக்கலாமென்று சென்ற இருவரையும், நுரைப்பூக்களைப் பரப்பி அன்புடன் வரவேற்ற அந்தக் கடலே எமனாகி விழுங்கிய கொடூரம், இன்று நடந்தது போல் நெஞ்சைப் பதறச் செய்தது.

அன்று மட்டும் கடலன்னையின் கரங்கள் மனித உயிர்களுக்குத் தூண்டில் போட்டுக் காத்திருந்ததை, பாவம் எவருமே அறியவில்லை.

விடியலில் நடந்த கொடூர வெறியாட்டத்தில், கடல் பல இறுதித் துயிலிடங்களை தன் கரையிலேயே அறிமுகப்படுத்தி, மனித விதைகளை மண்ணில் விதைத்திருந்தது.

கடலென்றால் எப்போதுமே மகிழ்ச்சியுறும் மனது, அன்று கர்ப்பம் வரை கலங்கியது.

மறுநாள், முகம் தெரியாமல் வெள்ளைத்துணியால் செய்த மூட்டையாய் இருவரும் திரும்பி வீடு வந்த போது, ஏதோ ஒன்று அவளுக்குள் வெடித்துச் சிதற மூர்ச்சையானாள், தேஜா.

வேனில் சென்ற அனைவருமே இறந்து போயிருக்க, பற்றுக்கோடின்றி ஒரே நாளில் இருந்த நெருங்கிய சொந்தங்களை எல்லாம் இழந்தது மனதை உலுக்கி ரணமாக்கி விட, தேற்றுவதற்கு யாருமின்றித் தனித்து நின்றாள் அவள்.

அப்போது அன்புடன் அவளை அரவணைத்துத் துயர் துடைத்து அருமையாய் பார்த்துக் கொண்டது. சிவநேசன் குடும்பமும், சித்தியும், நண்பர்களும் மட்டுமே.

சங்கரின் குடும்பத்தினர் எல்லாக் காரியங்களிலும் பங்கேற்றாலும் அவர்களிடம் ஏதோ ஒரு விலகல் தன்மை தெரிந்த தென்னவோ உண்மை!

பிறகு, மின்சார இடுகாட்டுக்குச் சென்று, அவளே தன் தாய், தந்தையருக்கு எல்லாக் காரியமும் செய்து முடிக்க, இருவரும் ஒரு குவளை சாம்பலாகியது. இன்று நினைத்தாலும், இதயத்தைக் கீறி வலிக்கச் செய்வதாய்...! இருந்தது



இது எதையுமே அறியாமல் தீபன் அவளை என்னவெல்லாம் கூறி விட்டான்? தாய்ப்பறவையின் அரவணைப்புக்காக ஏங்கித் தவிக்கும் சிறு பிஞ்சுப் பறவையின் நிலையிலிருந்தாள் தேஜா.

நினைவுகள் உடலையும், மனதையும் சோர்வுறச் செய்ய ஓய்ந்து போய் படுத்திருந்தவளின் விழிகளில், கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தது.

வெகு நேரம் கழித்து எழுந்து முகத்தைக் கழுவித் துடைத்தபடி ஜன்னலருகில் சென்ற போது, வானமும் சோகமாய் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தது.

தென்னந்தோப்பிற்கு முன்பாக சிறிது தூரத்தில் தெரிந்த ஒரு ஒட்டு வீட்டிலிருந்து ஒலித்த பாடல் சூழ்நிலையை இதமாக்குவது போல்...!

***''அந்தி மழை பொழிகிறது..***
***ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது!''***

என்ற வரிகள் மனதிற்குள் நுழைந்து ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தின. கண் தெரியாத ஒருவரின் இதயத்து வெளிப்பாடாய் அமைந்த அந்தப் பாடலின் பொருள், கேள்வியாய் உட்புகுந்தது.

''என் மேல் விழுகின்ற ஒவ்வொரு துளியிலும், உன் முகத்தை தரிசிக்கிறேன். உன் தீண்டலை உணர்கிறேன். சக்கரவாகப் பறவையாய் உன் நினைவுத்துளிகளை மழையாய் அருந்துகிறேன்'' என்ற அர்த்தத்தில் இருக்குமோ என்ற எண்ணமே, மனதை திசை திருப்பி இசையில் ஆட்படுத்தியது.

அப்போது அந்த ஓட்டு வீட்டிலிருந்து வெளியில் வந்து, அவளைப் போலவே மழையை ரசிக்க ஆரம்பித்த ஒரு பெண் பார்வையில் பட்டாள்.

ஓட்டிலிருந்து வழிந்து ஜலதரங்கமாய் பரவித் தெறித்த நீரைக் கையில் ஏந்தி மகிழ்ச்சியுடன் வெகுளியாய் புன்னகைத்தபோது, மனம் இதமாகி விட பதிலுக்கு கையசைத்து முறுவலித்தாள் அவள்.

கடந்து சென்ற நாட்கள் கனவாய்த் தோன்ற, நிஜங்களின் நிதர்சனத்தில் மனம் படர்ந்து விட, கீழே சென்ற போது சென்னியப்பன் அவளுக்காகக் காத்திருந்தார்.

''தேஜா.. நாளையில இருந்து அந்த டாக்டரை வரச் சொல்லிட்டியாம்மா? தீபன் கிட்டயும் நான் சொல்லிட்டேன்'' என்றார்.

''மதியமே நான் போன்ல பேசிட்டேன் அங்கிள். நாளைக்குக் காலையில ஏழு மணிக்கெல்லாம் அனுப்பறதா சொன்னாங்க. உங்ககிட்ட சொல்லலாம்னு வந்தப்ப நீங்க ரெஸ்ட் எடுத்திட்டிருந்தீங்க'' புன்னகையுடன் கூறினாள்.

அப்போது அங்கு வந்த தீபனின் முகத்தில் கோபம் கலந்த யோசனை தெரிந்தது.

அவளையே ஓரக்கண்ணால் பார்த்தபடி ''நான் சொன்னப்ப எல்லாம் பிசியோதெரபிஸ்ட் வேணாம்னு பிடிவாதம் பிடிச்சீங்க. இப்ப யாரோ வந்து சொன்னா உடனே சரிங்கறீங்க. ம்.. எப்படியோ உங்களுக்கு குணமானா சரி தான்!'' என்று கூறி விட்டு வேகமாக உள்ளே சென்று விட்டான்.



தான் இங்கு வந்ததே ஒரு வேளை அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்ற எண்ணம் தோன்றி இனம் புரியாத சோர்வு வந்தது அவள் மனதில்.

மறுநாள் காலையில் சீக்கிரமே எழுந்து வாக்கிங் சென்ற போது, அந்த ஓட்டு வீட்டின் வாசலில் நின்றிருந்த அந்தப் பெண் தேஜாவைக் கண்டவுடன் புன்னகையுடன் நலம் விசாரித்தாள்.

''வாங்க.. நீங்க தான் புதுசா வந்திருக்கிற மேனேஜரம்மா வாமே. எங்க வீட்டுக்காரரு சொன்னாரு! அவரு தான் தீபன் சாரோட மில்லுல சூப்பர்வைசரா வேலை பார்க்கிறாரு. உள்ளே வாங்க'' என்றாள்.

எப்படி மறுப்பது என்று புரியாத நிலையில் தயக்கத்துடன் உள்ளே சென்ற போது, வீடு சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருப்பதைக் கண்டாள், அவள்.

ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டவுடன் அமர்ந்தவள், ''பசங்க எங்கே? தூங்கறாங்களா...'' என்றாள் ஆவலுடன்.

உடனே அந்தப் பெண்ணின் முகம் பெரும் சோகத்தை தத்தெடுத்து. ''இல்லை.. எங்களுக்கு குழந்தை இல்லை'' என்றாள் மெதுவாக.

''ஓ... சாரி! கவலைப்படாதீங்க. குழந்தை இருக்கறவங்களுக்கு அது மட்டும் தான்! இல்லாதவங்களுக்கு மனசுல சுமக்க நிறையக் குழந்தைங்க. கவலைப்படாதீங்க'' ஆறுதலாய்க் கூறினாள்.

முகத்தில் இனம் புரியாத சோகமிருந்தாலும், ''ஒரு நிமிஷம் இருங்க. இப்ப வந்திடறேன்'' என்றபடி உள்ளே சென்றாள் அந்தப் பெண்.

திரும்பி வந்த போது அவள் கையில் ஆவி பறக்கும் காபி இருந்தது.

"எடுத்துக்கங்கம்மா" என்று நீட்டியபோது, "நான் காபி குடிக்கறேன். ஆனா ஒரு கண்டிஷன்! நீங்க இனிமே என்னைத் தேஜான்னு தான் கூப்பிடணும். நிச்சயம் நான் உங்களை விட வயசுல சின்னவளாத்தான் இருப்பேன்" என்றாள் தேஜா.

அந்தப்பெண் கூச்சப் புன்னகையுடன் தலையசைத்து விட்டு "நீங்களும் என்னை வள்ளின்னே கூப்பிடலாம்" என்றாள்.

பிறகு பொதுவாய்ப் பேசி விட்டு வள்ளியிடம் விடை பெற்றுக் கிளம்பிய போது, ஒரு புதிய தோழி கிடைத்த நிறைவும், சந்தோஷமும் அன்று முழுவதும் இதமாய்க் கை கோர்த்திருந்தன.

எந்தப் பிரச்சினைகளிலிருந்தும் சுலபமாய் விடுபடும் மனதைத் தனக்கு அளித்ததற்காக இறைவனிடம் நன்றி கூறினாள் தேஜா.

## 5

**கா**லம், ஒரு நதியின் வேகச் சுழிப்புடன் செல்ல, பிறகு வந்த நாட்களில், டாக்டர் தினமும் வந்து பிசியோதெரபி செய்ததில், சென்னியப்பனிடம் நல்ல மாற்றம் தெரிந்தது.

வள்ளிக்கும், அவளுக்குமிடையே மெல்லிய இழையோடலுடன் ஆரம்பித்த நட்பு, இப்போது நெருக்கமாகி இருந்தது.

கந்தனையும், வள்ளியையும் பார்க்கும் போது அவளுக்கு மிகவும் பெருமையாக இருக்கும்.



எல்லாவற்றிற்கும், திருப்தியைத் தத்தெடுக்கும் மனம் மட்டுமே காரணமென்று புரிந்து, பக்குவப்பட ஆரம்பித்தது, தேஜாவின் மனது!

இப்போதெல்லாம் தீபனை அவளால் அடிக்கடி பார்க்க முடிவதில்லை. ஏனோ அவனைப் பார்க்க முடியவில்லையே என்ற உணர்வு சிறு கீற்றாய் அவளுக்குள் ஏமாற்றத்தை வரவழைப்பதாய்...! திருந்தன

அவன் அலுவலக அறையில் கணக்குப் பார்க்கும் போது கிளம்பி விடுபவன், மாலையில் தான் திரும்பி வருவான். சாப்பாடும் மில்லுக்கே சென்று விட, மாலையில் வந்தாலும், பிறகு நண்பர்களைப் பார்க்க வெளியில் சென்று விடுவதால், அவனைப் பற்றி எதுவுமே கணிக்க முடியவில்லை.

ஒரு நாள் மாலை, தன் வேலையில் அவள் ஆழ்ந்திருந்த போது, திடீரென்று ஒரு கோபக்குரல் அவளைக் கலைத்தது.

"ஏய்.. என்ன கொஞ்சம் இடம் கொடுத்தா ரொம்பத்தான் ஆட்டம் போடறே? இந்த வீட்டில நீ இல்லாதப்ப எதுவுமே நடக்கலையா என்ன? நீ வந்தப்புறம் தான் என்னவோ பெரிசா எல்லாத்தையும் மாத்தின மாதிரி, அப்பா ரொம்பத்தான் புகழ் பாடறாரு! உன் செயல்களை எல்லாம் ஒரு லிமிட்டோட நிறுத்திக்க!" என்று சீறி விட்டு தீபன் வேகமாக வெளியில் செல்ல அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

படபடத்துடன் வெலவெலத்துப் போய் நின்றிருந்தவளுக்கு தான் என்ன தவறு செய்தோம் என்பதே முதலில் புரியவில்லை என்றாலும், பிறகு அவன் பேசியதன் அர்த்தம் விளங்கியது.

தன்னை, அவனுடைய அப்பா புகழ்ந்து பேசியது பிடிக்காததால் தான் கோபப்படுகிறான் என்பது புரிந்ததும், உடனே நிம்மதியைத் தொலைத்தது அவள் நெஞ்சம்!

மனதை வேறு எதிலாவது செலுத்த விரும்பி, வள்ளியின் வீட்டிற்குச் சென்ற போது. அங்கு வாசல் வராந்தாவில் இரண்டு பெண்களுக்கு அவள் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன வள்ளி.. டீச்சராயிட்டீங்க போலருக்கு!'' என்றபடி இயல்பாக அவளருகில் அமர்ந்தபோது ''ஒரு நிமிஷம் இருங்க தேஜா. நாற்காலி எடுத்துட்டு வரேன். தரையில உக்கார வேணாம்'' பதறி எழுந்தாள் வள்ளி.

தேஜா அவளுடைய கையைப் பிடித்துத் தடுத்து.''எனக்கு இதுதான் வசதியா இருக்கு. ஆமாம்... எத்தனை நாளா இந்த ட்யூஷன் எல்லாம் நடக்குது?'' புன்னகையுடன் வினவினாள்.

கூச்சத்துடன் நிமிர்ந்த வள்ளி, ''நான் கல்யாணம் முடிஞ்சு இங்க வந்த மறுநாளில இருந்து! நான் பத்தாவது படிச்சிருக்கேன். இவங்க பாவம் ஏழைப்பசங்க! ஏதோ எனக்குத் தெரிஞ்ச தமிழ். கணக்கு எல்லாம் சொல்லித்தரேன்'' என்றாள்.

உடனே அவள் மனதிலும் ஒரு யோசனை வர, ''நானும் சொல்லித்தரலாமா வள்ளி? போரடிச்சிட்டு சும்மா உக்காந்திருக்கறதை விட உபயோகமா ஏதாவது செய்யணும்னு நானே நினைச்சிட்டு இருந்தேன்!'' என்றாள் ஆர்வத்துடன்.

''நிஜமாவா? உங்களுக்குப் பெரிய வீட்டில வேலை இருக்குமே''

''ம்ஹூம்.. சாயந்திரம் ஆறு மணிக்கு மேல ஒரு வேலையும் கிடையாது. நாளையிலிருந்து நானும் வரேன். ஹாய் ஸ்டூடண்ட்ஸ்! உங்க கூடப் படிக்கிற பசங்ககிட்ட எல்லாம் சொல்லுங்க. பணம் எதுவும் குடுக்க வேணாம்னு சொல்லி



அழைச்சிட்டு வாங்க! எல்லாப் பாடத்தையும் நானும் வள்ளியும் சேர்ந்து சொல்லித்தரோம். என்ன?'' என்ற போது இருபெண்களும் மகிழ்ச்சியுடன் தலையசைத்தனர்.

மனம் லேசாகி விட, வள்ளியின் வேலைக்குத் தொந்தரவு தர மனமில்லாமல் உடனே கிளம்பியவளுக்கு, இதைப் பற்றி உடனே சென்னியப்பனிடம் சொல்லி விட வேண்டுமென்று தோன்றியது.

காலார நடந்து விட்டு வீட்டுக்குச் சென்ற போது, முன் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார், அவர்.

அவரிடம், ''அங்கிள்.. இங்க நான் ஈவினிங்ல சும்மா தானே இருக்கேன். பின்னாடி வள்ளி வீட்டில சின்னப் பசங்களுக்கெல்லாம் பாடம் சொல்லித்தரலாமின்னு இருக்கேன்! உங்களுக்கு ஒண்ணும் இதிலே ஆட்சேபனை இல்லையே?'' என்றாள் தயக்கத்துடன்.

புன்னகையுடன் நிமிர்ந்தவர், ''ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா! இந்த வயசில மத்தவங்களுக்கு உதவி செய்யணும்னு நினைக்கிறே பாரு. உன்னோட இந்த குணம் தான் எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு'' என்று பாராட்டினார்

''தேங்க்யூ அங்கிள்'' என்றவள் மாடிக்குச் சென்ற போது, தீபன் இதற்கு என்ன சொல்லப் போகிறானோ என்ற பயமும் உள்ளே கிளர்ந்தது.

வாக்மேனில், தனக்குப் பிடித்த மென்மையான பாடல்களைக் கேட்டதில் நேரம் போனதே தெரியாமல் அமர்ந்திருந்த போது, அவளின் கவனம் கடிகாரத்திடம் செல்ல, மணி எட்டரையாகிவிட்டது தெரிந்தது.

வேகமாகக் கீழே இறங்கிச் சென்ற போது, தீபனும், சென்னியப்பனும் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருக்க அவளைக் கண்டதும் பெரியவர் புன்னகையுடன் சாப்பிட அழைத்தார்.

எப்போதும் சாப்பாட்டு மேஜையில் தன் தந்தையிடம் மில்லில் நடந்த விஷயங்களைப் பகிர்ந்து கொள்பவள், நேற்றும் இதுபோலவே முகச் சுளிப்புடனிருந்தது நினைவு வர, என்ன பிரச்சனையாக இருக்குமென்ற ஆராய்ச்சியில் இறங்கியது அவள் மனது.

பிறகு அவள் தோட்டத்திற்கு சென்று வெளிக்காற்றை சுவாசிக்க விரும்பி நடந்தபோது தான், கால்போன போக்கில் பின்புறமிருந்த அந்தப் பெரிய கிணற்றின் அருகில் வந்து விட்டிருந்தாள்.

அன்று பவுர்ணமி என்பதால், நிலவின் மஞ்சள் கிரணங்கள் அந்த இடம் முழுவதும் தங்கச் சாயத்தைப் பூசி இருந்தன.

இரவின் குளிர்ச்சியையும், மரங்களின் சுவாசச் சீறலையும் ரசித்துக் கொண்டே கிணற்றுக்குள் எட்டிப் பார்த்த போது உள்ளே சிறை வைக்கப்பட்டு இருந்த முழு நிலவை உடனே விடுவிக்க மனம் விழைந்தது.

உடனே அந்த நிலவிடம், "நீயும் என்னை மாதிரியே ஒரு அநாதையா? இங்கே யார் உன்னை சிறைப்பிடித்து வைத்தது? எந்த ராஜகுமாரன் வந்து உன்னை சிறை மீட்டு, சந்தோஷங் களை எல்லாம் பரிசாக் கொடுத்து திரும்பவும் வானத்துக்கே அழைச்சிட்டுப்போகப் போறான். ம்.. பதில் சொல்ல மாட்டியா?" மெல்லிய குரலில் ஒரு தோழியிடம் பேசுவது



போல் அவள் முணுமுணுத்த போது, திடீரென்று அருகிலிருந்த செடியினருகே ஏதோ ஒரு அசைவு!

திடுக்கிட்டுத் திரும்பிய போது, அங்கு தீபனின் உருவம் முதலில் நிழலுருவாய்த் தெரிந்து, பிறகு வெளிச்சத்துக்கு வந்தது.

"என்ன.. பைத்தியம் முத்திடுச்சா? அப்பாவுக்கு டாக்டர் ஏற்பாடு பண்றதெல்லாம் இருக்கட்டும்! தனியா உக்காந்து முழிச்சிட்டே பகல் கனவு காண்றது.. தனக்குத் தானே தோட்டத்தில் நின்னு பேசறது..இதெல்லாம் சரி பண்ணனும்னா, முதல்லே நீ ஒரு டாக்டர்கிட்டப் போகணும். பௌர்ணமியானாலே, உன்னை மாதிரி ஆளுங்கள்லாம் கொஞ்சம் ஓவராத்தான் ரியாக்ட் பண்ணுவாங்கன்றது சரிதான் போலருக்கு!" தனித்த குரலில் ஏளனத்துடன் கூறிவிட்டு, தோளைக் குலுக்கியபடி அங்கிருந்து செல்ல ஆரம்பித்தான்.

தேஜஸ்வினியின் மனதில் கோபம் கரை உடைத்தது.

"மிஸ்டர் தீபன்.. இங்க யாரும் பைத்தியம் இல்லை! இயல்பான ரசனையோட சில நேரம் இயற்கையில் ஒன்றிப் போய், அதோட தன் எண்ணங்களைப் பகிர்ந்துக்கறது, ஒரு இனிமையான விஷயம். அதெல்லாம் ரசனையில்லாதவங் களுக்குப் புரியாது தான். சாரி! அத நான் உங்ககிட்ட எதிர்பார்த்தது தப்பு தான்!" என்றபடி, வேகமாகத் திரும்பி உள்ளே சென்று விட்டாள்.

அவள் போவதை பார்த்துக் கொண்டிருந்தவனுடைய முகத்தில், சிறு ஆராய்ச்சியுடன் கலந்த கோபம் மெதுவாய் எட்டிப் பார்த்தது.

தலையைக் குலுக்கிக் கொண்டு எதிர்ப்புறம் செல்ல ஆரம்பித்தான் தீபன்.

மறுநாள் காலையில் கீழே வந்த போது சென்னியப்பனும், தீபனும் ஏதோ முக்கியமாக பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட தேஜா, ''குட்மார்னிங் அங்கிள்'' என்று கூறிவிட்டு அலுவலக அறைக்குச் செல்லத் திரும்பினாள்.

''ஒரு நிமிஷம்மா தேஜா!'' என்று தீபனிடம் திரும்பி, ''தீபன்! நம்ம ஊரில இருக்கற ஏழைப் பசங்களுக்கு இலவசமா இன்னியிலேருந்து பாடம் நடத்தப் போறாப்பா தேஜா. பரவாயில்லம்மா நீ வந்ததில இருந்து இங்கே நல்ல விஷயமாத்தான் எல்லாம் நடக்குது! பாரு.. எனக்கும் இப்ப எவ்வளவோ பரவாயில்லை! கம்ப்யூட்டர்ல எல்லாக் கணக்கையும் கரெக்டா சரிபார்த்து வச்சிடறே! நம்ம சிவாவோட கணக்கு எப்பவுமே தப்பாகப் போகாது. இல்லை தீபன்!'' என்று பாராட்டி விட்டு, அவளையும் துணைக் கழைத்தார்.

உடனே முகம் இறுகிவிட, விழிகளில் எந்த உணர்ச்சியு மின்றி ஒரு கணம் அவளையே ஊடுருவியவன், பதிலாக ஏதும் கூறாமல் மௌனமாக அமர்ந்து இருந்தான்.

அவனுடைய தோற்றம், மனதினுள் ஒரு நெருடலை ஏற்படுத்த, வேகமாக அங்கிருந்து அகன்ற தேஜா, கம்ப்யூட்டரில் ஆழ்ந்திருந்த போது, உள்ளே வந்த தீபனை அவள் கவனிக்கவில்லை.

அவளருகில் வந்தவுடன், தொண்டையைச் செருமிய போது தான், மானிட்டரிலிருந்து தன் விழிகளை விலக்கி



நிமிர்ந்தவளுக்கு அவன் சீற்றத்துடன் எதிரில் நிற்பது தெரிந்தது.

மனதில் சஞ்சலத்துடன் மெல்ல எழுந்த போது, அலட்சியமாகக் கை நீட்டி அவளை அமரும்படி சைகை செய்தவனின் உதடுகள் ஏளனமாக வளைந்தன.

''என்ன.. வந்தவுடனே உன்னை ரொம்ப நல்லவளாகக் காண்பிக்கறதுக்கு என்னென்ன நாடகம் போடணுமோ, அதை எல்லாம் ஆரம்பிச்சாச்சு போலருக்கு...ம்! பாவம் அப்பா, வயசாயிருச்சா அவருக்கு.. இந்த சூழ்ச்சி எல்லாம் புரியாது!'' என்றான் குத்தலான குரலில்.




தேஜா அதை மறுப்பதற்கு வாயெடுக்கும் போதே, அவளைத் தடுத்தவன் ''என்னவோ இந்த ஊரில் இருக்கற பசங்களை எல்லாம் நீதான் மகாத்மாக்களா மாத்தப் போற மாதிரி அப்பா பேசறாரு.. ஹூம்'' என்றான் ஏளனமான குரலில்.

ஒரு கணம் கண்களை இறுக மூடித்திறந்தவள்,''சார்.. என்னால மகாத்மாக்களை உருவாக்க முடியாமப் போகலாம். ஆனா.. படிப்பு மட்டும்னு இல்லாம நல்ல பண்புகளையும் சொல்லித்தந்தா, நிச்சயமா ஒரு நல்ல மனிதனை உருவாக்கி அவன் கோட்சே ஆகாமத் தடுக்க முடியும். இல்லையா?'' என்றாள் அவளும் விடாமல்.

''அப்படியா? பாப்போம்!'' என்றபடி அலட்சியமாகத் தோளைக் குலுக்கியவன், கண்களில் சினத்துடன் வேகமாக

வெளியில் சென்ற போது பெரும் ஆயாசம் வந்தது அவளுக்குள்.

கூடவே, மனதில் இனம் புரியாத சந்தோஷமும் கை கோர்த்தது. பொதுவாகவே, அழகிய பெண்களைக் கண்டால் சலனப்பட்டு நிற்கும் ஆண்களுக்கு நடுவே அவன் கோபமும் இறுக்கமும் வித்தியாசமாக அவனை வேறுபடுத்தி உயர்த்திக் காட்டின.

பிறகும் கோபப் பார்வைகளுடனும் புரிந்து கொள்ள மனமில்லாத தன்மையுடனும், தீபன் மாறாமலே இருக்க இரண்டு மாதங்கள் வேகமாய் சிறகு விரித்துச் சென்றன.

இப்போது சென்னியப்பன் வாக்கிங் ஸ்டிக்கின் உதவியுடன் நடக்க ஆரம்பித்திருந்தார்.

தேஜா, திறமையுடன் கணக்குப் பார்ப்பதில் அவருக்கு மிகவும் பெருமை. தன்னைப் பார்க்க வருபவர்களிடம் 'எல்லாம் தேஜாவால் தான்' என்று அவர் புகழும்போது அவளுக்கு மிகவும் தர்மசங்கடமாக இருக்கும்.

அதுவும் தீபன் இருந்தால் அவ்வளவு தான். அந்த இடத்தை விட்டு உடனே அகன்று சென்று விடுவாள் அவள். இப்போதெல்லாம் மாலைப் பொழுதுகள் இனிமையாகக் ழிய ஆரம்பித்திருந்தன.

வள்ளியின் வீட்டிற்கு இருபது பிள்ளைகளுக்கும் மேல் டிப்பதற்காக வந்து செல்ல அவர்கள் இருவருமாக சேர்ந்து டம் எடுக்க ஆரம்பித்திருந்தனர்.

ஞாயிறன்று அபூர்வமாக வீட்டிலிருக்கும் தீபனின் பார்வை னல் வழியே எப்போதாவது இந்தக் காட்சியை சிப்பார்க்கும். சில நாட்களாக அவனுடைய தூரத்துப்



பார்வைகள் கூட அவளிடம் ஏதோ ஒரு தவிப்பை ஏற்படுத்த ஆரம்பித்திருந்தன.

தன் மனம் என்ன எண்ணுகிறதென்றே அவளால் உணர முடியாமல், ஒருவித சஞ்சலம் அவளை ஆட்படுத்தியிருந்தது. தன்னை நிலைப்படுத்தியபடி பாடங்களில் கவனத்தை செலுத்த மற்றதெல்லாம் சிறிது நேரத்தில் மறந்து போனது.

சென்னியப்பனிடம் நல்ல பெயரெடுத்து விட்டாலும், தீபன் அவளை ஒரு எதிரி போல் பாவிப்பது புரிய அவன் மனதிலும் ஒரு நல்ல இடத்தைப் பெற்று விட வேண்டும் என்று மனம் விழைந்தது.

சென்னியப்பன், அவளை வாரத்தில் ஒரு நாள் விடுமுறை எடுத்துக் கொள்ளும்படி கூறி இருந்ததால் இப்போதெல்லாம் வியாழக்கிழமையன்று ஓய்வெடுக்க ஆரம்பித்திருந்தாள் தேஜா.

அந்த வியாழனன்று அதிகாலையிலே எழுந்தவள், தலை குளித்து கூந்தலை உலர வைப்பதற்காக விரித்து விட்டபடி மெதுவாக நடக்க ஆரம்பித்தாள்.

ஊரை சுற்றி வந்த போது வயல்களும் மரங்களும் மனதைப் பசுமையாக்கி விட, வழியில் சரக்கொன்றை மரத்தில் இருந்து உதிர்ந்திருந்த மலர்கள், பூமியில் மஞ்சளாக தங்கப்பாய் விரித்திருந்ததைக் கண்டாள்.

அதை ரசித்தபடி பூக்கள் மிதி படாமல் சுற்றிக் கொண்டு சென்றவளை, வியப்புடன் கூர்ந்தன இரு விழிகள்.

அன்று விடிகாலையில் எழுந்து வாக்கிங் சென்று கொண்டிருந்த தீபனுக்கு எதிரில் நல்ல உயரமாய் கோதுமை நிறத்தில் இளமையின் இலக்கணத்துடன் செதுக்கிய சிலை

போல் அழகாக நின்றிருந்த தேஜாவின் உருவம், முதன் முதலாக சிறு சலனத்தை அவனுக்குள் ஏற்படுத்தியது.

மனதில் அவளைப் பற்றிய நினைவுகள் மெதுவாக அணிவகுக்க ஆரம்பித்தன. சூரியன் நாபிக்குள் உதிர்ந்தது போல் ஒரு தகிப்பு உடலெங்கும் பரவி, கண்கள் சூடாகிச் சிவந்தன.

ஒரு கணம் தன் மேலேயே கோபம் வந்து விடத் தன்னை எவராலும் ஆட்படுத்த முடியாதென்ற எண்ணத்தை மனதில் விதைத்தபடி, வேகமாக வீட்டிற்கு செல்ல ஆரம்பித்தான் தீபன்.

எதிர்ப்பட்ட வேலையாளிடம் அந்தக் கோபத்தைக் காட்டி காரணமில்லாமல் எரிந்து விழுந்த பிறகு தான் புரிந்தது, தன்னை அவள் எந்த அளவு பாதித்திருக்கிறாள் என்பது.

அன்று, சீக்கிரமே மில்லுக்கு கிளம்பிச் சென்று விட்டான் அவன்.

தேஜா திரும்பி வரும் போது தான், பெரியவரின் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களைப் பார்க்க முடிந்தது. அன்று வேலை இல்லை என்பதால் மெதுவாக வயல்புறம் சென்று ஒரு மரத்தடியில் அமர்ந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

பக்கத்திலிருந்த மரத்தில் சிறு குழந்தைகள் புடவைத் தொட்டிலில் ஆடியபடி சுகமாய் உறங்கிக் கொண்டிருக்க, திடீரென்று ஒரு குழந்தை அழ ஆரம்பித்தது.

பதட்டத்துடன் அவள் எழுந்த போது, விரைந்து வந்த அதன் தாய் குழந்தையைத் தூக்கிச் சென்று மரத்தில் சாய்ந்து அமர்ந்தபடி அதன் பசியாற்ற ஆரம்பித்தாள்.



தேஜாவுக்கு என்னவோ போல்.. ஒரு மறைவிடம் கூட இல்லாமல் இந்த மனிதர்கள் பாவம் எவ்வளவு கஷ்டப்படு கிறார்கள் என்ற இரக்கம் மனதில் சூழ்ந்தது.

அன்று வீட்டிற்கு வரும்போதே மனம் யோசனையில் சூழ்ந்திருக்க டிபன் சாப்பிட்டு விட்டு முன்னறைக்கு வந்த போது சென்னியப்பன் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தார்.

''என்ன அங்கிள்.. பொழுது போகலையா? அப்புறம்.. உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும். என்னைத் தப்பா எடுத்துக்க மாட்டீங்களே? எல்லா விஷயத்துலயும் மூக்கை நுழைக்கிறதா!'' என்றாள் தயக்கத்துடன்.

''என்னம்மா சொல்லு. நீ அப்படி எதுவும் கேக்க மாட்டேன்னு எனக்கு நல்லாவே தெரியும்'' என்றார் புத்தகத்தை மூடியபடி.

''காலையில வயலுக்குப் போயிருந்தேன். அங்கே குழந்தைங்க எல்லாரும் மரத்தடியில தூங்கிட்டிருந்தாங்க. அதுங்களுக்குப் பசி வந்து அழறப்ப பீட் பண்ண ஒரு மறைவிடம் கூட இல்லாதது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது அங்கிள். இதுக்கு நாம எதுவுமே செய்ய முடியாதா?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

அவருக்கும் மனதில் பலத்த யோசனை. தனக்குள்ளேயே யோசித்தவர், ''இத்தனை நாள் இதெல்லாம் எனக்குத் தோணவே இல்லை பாரும்மா. ஒரு வேளை தீபனோட அம்மா இருந்திருந்தா, எடுத்துச் சொல்லி இருப்பா. பெண்களோட கஷ்டம் ஒரு பொண்ணுக்குத்தானே தெரியும். இதுக்கு என்ன தான் செய்யலாம்... சொல்லு'' என்றார் யோசனையுடன்.

''எனக்குத் தெரிஞ்ச ஒரு வழிதான் அங்கிள் இருக்கு. அங்கங்கே சின்னதா ஷெட் மாதிரி போட்டுட்டா அவங்களுக்கு வசதியா இருக்கும். இத செயல்படுத்த முடியுமான்னு எனக்குத் தெரியலை. அதை நீங்க தான் சொல்லணும்'' சிறு முறுவலுடன் முடித்தாள்.

''நான் இதுபத்தி முதல்லே நீபன் கிட்டப்பேசறேன். அப்புறமா முடிவு பண்ணலாம்''

''அங்கிள்! தயவு செஞ்சு இந்த யோசனையை நான் தான் சொன்னேன்றதை மட்டும் அவர்கிட்ட சொல்லிடாதீங்க. அப்புறம் என் மேல கோபப்படுவாரு''

''அதெல்லாம் ஒண்ணும் கோபப்படமாட்டான். நான் சொல்ற விதத்துல அவன் கிட்ட சொல்றேன். என் பையன் பார்க்கறதுக்கு கொஞ்சம் முரடு மாதிரி தான் தெரிவான். ஆனா நல்லவன்மா'' சிறு கேலி இருந்தது அவர் குரலில்.

அவளுக்கு ஏன் இந்த விஷயத்தைப் பற்றி பெரியவரிடம் பேசினோம் என்றிருந்தது. இதற்கு அவனிடமிருந்து என்ன மண்டகப்படி காத்திருக்கிறதோ என்று எண்ணும் போதே மனம் சோர்ந்து போனது.

## 7

தேஜா, இன்று டவுனுக்குச் சென்று தனக்கு வேண்டிய பொருட்களை வாங்கத் திட்டமிட்டிருந்தாள். போன முறை, வள்ளியுடன் பஸ்ஸில் சென்று சுற்றிப் பார்த்து விட்டு வந்தது, நினைவு வந்தது.



''அங்கிள்.. நான் டவுனுக்குப் போகலாம்னு இருக்கேன். சில திங்ஸ் வாங்கணும்'' என்றபடி எழுந்தாள்.

''நானே சொல்லணும்னு நினைச்சேன். ஒரே ஒரு தடவை அந்த வள்ளிப் பொண்ணோட போனதுதானே. வீட்டிலயே அடைஞ்சிருந்தா என்னவோ போல இருக்கும், என்னை மாதிரி. டிரைவர்கிட்ட சொல்றேன். காரை எடுத்திட்டுப் போயிட்டு வந்துடு'' என்றார்.

''அங்கிள்.. ஒரு ஐடியா சொல்லவா? நீங்களும் என்னோட வாங்களேன். எப்பவுமே ஊர் சுத்திப்பாத்துட்டு வந்தா மனசுக்கு ரிலாக்ஸ்டா இருக்கும். ப்ரெஷ் ஏர்ப்ரீத் பண்ணின மாதிரியும் நல்லாருக்கும்'' ஆர்வத்துடன் கேட்டாள்.

ஒரு நிமிடம் யோசித்தவர், ''சரி! பார்வதிக்கு ஏதாவது வேணுமா கேளு. நான் காரிலேயே இருக்கேன். நீ போய் எல்லாம் வாங்கிட்டு வந்திடலாம்'' மகிழ்ச்சியுடன் சிறுபிள்ளை போல் கூறினார்.

டிரைவரை அழைத்து விபரம் கூறி விட்டு, பார்வதியிடம் சென்று வாங்க வேண்டிய பொருட்களின் லிஸ்டை வாங்கியவள், டிபன் சாப்பிட்டு முடித்து வந்த போது, தயாராகிக் காத்திருந்தார் சென்னியப்பன.

சன்னாசியின் உதவியுடன் அவர் முன்புறம் ஏறிக் கொள்ள பின்புறம் அமர்ந்தவள் டவுனுக்கு சென்றவுடன் வேகமாய்த் தன் வேலைகளை முடித்துக் கொண்டு, பார்வதியின் லிஸ்ட்படி இருந்த பொருட்களையும் வாங்கிவிட்டுத் திரும்பும் போது தான் அந்தப் புத்தக நிலையம் கண்ணில் பட்டது.

உள்ளே சென்று தனக்கு வேண்டிய புத்தகங்களுடன் பெரியவரும் படிக்கும்படி சிலவற்றை வாங்கிக் கொண்டு திரும்பினாள்.

எல்லாப் பொருட்களையும் சீட்டில் வைத்து விட்டு அவள் ஏறி அமர்ந்த போது, ''என்னம்மா! ஆச்சர்யமா இருக்கு. அதுக்குள்ளே முடிஞ்சிடுச்சா உன் ஷாப்பிங்கெல்லாம்?'' என்று கேட்டார் சென்னியப்பன்.

''கிண்டல் பண்றீங்களா அங்கிள். நாம என்ன வாங்கணும்னு நினைக்கிறோமோ, அத முன்னாடியே பிளான் பண்ணிட்டோம்னா சீக்கிரமாவே வேலையை முடிச்சிடலாம்'' என்றபடி அவருக்கென்று தான் வாங்கிய புத்தகங்களை எடுத்துக் கொடுத்தாள்.

மகிழ்ச்சியுடன் அதைப்பெற்றுக் கொண்டவர், ''தேங்க்ஸ்மா. என்னையும் நினைவு வச்சிட்டு. இத வாங்கிட்டு வந்ததுக்கு'' என்றபடி மணிமேகலையையும், பெரிய புராணத்தையும் புரட்ட ஆரம்பித்தார்.

**அ**ன்று மாலை, வள்ளியின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த போது, ஏதோ ஒரு இனம் புரியா உணர்வு குறுகுறுப்பாய் உள்ளூரப் படரவும் மெல்ல நிமிர்ந்தாள்.

எதிரில் தெரிந்த தீபனுடைய அறையில் ஜன்னலில், அவன் நின்றிருப்பதும், விழிகள் கூர்மையுடன் அவளையே வருடுவதும் தெரிந்தது.

மனம் ஒரு நிமிடம் தன்னிலை மறக்க, சிலிர்ப்புடன் மெதுவாகக் கண்களை மூடித்திறந்த மறு கணமே, அது கனவோ என்பது போல் அவன் உருவம் மறைந்து போனது. ...தையோ இழந்தது போன்ற உணர்வை விதைத்தது.

ஒரு பெருமூச்சுடன் அவள் பாடத்தைத் தொடர்ந்து போது, வள்ளியின் விழிகள் யோசனையுடன் அவளிடமே



பதிந்திருந்தன. எதுவோ புரிந்தும், புரியாதது போல் ஒரு உணர்வு.

டியூஷன் முடிந்து அனைவரும் சென்ற பிறகு கிளம்பிய தேஜாவை நிறுத்திய வள்ளி,''ஒரு நிமிஷம் நான் உங்ககிட்டே ஒன்னு கேக்கலாமா? என்ன இடையில் திடீர்னு பெரிசா ஒரு பெருமூச்சு'' குறும்புடன் கேட்டாள்.

''நீங்க ஏன் தேஜா இங்க வேலைக்கு வந்தீங்க? மெட்ராசில இல்லாத வேலையா? எனக்கென்னவோ உங்க சிரிப்புக்குப் பின்னாடி பெரிய சோகம் ஒளிஞ்சிட்டிருக்கற மாதிரி தோணுது'' என்றாள் மெல்லிய குரலில்.

மெதுவாகத் திரும்பிய தேஜாவின் விழியோரங்கள் கசிந்தன. பதறிப் போன வள்ளி, ''என்னை மன்னிச்சிடுங்க. தப்பா ஏதாவது கேட்டிருந்தா இத இப்படியே விட்டுட்டு மறந்திடுங்க தேஜா'' என்றாள் தர்மசங்கடத்துடன்.

இதழோரம் ஒரு விரக்திப் புன்னகையுடன் அவளையே நோக்கிய தேஜா, ''மறக்க முடியாத நிறைய விஷயங்கள் மனசுக்குள்ளே பொக்கிஷமாப் புதைஞ்சிருக்கு வள்ளி. அதெல்லாம் வெளியே யார்கிட்டயும் சொல்ல முடியாது. ஆனா சிலர் கிட்ட மட்டும் சட்டுன்னு எல்லாத்தையும் மடைதிறந்தாப்புல கொட்டத் தோணும். ம்.. சொல்றேன்'' என்று ஆரம்பித்தாள்.

தேஜாவின் வாழ்க்கைப் புத்தகம் புரட்டப்பட்ட போது, ஆரம்பகாலப் பக்கங்கள் சந்தோஷங்கள் நிறைந்த பாசப் பூந்தோட்டத்தையும், சமீப நிகழ்ச்சிகள் நிறம் மாறிப்போன மனிதர்களின் நிஜமுகங்களைக் கண்டு அன்பின்றிப் பாலையாய் வறண்ட மனதையும், அறிமுகப்படுத்தின.

பிரமிப்புடன் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த வள்ளிக்கும் கண்கள் கலங்கி விட, ''அப்புறம் ஏன் இங்க வேலைக்கு வந்தீங்க தேஜா?'' என்றாள் ஆதங்கத்துடன்.

தீபனுடனான கல்யாண விஷயத்தை மட்டும் மறைத்தவள்,''எனக்கு அங்கே இருக்கவே பிடிக்கலை வள்ளி. புது இடத்துக்கு.. என்னை யாருன்னே தெரியாத ஒரு இடத்துக்குப் போகணும்னு சிவா அங்கிள் கிட்டக் கேட்டேன். எந்தவித சுயபச்சாதாபத்துக்கும் மனசுல இடம் கொடுக்காம பொய்க் கவசம் போட்டுட்டு அலையற மனுஷங்களோட முகத்தைப் பாக்காம, நான் நானா மட்டுமே இருக்க ஆசைப்பட்டேன். அது தான் இங்க நான் வேலைக்கு வந்ததுக்குக் காரணம் வள்ளி'' என்று ஒரு பெருமூச்சுடன் முடித்தாள்.

''ஆச்சர்யமா இருக்கு தேஜா. நீங்க பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணுன்னு பெரியய்யாவுக்குத் தெரியுமா?''

''ம்ஹூம்.. தெரியாது. எங்க குடும்பம் ரொம்ப நொடிஞ்சிட்டதால் நான் இங்கே வேலைக்கு வந்திருக்கறதா தான் அவர் நினைக்கிறாரு. அப்படி ஒரு நிலையில் என்னை ஒரு மனுஷியா மதிச்சி ஏத்துக்கறவங்களைத் தேடித்தான் நானும் இங்க வந்தேன். ஆனா வந்தப்புறம் தான் தெரிஞ்சுது. உலகத்துல நல்ல மனுஷங்களும் இருக்காங்கன்னு''

''ஏன் தேஜா அப்படி நினைக்கறீங்க? உங்களைப் போய் யாராலயாவது வெறுக்க முடியுமா?''

''முடியும் வள்ளி. பணத்தை மட்டுமே உயர்வா மதிக்கறவங்களாலே அது முடியும். பணம் ஒண்ணை மட்டும் அளவுகோலா வச்சி, அந்தஸ்த்தாலே மட்டுமே மனுஷங்களை எடை



போடறவங்களாலே, ரொம்ப சுலபமா மத்தவங்களை துச்சமாத் தூக்கியெறிய முடியும்கறது, எனக்கு கொஞ்ச நாள் முன்னாடி தான் தெரிஞ்சுது.

''சுனாமியால நான் இழந்ததும் அதிகம். கத்துக்கிட்ட பாடங்களும் அதிகம் வள்ளி.'' விரக்தியுடன் கூறினாள்.

தேஜாவின் கைகளை ஆதரவுடன் பிடித்துக் கொண்ட வள்ளியின் மனதிலும் கண்ணீரின் தடங்கள்.

''நீங்க கவலைப்படக் கூடாது. உங்களுக்கு எப்பவுமே நாங்க எல்லாரும் இருக்கோம். எந்த நேரத்திலயும் உங்களைக் கலங்க விடமாட்டோம்'' என்று ஆறுதல் படுத்தி விடை கொடுத்தாள் வள்ளி.

வீட்டிற்கு திரும்பி வரும்போது எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டதில், மனபாரம் இறங்கியது போல் தோன்றினாலும், ஏனோ மனம் பாறாங்கல்லை வைத்தாற்போல் கனத்தது.

இரவில் தனிமை மிகவும் யோசிக்க வைத்ததில், சிவநேசனுக்குத் தொடர்பு கொண்டு பேசி விட்டு வைத்த பிறகு உறக்கம் சுகமாய் வந்து தழுவியது.

மறுநாள் காலையில் எப்போதும் போல் வேலையில் ஈடுபட்டிருந்த போது அழுத்தமான காலடிச் சத்தம் தீபன் வருவதை அவள் புலன்களுக்கு அறிவித்தன.

அவன் வருகின்ற காலடிச்சுவடுகளை தன் இதயம் உடனே கண்டுபிடித்து விடுவது புரிய, ஒரு விதப் படபடப்புடன் அவள் மெதுவாக நிமிர்ந்தபோது, சிவனது நெற்றிக் கண்ணாய் எரித்தன, அவன் விழிகள்.

''என்ன.. பெரிய லேடி ராபின்ஹூட்டா நீ? என்னவோ, வயல்லே வேலை செய்யறவங்களுக்கெல்லாம் ஷெட்

போட்டுக் குடுக்கணும். அப்படின்னு ஐடியா சொன்னியாமே? ஏதோ உருப்படியா ஒரு ஐடியா சொன்னதாலே உன்னை விடறேன். இனிமே எங்க வீட்டுப் பர்சனல் விஷயங்கள்ல எல்லாம் மூக்கை நுழைக்காதே. புரிஞ்சுதா?'' சினத்துடன் கூறி விட்டு விருட்டென்று திரும்பிச்சென்றான்.

இப்போதெல்லாம் அவனுடைய கோபங்கள், முன்புபோல் அவளைப் பாதிப்பதில்லை. பிரச்சனையை விட்டு விலகி நின்று அவன் பார்வையில் யோசிக்கும் போது, அவனின் கோபம் தவறென்றும் தோன்றாமல் அவனுக்காகப் பரிந்து வந்தது மனது.

இதில் நானும் ஏதாவது செய்ய முடியுமாவென்று தோன்றினாலும், பிறகு தான் பணக்காரி என்ற உண்மை வெளிப்பட்டு விடுமே என்ற பயமும் உள்ளூர எழுந்தது.

பிறகு சிவநேசனிடம் தொடர்பு கொண்டவள், ''அங்கிள் எனக்காக நீங்க ஒரு உதவி செய்ய முடியுமா? அம்மா, அப்பா பேரில ஒரு நினைவா இங்க ஏழைங்களுக்கு ஷெட் போட்டுக் குடுக்கலாம்னு நினைக்கிறேன். நீங்களே இதுபத்தி இங்க தீபனோட அப்பாகிட்டப் பேசி யாரோ டொனேஷன் குடுத்த மாதிரி ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்றாள் கேள்வியாக.

''திடீர்னு எப்படியம்மா இதப்பத்திப் பேசறது? நான் மெதுவாக சென்னிகிட்டப் பேசறேன். அவனா சொன்னான்னா, நான் செக் அனுப்பறேன். தீபனைப் பத்தி நீ ஒண்ணுமே சொல்லலையே?''

''ம்.. இதுவரைக்கும் கவனிச்சதில, அவர் ரொம்பக் கோபக்காரர்னு மட்டும் தெரிஞ்சுக்கிட்டேன். பாப்போம்'' என்றாள் ஒரு பெருமூச்சுடன்.



''சரிம்மா... இரு ஆன்ட்டி உன்கிட்டப் பேசணுமாம்'' என்று கொடுக்க, அவரிடம் நலம் விசாரித்து விட்டு வைத்த பிறகு வெகுநேரம் மனதிற்குள் சுகவரியாய் தீபனின் முகவரியே மனதில் நிறைந்திருந்தது.



## 8

**வா**ழ்க்கை எந்தவித மாற்றமுமின்றி, தன் பழைய பாதையிலேயே பயணிக்கும் நதியைப் போல் செல்ல, தீபன் மட்டும் அவளிடமிருந்து ஏதோ யோசனையுடன் ஒதுங்கியே இருந்தான்.

நாட்கள் மாதங்களாகி வேகமாகச் செல்ல, சிவநேசனிடம் வாரத்துக்கு இருமுறையாவது பேசிக் கொண்டிருந்தாள் தேஜா.

சிவநேசன், தன் நண்பரிடம் பேசி 'செக்' அனுப்பி விட, ஷெட் அமைக்கும் வேலைகள் நடக்க ஆரம்பித்து முடியும் நிலையிலிருந்தன. ஆறு இடங்களில் அதுபோல் அமைக்கும் படி ஏற்பாடு செய்திருந்தார், சென்னியப்பன்.

இப்போது அவள் வாக்கிங் செல்லும் போதெல்லாம், ஊர்மக்கள் மிகவும் மரியாதையுடன் கைகூப்பி நன்றி சொல்ல ஆரம்பித்திருந்தனர்.

அவளுக்கு மிகவும் தர்மசங்கடமாகி விடுவதால், விடி காலையிலேயே எழுந்து காலாற நடக்க ஆரம்பித்திருந்தாள் தேஜா.

அன்று, பால் பண்ணை சம்பந்தமான கணக்குகளை சரி பார்க்கும் போது தான், அதில் வங்கிக் கணக்கிலிருந்து பெரிய

தொகையாக இந்த மாதத்திலேயே இரண்டு முறை எடுக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

சந்தேகத்துடன் சென்னியப்பனிடம் சென்று விசாரித்த போது, அது போல் அந்தத் தேதியில் தான் எந்தச் செக்கிலும் கையெழுத்திடவில்லை என்று அவர் நிச்சயமாகக் கூறினார்.

உடனே தீபனிடம் சென்றவள்,''சார்... பாங்கில இருந்து இந்த மாசத்திலேயே ரெண்டு தடவை பெரிய அமவுண்டா 'டிரா' பண்ணி இருக்காங்க. அது மேனேஜராத்தான் இருக்கணும். ஆனா அங்கிள் செக் இஷ்யு பண்ணவேன்னு சொல்றாங்க...அதான்! இத நீங்க கொஞ்சம் வெரிஃபை பண்ணிட்டா நல்லாருக்கும்'' என்றாள்.

அவளிடமிருந்து எல்லாவற்றையும் வாங்கிப் பார்த்தவன்,''சரி.. நான் நாளைக்கே பாங்குக்குப் போய் என்னன்னு பாக்கறேன்'' என்றபடி அவளை அனுப்பினான்.

மறுநாளே, மேனேஜரின் மோசடி வெளியானது. அதைக் கண்டுபிடித்து உடனே வேலையை விட்டு நீக்கியவன், தன் அப்பாவைப் போலவே கையெழுத்திட்டு இதுபோல் பலமுறை அவன் பணம் எடுத்திருப்பதைக் கண்டுபிடித்தான்.

அந்த மேனேஜரின் உறவினர்களை வரவழைத்து எல்லா வற்றையும் கூறியவன், போலீஸிடம் சொல்லாமல் இருக்க வேண்டுமென்றால் அவர்களுடைய வீட்டுப் பத்திரத்தைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி ஒரு நிபந்தனை விதித்தான்.

குறிப்பிட்ட தவணைக்குள் அவன் கையாடல் செய்த பணத்தை செலுத்த வில்லை என்றால் வீட்டுப் பத்திரத்தை திருப்பித் தர முடியாதென்று கூறியவன், எல்லாவற்றிற்கும் ஒப்புதல் கடிதம் எழுதி வாங்கிப் பத்திரப்படுத்தினான்.



பாங்க் மேனேஜரிடம் பேசிவிட்டு, எல்லாம் முடிந்து கிளம்பிய போதுதான், மதியம் சாப்பாடு என்ற ஒன்று இருப்பதையே தான் மறந்து போனது ஞாபகம் வந்தது.

பசியிலும், அலைச்சலிலும் தலை வலிக்க ஆரம்பிக்க, நேரே வீட்டுக்குச் சென்றவன், சென்னியப்பனிடம் எல்லாவற்றையும் கூறி விட்டுத் தலையைப் பிடித்துக் கொண்டு எழுந்தான்.

''அப்பா! ஒரே தலைவலியா இருக்கு. நான்போய் ஒரு குளியல் போட்டுட்டு வந்திடறேன்'' எனும் போதே காபி தம்ளர் அவனெதிரில் நீட்டப்பட்டது.

''எடுத்துக்கங்க சார். ரொம்ப டயர்டா இருப்பீங்க! அதான் போட்டு எடுத்துட்டு வந்தேன். பார்வதியம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க. பின்னாடி இருக்கற பாத்ரூம்ல ஹீட்டர் போட்டிருக்கேன்'' என்றாள் தேஜா.

''தேங்க்ஸ்!'' என்றபடி அவளையே ஒரு கணம் ஊடுருவியவனின் பார்வை, தாலாட்டும் பூங்காற்றாய் அவள் மனதை வருடிச் சென்றது.

வாய்மொழியால் சொல்லப்படாத வார்த்தைகள், அர்த்தம் மிகுந்ததாய் அவன் விழிகளில் தெரிந்தன.

அவள் பார்வையில் தெரிந்த காதலின் எதிரொலியைக் கண்டதும், வேகமாகத் திரும்பி தன் அறைக்குள் சென்ற வனுக்கு, நினைவுகள் தேஜாவைச் சுற்றியே வட்டமிட்டன.

வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பெண்ணாய் உருமாறி எதிரில் வந்தது போல் ஒரு சிலிர்ப்பு வந்தது. உதடுகளில் ஏனோ ஒரு புன்னகை வந்து இதமாய்

ஒட்டிக் கொள்ள இனம் புரியாத ஒரு உணர்வு அவனை ஆட்கொண்டது.

தாயின் பாசமே தெரியாமல் பெரும்பாலும் ஹாஸ்டலில் வளர்ந்ததில், ஒரு பெண்ணின் அன்பான புன்னகையும், கரிசனமான சில செயல்களும், மென்மையான அணுகு முறையும், தன்னை அவள் வசப்படுத்தி விடுமோ என்ற பய உணர்வை அவனுள் விதைத்து.

தலையை குலுக்கி அவள் நினைவுகளிலிருந்து விடு பட்டவன், குளித்து விட்டு வந்தபோது, மேசையில் சூடான டிபனை தயாராக எடுத்து வைத்திருந்தாள் தேஜா.

முகத்தில் எந்த உணர்வுமின்றி ஒரு வெற்றுப் பார்வையுடன் வந்து அமர்ந்தாலும், அவளையே தொடர்ந்த தீபனின் விழிகள் கூர்மையாய் அவள் இதயத்துக்குள் மாயம் செய்தன.

அன்று அவள் படுத்த பிறகும், வெகு நேரம் உறக்கம் வர மறுத்து, தீபனின் ஞாபகங்களை அதிகமாய் மனதில் விதைத்தன.

புதிதாய் காதல் துளிர்த்த மனச்செடியில், ஒரு ஓரமாய் ஒட்டிக்கொண்டிருந்தது... ஓரிதழ்த் தாமரையாய் அவன் நினைவு!

அந்த நிமிடம் எங்கிருந்தோ காற்றில் கலந்து வந்து மனதை நிறைத்தது, அந்தப் பாடல்!

***''யாரது.. சொல்லாமல் நெஞ்சள்ளிப் போனது***
***தாளாத பெண்மை வாடுமே! வாடுமே...!''***

தனக்கெனவே எழுதியதைப்போன்ற அந்த வரிகள் சிலிர்ப்பை ஏற்படுத்த, குளிர்த்தென்றல் கூந்தலை சிலும்பலாய்



கோதிச் செல்ல, நித்திரையை மெல்ல அணைத்துக் கொண்டாள் தேஜா.

மறுநாளைய விடியல், இருவருக்குமே புதிதான ஒன்றாய் மனதில் ஒரு மாற்றத்துடன் விடிந்தது.

ஆனால் அவள் கீழே வரும் போதே தீபன் வெளியில் சென்றிருந்தான். அன்று வியாழன் என்பதால் சாப்பிட்ட பிறகு பெரியவரிடம் கூறிவிட்டு டவுனுக்குச் செல்வதற்காக அவள் பஸ் ஸ்டாப்பில் நிற்கும் போது தான், அந்த விபரீதம் நடந்தது.

திடீரென்று எங்கிருந்தோ வந்த ஒருவன்,''ஏய்.. என்ன? எங்க மச்சானையே போலீஸிலே மாட்டிக்குடுப்பியா? கணக்குப் பார்க்க உனக்கு இனிமே கை இருக்கா பார்க்கலாம்'' என்றபடி பாய்ந்து முன்னால் வரவும், அவளுக்கு வெலவெலத்துப் போய் விட்டது.

அங்கு அவள் மட்டும் தனியே நின்றதால், உதவிக்கு யாரையாவது அழைக்கலாமென்று திரும்பினாள், அந்த நேரம் பார்த்து எவருமே கண்களில் படவில்லை.

திரும்பி வேகமாக ஓட ஆரம்பித்தவளுக்கு, தான் எங்கு செல்கிறோம் என்றே புரியவில்லை. ஒரு திருப்பத்தில் எதிரில் வந்த காரில் போய் மோதுவதற்குள் சடன் பிரேக் போட்டு நிறுத்தினான், அதை ஓட்டி வந்தவன்.

அவள் பயந்து போய் பானட்டைப் பிடித்தபடி சாய்ந்து நிற்கும் போது தான், காரிலிருந்து டிரைவரும், தீபனும் இறங்குவது தெரிந்தது.

''தீபன்...'' என்ற கதறலுடன் ஓடிச் சென்று அவனருகில் நின்று கொண்டாள் அவள்.

காரைப் பார்த்ததும் பயந்து ஓடியவனை, டிரைவரும் அந்த வழியாக வந்து கொண்டிருந்த ஊர்க்காரர்களும் பிடித்து அடித்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

படபடக்கும் இதயத்துடன் தீபனின் தோளணைத்தபடி நின்றவளை எல்லோரும் சமாதானப்படுத்த, அவன் குரல் மட்டும் காதருகில் சீறியது.

''இன்னிக்குன்னு பாத்து ஏன் தனியே டவுனுக்குக் கிளம்பினே?'' குற்றம் சாட்டும் குரலில் கேட்டான் அவன்.

''நான்...'' எனும் போதே வார்த்தைகள் முட்டித் தடை பெற்றன.

''சரி.. ஏறு! வீட்டில் விட்டுட்டுப்போறேன். நல்லவேளை, இன்னிக்கு ஒரு கல்யாணத்துக்குப் போயிட்டு மில்லுக்கு லேட்டாப் போனதாலே உன்னைப் பாக்க முடிஞ்சது'' என்றபடி அவன் காரை ஓட்ட கலங்கிய விழிகளுடன் பின்புறம் ஏறிக்கொண்டாள் தேஜா.

மௌனமாக வீட்டிற்குச் சென்று தன் தந்தையிடம் அவளை ஒப்படைத்தவன்,''அப்பா! தேஜாவ கொஞ்ச நாள் வீட்டோட இருக்கச் சொல்லுங்க. நேத்து தான் அந்த மேனேஜரைப் பிடிச்சி வார்ன் பண்ணி விட்டுருக்கோம்! அவன் கோபமெல்லாம் தேஜா மேல தான் இருக்கும். இப்பப்பாருங்க. அவனோட ஆள் ஒருத்தன் துரத்திட்டு வந்திட்டான்.. டிரைவரும், ஊர்க்காரங்களும் ஸ்டேஷனுக்கு அவனை இழுத்துட்டுப் போயிருக்காங்க! நான் போய்த் தான் என்னன்னு பார்க்கணும்'' என்றவன் ஒரு பெருமூச்சுடன் அவளிடம் திரும்பினான்.

''இப்ப நீ எங்க பொறுப்பில இருக்கே. உனக்கு ஏதாவது ஒரு பிரச்சனைன்னா நாங்க தான் அதுக்கு பதில் சொல்லணும்!



நீ வீட்டோட இருந்தாத்தான் பாதுகாப்பு. கொஞ்ச நாள் போகட்டும்! அப்புறமா ஊர் சுத்தக் கிளம்பினாலும், டிரைவரோட போ!'' என்று ஆழமான ஒரு பார்வையுடன் கூறி விட்டுக் கிளம்பினான்.

அந்த நேரத்திலும், அவன் பார்வை மோதியதில் அவள் இதயம் தடம் புரண்டது.

தன்னைப் பற்றி அவன் கொண்ட கரிசனத்தில், புதைத்ததும் புது ஜனனமெடுத்து உயிர்த்தெழும் விதையாய், அவன் நினைவுகளைப் புதைத்ததும், மனதில் காதல் உயிர்த்தெழுந்தது.

ஏனோ, அன்று தனிமை அவளை மிகவும் நேசிக்க ஆரம்பித்தது. அவன் நினைவுகளை சுகமாக அசை போட ஆரம்பித்தாள் தேஜா.



## 9

அன்று மாலை வள்ளியின் வீட்டுக்குச் செல்லும் போதே உள்ளூர ஒரு குளிர் பரவினாலும், தான் அருகிலேயே ஒரு பாதுகாப்பான இடத்தில் தான் இருக்கிறோம். என்ற தைரியமும் உடன் வந்தது.

அங்கு சென்ற போது, பிள்ளைகளுடன் அவர்களுடைய பெற்றோர்களும் வந்திருந்தனர்.

''அம்மா! நீங்க வந்தப்புறம் தான் எங்க பசங்க, எல்லாம் நல்லாப் படிக்குதுங்க. எங்களுக்கு ஷெட் கட்டச் சொல்லி ஏற்பாடு செஞ்சி, எங்களுக்கு நீங்க எவ்வளவோ நல்லது செஞ்சிருக்கீங்க.. காலையில நடந்த விஷயத்தைக் கேள்விப்

பட்டப்ப பதறிப்போய் வரலாம்னு நினைச்சோம். நீங்க கொஞ்சம் ஒய்வெடுத்தப்புறமா வரலாமேன்னு இப்ப வந்தோம். எந்தப் பிரச்சனை வந்தாலும் நாங்க எல்லாரும் உங்களுக்குத் துணையா இருப்போம்! கவலைப்படாதீங்க" என்று ஆறுதல் கூறினர்.

அவர்களுக்கு நன்றி சொல்லி அனுப்பியவள், பிள்ளைகளுக்கு எழுத வேண்டியவற்றைக் கொடுத்து விட்டு அமர்ந்த போது மனித நேயமும், மரியாதையும், எதிர்பார்ப்பில்லாத அன்பும், கிராமத்து மக்களிடம் தான் நிறைந்திருக்கிறதோ என்ற எண்ணம் தோன்றி, அவளுடைய மனக்காயத்துக்கு இதமான மருந்தானது.

பிறகு, உதடுகளில் உறைந்த புன்னகையுடன் பாடம் சொல்லிக் கொடுத்தவளை, வள்ளியின் விழிகள் ஆராய்ச்சியுடன் நோக்கின.

அவளிடம் விடைபெற்று தேஜா திரும்பி வரும் போது, பின் வாசலருகே வந்து கொண்டிருந்த தீபன், "ஓ! டீச்சர் வந்தாச்சா? உன்னைத் தேடித்தான் வந்தேன்... ஏன்.. இன்னிக்கும் கட்டாயம் ட்யூஷன் எடுக்கப் போய்த்தான் ஆகணுமா?" என்ற போது, குரலில் சிறு கோபமிருந்தாலும், கண்கள் கேலியாகச் சிரித்தன.

தயக்கத்துடன் புன்னகைத்தவள், "வீட்டில ரொம்ப போரடிச்சது.. இன்னிக்கு எந்த வேலையும் இல்லையா? அதான் போனேன்." என்றாள் மெதுவாக.

திடீரெனத் "தேங்க்ஸ்!" என்றவனின் குரலில் இருந்த ஆழம் காண முடியாத மென்மை, அவளை வாய் மூடி மௌனியாக்குவதாய்!



சிறிது நேரம், அவன் உதடுகள் ஒன்றையொன்று அழுத்தமாய் முத்தமிட்டபடி, வார்த்தைகளுக்கு வழிவிடாமல் சத்தியாக்கிரகம் செய்தன.

பிறகு மெல்ல நிமிர்ந்தவள், "எதுக்கு தேங்க்ஸ்?" என்றாள் கேள்வியாக.

"ம்.. எல்லாத்துக்கும் தான்! அப்பாவ நடக்க வச்சதுக்கு.. அக்கௌண்ட்ஸ் எல்லாம் ஒழுங்கா கவனிக்கறதுக்கு.. பணத்திருட்டைக் கண்டு பிடிச்சதுக்கு.. எங்க ஊர் பசங்க கோட்சே ஆகாமத் தடுக்க முயற்சி செய்யறியே, அதுக்கு.. அப்புறம்.. இப்படி எல்லாத்துக்கும்!" கண்கள் குறுகுறுக்க முடித்தான்.

"இதில நான் எதுவும் தனியா செய்யலை... எனக்குக் குடுத்த வேலையத்தான் செஞ்சேன்.. அங்கிள் டாக்டருக்கு ஒத்துழைச்சதாலே சீக்கிரமாவே நடக்க முடிஞ்சது.. பாடம் சொல்லித்தரது என்னோட ஆத்மதிருப்திக்காக.. அவ்வளவு தான்!" கூச்சப் புன்னகையுடன் கூறினாள்.

"ம்.. தேங்க் காட்! முகஸ்துதிக்கு மயங்காத ஒரு பெண்ணை முதல் முதலாப் பார்க்கறேன்" என்றான் தீபன், குறும்புடன் கண்ணோரங்கள் சுருங்க.

"இது வரைக்கும் அப்படி மயங்கின பெண்கள் எத்தனை பேரைப் பார்த்திருக்கீங்களாம்?" என்று கேலியுடன் கேட்டு விட்டுத் தன் நிலைமை உணர்ந்து உதட்டைக் கடித்தவள், வேகமாக உள்ளே செல்லத் திரும்பினாள்.

அவள் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவன், "நான் பொதுவா சொன்னேன், ஆனா.. நான் முதல் முதலா மனசாரப் பாராட்டின ஒரே பெண் நீதான்னா நம்புவியா தேஜஸ்வினி?"

என்று கிசுகிசுப்பான குரலில் அவன் கேட்ட போது, தேஜாவின் அடிவயிற்றில் ஆயிரம் தும்பிகளின் சிறகடிப்பு!

முதன் முதலாகப் பெயர் சொல்லி அவன் அழைத்த போது, நால்வகை நாணங்களும் நீங்கிச் செல்ல, நெஞ்சம் ஜதியாய் துள்ளம் போட்டது.

அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு உள்ளே ஓடினாள்.

தனக்குள்ளே ஏதோ ஒரு வித மாற்றம் நிகழ்வது புரிந்தாலும் அது ஏனென்று மட்டும் அவனுக்குப் புரிய வில்லை.

அவளுடைய அழகா.. பொறுப்புணர்ச்சியா.. முகம் தெரியாதவர்கள் மீது கூட அவள் காட்டும் கரிசனமா... திறமையா.. பெண்மைக்கே உரிய மென்மையா.. எதென்று இனம் பிரிக்க முடியவில்லை.

அன்றிரவு, இருவருக்குமே தவிப்பான இரவாய்!

விடிந்ததும் எழுந்து ஜன்னலருகில் சென்று பார்த்தவளுக்கு, வித்தியாசமாய்த் தெரிந்தது அன்றைய விடியல்!

இளஞ்சிவப்பு நிறக் காட்டன் புடவை தேஜாவின் அழகை மேலும் அதிகப்படுத்தியிருக்க, வெட்கமெனும் கவசம் முகத்தை மறைத்துக் கொள்ள, இனம் புரியாத ஒரு எதிர்பார்ப்புடன் படியிறங்கின, அவள் பாதங்கள்!

தீபனும் அன்றிரவு சரியாக உறங்காததால், சிவந்த விழி களுடன் ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந் தான். மனம் முழுவதும் அவளின் நினைவுகளை மட்டுமே சுமந்திருக்க, விழிகள் மட்டும் பேப்பரில் பதிந்திருந்தன.



சமையலில் உதவி செய்து விட்டு, தேஜா ஹாலுக்கு வந்த போது அவன் குளிக்கச் சென்றிருந்தான். தினமும் அந்த நேரம் தயாராகி அங்கு அமர்ந்து தந்தையுடன் பேசிக் கொண்டிருப் பவனை அன்று காணவில்லை என்றதும் தவித்துப் போனாள் அவள்.

அவனுடைய பார்வைத் தீண்டலின் வருடலில்லாது, மனம் முற்றுப் பெறாத கவிதையாய்த் தத்தளித்தது.

டிபன் சாப்பிடும் நேரம் கூட சென்னியப்பன் மட்டுமே சாப்பாட்டு மேசையில்... காத்திருக்கும், அவள் விழிகள் தீபனைத் தேடி அலைபாய்ந்தன.

சிறிது நேரம் கழித்து பெரியவர் சாப்பிட்டு விட்டுச் சென்ற பிறகு வந்தவன், ''என்ன.. சாப்பிட்டாச்சா...?'' என்றான் கண்களில் புரியாத ஒரு உணர்வுடன்.

''இல்லை.. எனக்குப் பசிக்கலை'' தவிப்புடன் வந்தது அவள் குரல். அவளருகில் வந்தவன்,''ம்.. பொய் சொல்லாதே.. எனக்கும் பசிக்காத மாதிரி தான் இருக்கு! ஆனா, காதலிக்கணும்னா தெம்பு வேணுமே'' என்றவுடன் விதிர்த்துப் போய் ஒரு வேகமூச்சுடன் நிமிர்ந்தவளைப்பார்த்து ஒற்றைக் கண் சிமிட்டிச் சிரித்தான்.

அந்தக் குறும்புக் கண்சிமிட்டலில், உடனே இடம் மாறியது மனது!

புரியாத ஒரு தவிப்புடன் அவன் விழிப்பதையே ஆழ்ந்து நோக்கியவன், ''வேண்டாம்...இந்தப் பார்வை நல்லா இல்லை! எப்பவுமே என்னைப் பயம் கலந்த காதலோட சிறை செய்யுமே. அந்தப் பார்வை தான் எனக்கு வேணும்!'' என்று காதருகில் முணுமுணுத்தான்.

உடனே விதிர்த்துப் போன மனது, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதையே உணர முடியாமல், ஒரு கணம் மரத்துப் போனது.

ஒன்றும் பேசாமல் தலை குனிந்து சாப்பிட ஆரம்பித்தவளுக்கு, அவனுடைய அருகாமையும் இதமான கேலியும், இதயத்தைப் படபடக்கச் செய்தன.

பிறகு, அவன் எதுவுமே பேசாததால், அந்த இடமே அமைதியைத் தத்தெடுக்க, கைகழுவச் சென்றபோது, ஸ்டாண்டிலிருந்து கை துடைக்கும் துண்டை எடுத்தவனின் பார்வை, அவளிடமே மீண்டும் சென்றது.

குறும்புடன் அவன் விழிகள் தேஜாவின் இடுப்புப் பிரதேசத்துக்கு செல்ல, உடல் முழுவதும் வெட்கப் பூக்கள் மொட்டு விட ஒரு அலைப்புறுதலோடு அவள் நிமிர்ந்தால், அவன் பார்வையும் உயர்ந்தது.

''கை துடைக்க அந்த முந்தானை கிடைக்கணும்னா, நான் இன்னும் கொஞ்சநாள் காத்திருக்கணும்.. இல்லையா?'' கண்கள் குறுகுறுத்தன.

இதயம் பெண்டுலம் போல் ஆட, வேகமாக அந்த இடத்தை விட்டு விரைந்து சென்றாள் தேஜா.

தடதடத்த இதயத்தை அடக்கியபடி அலுவலக அறைக்குள் நுழைந்தவளுக்கு, எங்கு திரும்பினாலும் அவனே நிற்பது போல் ஒரு பிரமை!

பிறகு மனதை திசை திருப்பி கம்ப்யூட்டரில் ஆழ்ந்த போது, அங்கு வந்த தீபன், தான் வந்ததையே அறியாமல் அவள் அமர்ந்திருப்பது கண்டு, மனம் செல்லமாய் சுருங்கினாலும், ''மேடம்!'' என்றான் மெதுவாக.



காதருகில் கேட்ட அவன் குரலில் சிலிர்த்துப் போய் நிமிர்ந்தவளுக்கு, கம்பீரமாய் இதயத்தைத் திருடியது அவன் பிம்பம்!

''என்ன சார்!'' என்றபடி மெதுவாய் அவள் எழ, ''ம்.. என்ன.. சாரா? ஒரு தடவை கூப்பிட்டாச்சில்லே.. அப்புறம் என்ன என்னோட பேரச் சொல்றதுக்கு இவ்வளவு தயக்கம்? ரொம்ப ஈஸிம்மா.. மூன்றெழுத்து தான் தீ...ப...ன்!'' என்றான் கண்ணோரங்கள் சுருங்க!

''அது.. அது.. ஒரு ஆபத்து நேரத்துல சொன்னது! அதை எப்படி இப்ப...? நீங்க என்னோட பாஸ்... மரியாதை இல்லாம அப்படியெல்லாம் என்னால கூப்பிட முடியாது..'' தலைகுனிந்தபடி கூறினாள்.

ஒற்றை விரலால் அவள் முகத்தை நிமிர்த்தியவன், ''இப்ப நான் உனக்கு பாஸ்தான்! ஆனா இன்னம் கொஞ்சம் நாளிலே, நீ எனக்கு பாஸாயிடுவே போலருக்கே! தனியா இருக்கும் போது, இன்னிக்கு முழுக்க 'தீபன்'கிற பேரைக் கூப்பிட்டுப் பழகிக்கோ'' கூறிவிட்டு வேகமாகத் திரும்பிச் சென்றவன் வாசலில் நின்றான்.

மெல்லத் திரும்பி, ''முதன் முதலா உன்னைப் புடவையில பார்க்கிறேன்... இன்னிக்கு நீ ரொம்ப அழகா இருக்கே!'' என்றபடி வெளியில் சென்றான்.




**தேஜா**வுக்கு, அன்று முழுவதும் சொல்லொணாத உணர்வில் இதயம் தடதடத்தது. நேசத்தின் வர்ஷிப்புகளை அறிமுகப்படுத்தியது.

அவளுக்குள்ளிருந்த மென்மையான காதல் உணர்வுகளை கொஞ்சம் ஒரு புதையல் போல் தோண்டி எடுத்துக் கொண்டிருந்தான் தீபன்.

மாலையில் அலுவலக அறையிலிருந்த போன் ஒலித்த போது, யாராக இருக்குமென்ற யோசனையுடன் எடுத்தாள் அவள்.

"நான் தீபன் பேசறேன்!" அவன் குரல் குளிர்த் தென்றலாய் மனதை வருடியது.

''என்ன சார்.. அங்கிள் கிட்டப் பேசணுமா?'' என்ற போது மறுமுனையில் எந்த சப்தமும் இல்லை.

ஒரு சீறலான மூச்சுடன்,''இல்லை.. அவர்கிட்டப் பேசணும்னா இன்னொரு லைன்ல கூப்பிட்டுருப்பேன்! நீ இன்னம் என்பேரைக் கூப்பிட்டுப் பழகலைன்னு நினைக் கிறேன்.'' என்று குரலில் ஒரு விலகல் தன்மையுடன், போனை வைத்து விட்டான்.

பிறகு வள்ளி வீட்டிலிருந்து திரும்பியும் அவன் வராதது ஏமாற்றத்தை விதைத்தாலும், திடீரென்று மனதில் புதிதாய் ஒரு பயம் துளிர் விட சென்னியப்பனிடம் சென்றாள்.

''அங்கிள்! அவரை இன்னும் காணோமே? அந்த மேனேஜர் குருப்பால அவருக்கு ஒன்னும் பிரச்சனை இருக்காதே?'' என்றாள் பயத்துடன்.

அவளுடைய தவிப்பை மனதினுள் ரசித்தவர்,''எம்மா.. அவன் சின்னக் குழந்தையா? கூட டிரைவரும் இருக்கறப்ப என்ன பயம்? அங்கே பாரு.. எங்க பரம்பரையோட வீரத்துக்கு சாட்சியா எத்தனை மிருகத்தலைகள் மேலே மாட்டியிருக்கு பாத்தியா?'' மீசையை வருடியபடி புன்னகைத்தார்.



அவள் வந்த அன்றே பயமுறுத்திய அந்தத் தலைகள் இன்று சிறிது அமைதியைத் தர, விழிகள் வாசலிலேயே பதிந்து தவமிருக்க, விரைந்து செல்லும் நேரத்தை சபித்தது மனது.

வாசலில் காரின் சப்தம் கேட்டவுடன், வேகமாய் வெளியில் சென்றவளுக்கு தீபனைப் பார்த்தவுடன் தான், மூச்சே ஒழுங்காக வர ஆரம்பித்தது.

''அப்பாடா' என்ற நிம்மதியுடன் வாசலிலேயே தூணில் சாய்ந்த நின்றவளைப் பார்த்ததும், வியப்புடன் அருகில் வந்தவன்,''ஏய்.. எனக்காகவா காத்துட்டிருக்கே? ம்... ஆச்சரியமா இருக்கு!'' என்றான் உல்லாசக் குரலில்.

அவள் ''இல்லை...'' என்றவுடனே அவன் முகம் வாடி விடத் தாங்க முடியாமல் ''அதில்லை.. உங்களைக் காணுமேன்னு தான்..'' முடிக்கும் முன்பே வாங்கிங் ஸ்டிக்குடன் அங்கு வந்தார் சென்னியப்பன்.

''தீபன்! நீ வரலைன்னு தேஜா ரொம்பத் தவிச்சிப் போயிட்டாப்பா! அந்த மேனேஜரோட ஆளுங்க உனக்கு ஏதாவது ப்ரச்னை பண்ணிடுவாங்களோன்னு அவளுக்கு பயம்... நான் தான் நம்ம குடும்பத்தோட வீரத்தைப் பத்தி சொல்லி தைரியம் சொன்னேன்.'' கிண்டலுடன் கூறினார்.

பார்வையாலேயே இதமாக அவளை வருடியவன், ''என்ன... என்னைப் பாக்காம இருக்க முடியலையா?'' என்றபடி தன்னுடன் வரும்படிச் சைகை செய்துவிட்டு உள்ளே செல்ல, அவள் பின் தொடர்ந்தாள்.

''ஏம்ப்பா லேட்டாயிடுச்சி.. ஒரு போன் பண்ணி இருக்கலாமே'' என்று கேட்டார் பெரியவர்.

''அப்பா! போலீஸ் ஸ்டேஷன்லே போய் ஒரு கம்ப்ளெயிண்ட் கொடுத்திட்டேன். என்னவோ மனசுல ஒரு உறுத்தல் இருந்தது. இனிமே பயம் இல்லை பாருங்க! அப்புறம் அந்த மேனேஜரோட குடும்பத்தில இருந்து வரவழைச்சி வார்ன் பண்ணிட்டு வரதுக்குள்ளே லேட்டா யிடுச்சி.. நான் போய்க் குளிச்சிட்டுவரேன்!'' அவளிடம் கண்களாலேயே விடைபெற்று விட்டுச் சென்றான்.

அவன் வீட்டுக்கு வந்த பிறகு, எவ்வளவு பெரிய கஷ்டம் வந்தாலும், சமாளிக்கும், தைரியமும், தீர்க்கமும் மனதில் வந்தன.

அன்றிரவு வானம் மேக மூட்டமாய் இருக்க, தோட்டத் திற்குச் சென்று கிணற்று மேடையில் அமர்ந்தாள் தேஜா.

தன் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற பயம் மெல்ல மெல்ல அவளை விட்டு நீங்கி, தீபனின் நினைவாய் ஒரு வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது.

திடீரென, முன்னறிவிப்பின்றி வரும் விருந்தாளியைப் போல், வானம் இருட்டி மழை தூறலாய் விழ ஆரம்பித்து, தீர்த்தம் தெளிப்பது போல் துளிகளாய் சிதறி, தலையில் குளிர்ச்சியாய் ஆசீர்வதிக்கத் தொடங்கியது.

திடீரென்று அருகில் வந்த ஒரு உருவம் அவளைக் குடைக்குள் இழுத்தது. பதறி நிமிர்ந்த போது தீபனின் சுவாசம், அவள் நெற்றிப் பரப்பில் சூடாய் விசிறியது.

அந்த சூட்டில் உடலெங்கும் விரவிப் பரவிய வெப்பம், வியர்வைத் துளிகளாக மாறி, நீரோடையாய் மழையுடன் கலந்து வழிய ஆரம்பித்தன.



பதறி விலகியவளிடம்,''என்ன பயந்திட்டியா? இங்கே என்னை மீறி யார் உன்னைத் தொட முடியும்?'' என்றான் தீபன் சீண்டலாக.

உடனே நிமிர்ந்தாள், ''நீங்க என்ன.. இந்த சாம்ராஜ்யத்து ராஜாவா? உங்களை மீறி என்னை யாரும் தொடக்கூடாதுன்னு இங்கே ஏதாவது சட்டம் போட்டிருக்கீங்களா என்ன?'' கிண்டலாக வந்தது அவள் குரல்.

அவளையே குறும்புடன் ஏறிட்டவன், ''நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் நான் ராஜா தான்... ஆதிபனுக்கு அர்த்தம் என்ன தெரியுமா? மன்னன்!'' என்றான் மென்மையான குரலில்.

மழை நின்றிருக்க, அவன் அருகாமையில் அவள் தன்னை மறந்து நின்றிருந்த போது, இவருக்கும் இடையே இருந்த மாயத்திரை திடீரென்று ஒலித்த இடியோசையால் உடனே விலகியது. தான் உருகி நின்றிருந்த நிலை புரிந்து விலகிய வளுக்கு தன் மீதே நம்பிக்கை போய்விட வேகமாக உள்ளே ஓடி விட்டாள்.

சிறிது நேரத்தில் கீழே வந்து, தனக்கு சாப்பாடு வேண்டாமென்று கூறிவிட்டு மாடிக்குச் சென்றவளுக்கு, வெகுநேரம் உறக்கம் வரவில்லை.

தீபன் தன்னை விரும்புவது புரிந்தாலும், அதற்கு எந்தத் தடையும் இல்லை என்பது தெரிந்தபோதும், மனம் சங்கரின் நினைவில் தடுமாறியது.

ஆண்கள் அனைவருமே சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல நிறம் மாறுபவர்களோ என்ற பயமும் வேதனையும் உள்ளூர ஊடுருவின.

ஆனால், தன்னை ஒரு ஏழைப் பெண் என்று நினைத்துத் தானே தீபன் விரும்புகிறான் என்ற நினைவே, இனிமையைத் தருவதாய்!

திடீரென்ற கதவு தட்டப்பட, திறந்த போது அங்கு தீபன் யோசனையுடன் நின்றிருந்தான்.

"ஏன் சாப்பிட வரலை? பார்வதி அத்தைகிட்ட கேட்டப்போ, சாப்பாடு வேணாம்னு நீ சொல்லிட்டுப் போயிட்டதா சொன்னாங்க!" என்றான்.

"இல்லை. சார்...சாரி... பசிக்கலை தீபன்!"

என்னும் போதே "என்ன என் பெயர் ஒரு சுரத்தே இல்லாம வருது.. ஓகே.. கொஞ்ச நாளானா சரியாயிடும்! அப்புறம், பட்டினி கிடந்தா இப்படித்தான்...வார்த்தையே வராது! வா!" என்று அழைத்துச் சென்று சாப்பிடவைத்தான்.

தனக்காகக் கவலைப்படும் ஒரு ஜீவன் இருப்பது, பெரும் நிம்மதியைத் தர, சிலகாலம் தான் தொலைத்து விட்ட தன் உறவுகளும், நிம்மதியும், ஒரே நாளில் தனை வந்து சேர்ந்தாற் போன்ற ஒரு உணர்வு!

மறு தினத்திலிருந்தே இருவரும் காதல் வானில் சிறகடிக்க ஆரம்பித்தனர். பார்வையிலேயே தங்கள் காதலைப் பரிமாறிக் கொண்டவர்களுக்கு எதிர்பார்த்த தனிமை மட்டும் ஏனோ கிடைக்கவேயில்லை.

தான் இந்த ஊருக்கு வந்த புதிதில் பழகிய தீபனுக்கும், இப்போது இருப்பவனுக்கும் பல வித்தியாசங்கள் இருப்பது புரிந்தது தேஜாவுக்கு!



ஒருநாள் மாலை, பாடம் எடுத்துவிட்டுத் திரும்பும் போது, வள்ளி அவளிடம் மெதுவாக ஆரம்பித்தாள்.

"தேஜா.. எனக்கு ஒரு சந்தேகம்! நீங்க தப்பா நினைக்கலை அப்படின்னா கேக்கறேன்.. பதில் சொல்வீங்களா?"

"ம்... கேளுங்க வள்ளி!" என்றவுடனே,"நீங்க காதலிக்க ஆரம்பிச்சிருக்கீங்கன்னு நினைக்கிறேன்... சரியா?"

மனம் வெகுவாய்ப் பதறிவிட நிமிர்ந்தவளுக்கு, தான் என்ன தீபன் மேல் கொண்ட காதலை நெற்றியிலா ஒட்டிக் கொண்டு நடமாடுகிறோம் என்ற ஒரு பரிதவிப்பு, புதிதாய் எழுந்தது.

ஆனால் காதலில் ஆழ்ந்த மனம், உலகத்தில் தாங்கள் மட்டுமே இருப்பதாக நினைப்பதையும், தன்னைச் சுற்றி, மற்றவர்களிருப்பதை மறந்து விடுவதையும், அவள் அறியவில்லை.

## 11

தேஜாவின் முகத்தில் தெரிந்த பதட்டத்தைப் பார்த்து சிரித்த வள்ளி, "எனக்கு எப்படித் தெரியும்னு பாக்கறீங்களா? நானும் காதலிச்சிருக்கேன் தேஜா.. எங்களோடது லவ் மேரேஜ்தான்!" கூச்சத்துடன் கூறினாள்.

"ஓஹோ.. அதான் என் மனசையும் கண்டு பிடிச்சிட்டீங் களா?" என்றாள் தேஜா குறும்புடன்.

"ஆமாம்.. அவர் யாருன்னு கூட எனக்குத் தெரியுமே!" என்ற போது, தேஜாவுக்கு மூச்சடைப்பது போல் ஒரு உணர்வு!

"ம்.. தீபன் சார் தானே!" வள்ளி கேட்க, முகம் வெட்கத்தில் குப்பெனச் சிவந்தது தேஜாவுக்கு! காதலின் எதிரொலி அவள் கண்களில் தெரிவதாய்...!

"ஒரு மாசமா உங்ககிட்ட இந்த மாற்றத்தை நான் கவனிச்சிட்டுத்தான் வரேன்... எப்படிக் கேக்கறதுன்னு தயக்கமா இருந்தது. இன்னிக்கு நீங்க ரொம்ப சந்தோஷமா இருக்கற மாதிரித் தெரிஞ்சதா, அதான் கேட்டேன். தப்பா நினைச்சிக்காதீங்க!"

"இல்லை.. இந்த விஷயத்தைப் பத்தி எனக்கும் யார்கிட்ட யாவது ஷேர் பண்ணினா நல்லாருக்கும்னு தோணிச்சி.. நீங்க எப்படி எடுத்துப்பீங்களோன்னு தான் சொல்லலை! உங்களது லவ் மேரேஜின்னு தெரிஞ்ச உடனே, ரொம்ப சந்தோஷமா இருக்கு..." என்றவள் வள்ளியின் காதலைப் பற்றி கேட்டாள்.

தாங்கள் காதலித்ததைப் பற்றியும், இரு வீட்டினரும் சம்மதிக்காததால், கோவிலில் திருமணம் முடித்து அதே ஊரில் குடியிருப்பதையும் இரு பக்க உறவினர்களும் அதே ஊரில் இந்தாலும் யாருமே வருவதில்லை என்பதையும் வள்ளி கூறியபோது, அவள் மீது ஒரு பரிதாபம் வந்தது.

"இதுவே ஒரு குழந்தை பிறந்திருந்தா, நாம செஞ்சதை மறந்து நம்ம குடும்பத்தில் இந்நேரம் ஏத்திட்டுப்பாங் களோன்னு இவர் சொல்றப்ப அதுக்காவாவது நான் அம்மாவாகக் கூடாதான்னு ஏக்கமா இருக்கு" என்ற போது அவள் தோளைப்பிடித்து ஆதரவாக அழுத்தினாள் தேஜா.

"கவலைப்படாதீங்க வள்ளி! கடவுளுக்கு எப்போ எதைக் டுக்கணும்னு தெரியும். நிச்சயம் தருவாரு!" என்று மாதானப்படுத்தி விட்டுத் திரும்பினாள்.



தனிமையில் யோசித்த போது தோன்றியது. குழந்தை என்பது குடும்பத்தில் பலமான ஒரு ஆயுதம் என்பது!

ஒரு குழந்தை இருந்து விட்டால், பேரக்குழந்தைகளின் மேல் உள்ள பாசத்தில் என்ன தவறுகள் செய்தாலும் பிள்ளை களை மன்னித்து ஏற்றுக் கொள்வது, வாழ்க்கையில் நிதர்சனமாய்...!

வள்ளியையும், கந்தனையும் பற்றி எண்ணும் போது மனதில் சிறுவலி எழுந்தது அவளுக்கு! கூடவே, தன் காதலும் நினைவு வந்து அதற்கு எந்தத் தடையுமிராது என்ற நிம்மதியும் வந்தது.

ஆனால், அந்த நிமிடமே அவளுடைய நிம்மதியைக் குலைப்பதற்காகவே, வீட்டு வாசலில் வந்து நின்றது அந்த டாக்ஸி.

தேஜா சமையலறைக்குச் சென்ற போது, பார்வதி அவளிடம் "அங்க ஹால்லே, அண்ணனோட ஒன்னு விட்ட தங்கச்சி செல்லம்மா வந்து உக்காந்துருக்காங்க... தன் பெண்ணோட! இனிமே கொஞ்ச நாளைக்கு இங்க அல்லி தர்பார்தான். நீ கூட அவங்ககிட்டே கவனமா இருக்கணும்மா!" என்றார்.

"சரிம்மா!" என்றபடி முன் ஹாலுக்குச் சென்று, புன்னகை யுடன் அவர்களை எதிர் கொண்டாள் அவள்.

சென்னியப்பனும், "இது தான் தேஜா.. என் நண்பனோட மக! பழைய மேனேஜர் இறந்துட்டாரில்லையா? நம்ம சிவாதான் அழைச்சிட்டு வந்தான். ரொம்பத் திறமையான பொண்ணு" என்று சிலாகித்தார்.

கிராமத்து பாணியில், புடவையை நாட்டுக்கட்டாக அணிந்திருந்த அந்த அம்மாவும், இரட்டை ஜடையுடன், மிரட்சியாய் விழித்துக் கொண்டு அமர்ந்திருந்த அந்தச் சிறு பெண்ணும், அவளையே ஆர்வத்துடன் நோக்கினார்.

ஆனால் அந்தப் பெண்மணியின் முகம் உடனே சுருங்கியது. அதற்குள் சென்னியப்பன் தேஜாவிடம் திரும்பினார்.

''தேஜா! இது என்னோட சித்தப்பா பொண்ணு செல்லம்மாள். இவ, ஜெயந்தி!'' அறிமுகப்படுத்தும் விதமாய்க் கூறினார்.

அழகிய ட்யூலிப் மலர்களாய் விரல்களைக் குவித்து, புன்னகைத்தவளைக் கண்டதுமே, அவர் முகத்தில் ஆயிரம் யோசனைகள்!

இவ்வளவு அழகாக கோவில் சிலை போல் இருக்கும் ஒரு பெண்ணை, இந்த அண்ணன் ஏன் வீட்டிலேயே தங்க அனுமதித்தார் என்ற கோபத்துடன், ''இந்தாம்மா! இந்த சாமானெல்லாம் பின்னாடி ரூமில வச்சிடு!'' என்றார் அதிகாரமாக.

''செல்லம்! அவ எங்க வீட்டு மேனேஜர்.. உங்க வீட்டு வேலையாள் இல்லை! தேஜா... நீ போய் சன்னாசியை வரச்சொல்லு!'' என்றார் சென்னியப்பன்.

முதலிலேயே அவர் அவளை உயர்த்திப் பேசியது, செல்லம்மாவின் முகத்தில் கலக்கத்தை வரவழைத்தது. ''இல்லைண்ணா! நானே எடுத்துட்டுப் போறேன்'' என்றபடி எல்லாவற்றையும் உள்ளே எடுத்துச் சென்றார்.



அந்தப் பெண் தேஜாவையே திரும்பிப் பார்த்தபடி செல்ல, அவள் பார்வையில் ஏதோ ஒரு சுவாரசியம் தெரிந்தது.

யோசனையுடன் சமையலறைக்குச் சென்ற போது ''பாத்தியா தேஜா அந்தப் பொண்ணு எத்தனை சின்னவளா இருக்கா! அவளைப் போய் நம்ம தீபனுக்குக் கொடுக்கணும்னு அந்தச் செல்லம்மாவுக்கு ஒரு எண்ணம்! அது இப்ப தான் பத்தாவதே முடிச்சிருக்கு!'' என்றார் பார்வதி.

இவ்வளவு சிறிய பெண் எப்படி தீபனுக்குப் பொருத்தமாக முடியும்? இது தீபனுக்குத் தெரியுமா? என்ற ஆர்வம் எழுந்தாலும், அந்தச் சிறு பெண்ணுடன், அவனை இணைத்து கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

மனதில் கீற்றாய் ஒரு வலியெழ மாடிக்குச் சென்றாள் தேஜா. இரவு வீட்டுக்கு வந்த தீபனும் அவர்களை எதிர்பார்க்கவில்லை என்பதை அவனுடைய முகச்சுளிப்பே கூறியது.

குறும்புச் சிரிப்புடன் அவனையே நோக்கியபடி நின்றிருந்த வளைப் பார்த்தவனுக்கு, ஒன்றுமே புரியவில்லை.

அன்றிரவு சாப்பாட்டை அந்தப் பெண்மணியே பரிமாற, அவள் ஒதுங்கியே இருந்தாள். மனம் முழுவதும் அவன் நினைவே. மனதிற்கு முன்பு பிடித்ததெல்லாம் இப்போது பின் செல்ல, அவன் நினைவு மட்டுமே முதன்மையாய்!

''அக்கா!'' மெதுவாக ஒலித்த அந்தக் குரல் அவளைக் கலைக்கத் திரும்பினால், அந்தப் பெண் ஜெயந்தி அங்கு நின்றிருந்தாள்.

''என்னம்மா?'' என்றபடி அவளை அருகில் அழைத்த போது, ''எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்குக்கா.. ஆனா

அம்மா உங்களோட பேசக்கூடாதுன்னு சொல்றாங்க'' வெகுளியாகக் கூறியவளின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள் அவள்.

பதினாறு வயதிற்குரிய வளர்ச்சியின்றி, ஒல்லியாய் பத்து வயதுப் பெண் போல் காட்சியளித்த அந்தப் பெண்ணைப் பார்த்த போது, பரிதாபமே எழுந்தது.

''அம்மா சொல்றதைக் கேக்கணும்! ஆனா அதையும் மீறி என்னோட பேசணும்னா, அதோ பின்னாடி தெரியுதே அந்த வீட்டுக்கு சாயந்திரம் அஞ்சு மணிக்கு வா... பேசிட்டிருக்கலாம்'' என்றாள்.

''ம்.. சரிக்கா'' என்று மகிழ்ச்சியுடன் தலையசைத்து விட்டு அந்தப் பெண் சென்ற பிறகு சாப்பிடும் நேரம் முழுவதும், செல்லம்மா, பார்வதியை ஏவிக் கொண்டே இருந்தார்.

மறுநாளிலிருந்து அங்கு செல்லம்மாவின் காவலிருந்ததால் அவர்கள் இருவருக்கும் தனிமை என்பதே கைவசப்படாமல் போனது.

தீபன் எங்கு சென்றாலும் உளவறிவது போல் சுற்றிக் கொண்டிருந்த அந்தப் பெண்மணியைப் பார்த்தபோது, அவளுக்கு சிரிப்பு தான் வந்தது.

அவனுக்கும் எரிச்சல் தான் என்பதை அன்று மில்லுக்குக் ளம்புவதற்கு முன், அவளைத் தேடி வந்தவனின் முகமே றை சாற்றியது.

''தேஜீ... இப்பல்லாம் நீ ஏன் என் கண்ணிலேயே டறதில்லை. மாடிக்கு ஓடி ஓடிப் போயிடறே? உன்னைப்



பாக்கறதுக்குள்ளே காத்திருந்து ஏமாந்து போக வேண்டியதா இருக்கு'' செல்லக் கோபத்துடன் கேட்டான்.

'தேஜீ' என்று காதலுடன் அழைத்த அவன் வார்த்தைகளால், தீபங்கள் சிலிர்த்தது போல் உள்ளே ஒரு ஒளி வந்தது.

ஒரு பெரு மூச்சுடன், ''உங்க அத்தை ஏதாவது நினைச்சிக்கப் போறாங்கன்னு எனக்கு ரொம்ப பயமா இருந்தது தீபன்! அதான் வீணா ஏன் பிரச்சனை பண்ணணும்னு மாடியிலேயே இருந்திட்டேன்'' என்றாள்.

''அவங்க நினைக்கறதைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே? அவங்க இந்த வீட்டு கெஸ்ட்.. ஆனா நீ அப்படி இல்லை! சீக்கிரமே இந்த வீட்டுக்கு உரிமையாகப் போறவ! நீ எதுக்கு பயப்படணும்?'' இயல்பாகக் கூறினான்.

விழிகள் விரிய ஒரு கணம் அவள் பிரமித்து நின்ற போது, ''ஏய்.. என்ன முழிக்கறே? என்னை நம்பலையா?'' என்றபடி, செல்லமாய் அவள் கன்னத்தில் தட்ட, நினைவுகளுடன் சேர்ந்து உணர்வுகளையும் உரசிப் பார்த்தது, அவன் தொடுகை!

வெட்கத்தில் கன்னங்களில் இரு ரோஜாக்கள் மலர, அவள் தலைகுனிந்த போது, அவன் என்ன சொல்லி இருப்பானோ, செல்லம்மாவின் குரல் நாராசமாய் இடைப் புகுந்தது.

''தீபன்! அப்பா அங்க உன்னைத் தேடிட்டு இருக்காங்க.. இங்க என்னப்பா பண்றே?'' என்றபடி உள்ளே நுழைந்தார்.

மெதுவாகத் திரும்பியவன், ''நான் தேஜாகிட்ட முக்கியமாப் பேச வேண்டியிருக்கு.. பேசிட்டு வரேன்னு அப்பாகிட்ட சொல்லுங்க. அப்புறம்.. போய் ரெஸ்ட் எடுங்க. அதுக்குத் தானே வந்தீங்க. இனிமே இந்த மாதிரி வேலைக்கு எல்லாம்

சன்னாசிய அனுப்புங்க போதும்'' கோபப் பார்வையுடன் கூறியபோது, இறுகிய முகத்துடன் திரும்பிச் சென்றார் அவர்.

அவருடைய கோபம் முழுவதும் தேஜாவிடமே சென்று, எப்படியாவது அவளை இங்கிருந்து விரட்டி விட வேண்டுமென்ற வேகம் எழுந்தது.

அன்று மாலையில் வள்ளி வீட்டில் இருந்த போது மாடியிலிருந்த அவளுடைய அறையில் லைட் வெளிச்சம் தெரிவதைக் கண்டு திகைத்துப் போனாள் தேஜா.

இந்த நேரத்தில் தன் அறைக்குள் செல்வது யாராக இருக்குமென்று யோசித்த போது, ஏனோ செல்லம்மாவின் நினைவு வந்தது.

வீட்டிற்குத் திரும்பியதும் எதிர்பாராத விருந்தாளியாக அவளுடைய அறைக்கு வந்தாள் ஜெயந்தி.

''என்னம்மா.. என்ன வேணும்?'' என்றபடி அவளை தன்னருகில் அழைத்து, தேஜா அமர வைத்தபோது அவள் பார்வை மிரட்சியுடன் பெட்டியிடம் சென்றது.

தயக்கத்துடன் ''அக்கா! அந்தப் பெட்டியில எங்கம்மா அவங்களோட அட்டிகையை வச்சதை நான் பாத்தேன். இப்ப சமீபத்துல பாத்த பழைய படத்துல கூட இப்படித்தான் செஞ்சி, ஒரு அம்மா அந்த அக்காவ மாட்டி வச்சதையும் நான் பார்த்தேன். எங்கம்மா ரொம்ப சினிமாப் பைத்தியம்! எனக்கு உங்களைப் பாத்தா பாவமா இருந்தது. அதான் சொன்னேன்'' என்றாள் கம்பிய குரலில்.

மனதில் சுருக்கென்று முள் தைத்தது போல் சிறுவலி எழுந்தாலும், ''நான் ஒண்ணு சொன்னாக் கேப்பியா? இந்த



நெக்லஸை உங்கம்மா பெட்டியிலயே வச்சிடு! மத்ததை நான் பாத்துக்கறேன்'' என்றபோது, அவளும் தர்மசங்கடத்துடன் சரியென்றாள்.

நகையுடன் அவள் கீழே சென்றதும், மனம் இறுகிப்போய் அமர்ந்திருந்தாள் தேஜா. வெளியில் தெரிந்த இருளை விழிகள் ஊடுருவ, ஒரு சோகப் பந்து நெஞ்சுக்குள் நீங்காமல் மையம் கொண்டது.

## 12

தீபன் வந்து சிறிது நேரத்திற்கெல்லாம் கீழே ஒரு சப்தமாக இருக்கவே, இதழ்களில் ஒரு வறட்டுப் புன்னகையுடன் இறங்கி வந்தாள் தேஜா.

செல்லம்மா தன் அண்ணனிடம் புலம்ப ஆரம்பித்திருந்தார். ''அண்ணா! இதுவரைக்கும் இந்த மாதிரி நடந்ததே இல்லை. புதுசா வந்திருக்கறது இந்தப் பொண்ணுதான். அவளோட பொருளை எல்லாம் நான் சோதனை போடணும்'' உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தார்.

தன் அறையிலிருந்து எல்லாவற்றையும் கேட்டபடி வெளியே வந்த தீபன், கூடி இருந்த வேலையாட்களிடம்,''எல்லோரும் போங்க. இங்க என்ன நடக்குது? ஏன் இப்படிக் கத்தறீங்க. இது உங்க வீடு இல்லை. ஒரு விருந்தாளியாக இங்க வந்திருக்கோம்கிறதை மறந்துட வேணாம்.

''கர்ணனுக்கு கவச குண்டலம் மாதிரி, அந்த நெக்லசை தூங்கறப்ப கூட கழட்ட மாட்டீங்க? இப்ப அதக் காணோம்னு பொய் சொல்றீங்களா?'' கடுமையாகக் கேட்டான்.

சென்னியப்பனும், ''செல்லம்மா! போய் நல்லாத் தேடிப் பாரு. இந்த மாதிரி ரசாபாசமெல்லாம் தீபனுக்குப் பிடிக்காது'' பொறுமையின்றிக் கூறினார்.

''என்னண்ணே. நீங்களும் இப்படிப் பேசறீங்க?'' எனும் போதே முன்னால் வந்த தேஜா,''ஒரு நிமிஷம் நான் பேசலாமா அங்கிள்?'' என்றபோது அலட்சியமாக அவளை முறைத்தார் செல்லம்மா.

''நான் வள்ளி வீட்டில இருந்து திரும்பி வந்தப்ப, என் ரூமில அவங்களோட அட்டிகை கீழே கிடந்தது. உடனே அதை ஜெயந்தி கிட்ட குடுத்துட்டேன். அவங்க பெட்டியிலயே பாக்கச் சொல்லுங்க. ஏம்மா என் ரூமுக்கு வந்தீங்க? என்கிட்டப் பேசறதுக்கா? அப்பதான் உங்க நகை தெரியாம கீழே விழுந்துடுச்சி போலருக்கு'' என்றாள் இயல்பாக.

வெறுப்புடன் அவளையே உறுத்து விழித்தவள், ''ஏய்... ஜெயந்தி! இங்க வா. இவ சொல்றது உண்மையா?'' என்று இரைந்தார்.

''ஆமாம்மா! நான் உன்னைத் தேடிப் பார்த்தேன். நீ பக்கத்து வீட்டுக்குப் போனதா பார்வதி பெரியம்மா சொன்னாங்க. அதான் உன் பெட்டியிலயே வெச்சிட்டேன். இந்தாம்மா''

கோபத்தில் விழிகள் மின்ன ''என்னத்தை... விஷயம் வேற ாதிரிப் போகுது. நீங்க ஏன் தேஜாவோட ரூமுக்குப் ானீங்க? இப்படி அங்க இங்க போறதை விட்டுட்டு,



பேசாம உங்க ஊருக்குப் போற வழியப்பாருங்க. நாளைக்கே நீங்க கிளம்பலாம்'' உறுமி விட்டுத் திரும்பினான் தீபன்.

''தேஜா.. ஒரு நிமிஷம் வா. உன்னோட பேசணும்'' என்றபடி அவன் வெளியில் சென்றபோது மவுனமாகப் பின் தொடர்ந்தாள் அவள்.

தோட்டத்திற்கு சென்றவுடன் திரும்பியவனின் விழிகளில் கொவ்வைச் சிவப்பு.

''தேஜ்... சாரி! அவங்களுக்கு உன்மேல் ஏதோ கோபம். அதான் இப்படிப் பேசிட்டாங்க. எனக்காக இதப் பெரிசா எடுத்துக்காதே ப்ளீஸ்'' பரிதவிப்புடன் வந்தன வார்த்தைகள்.

'இவ்வளவு நெருங்கிய உறவுகளை விட உனக்கு நான் எப்படி இவ்வளவு முக்கியமாகிப் போனேன்?' என்ற கேள்வியும், அதனால் வந்த தவிப்பும் மனதில் போட்டியிட கலங்கிய விழிகளுடன் நெகிழ்ந்து போய் அவள் நிமிர்ந்த போது பதறி விட்டான் தீபன்.

''என்னாச்சு தேஜ். ஏன் இப்ப அழறே?''

ஒரு விம்மலுடன் ஓடிச் சென்று அவன் தோள் மீது சரிந்தபோது, இத்தகைய அன்பைப் பெறுவதற்கு என்ன தவம் செய்து விட்டேன் என்ற உணர்வில் நெக்குருகிப் போனாள் அவள்.

உடலில் சிறு நடுக்கம் ஓட, அவள் தலையை வருடி சமாதானப் படுத்தியவன், ''அவங்க உன்னை ரொம்பக் காயப்படுத்திட்டாங்களா?'' மென்மையாகக் கேட்டான்.

அவள் 'இல்லை' என்று தலையசைத்தபடி நிமிர்ந்த போது,''எனக்கு நீ வேணும் தேஜ். எப்பவுமே எனக்காக

கவலைப்பட, எனக்காக காத்திட்டிருக்க, எனக்காக உருக, எனக்காக அழ.. எல்லாத்துக்கும்'' உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவன் கூறவும் அவளுடைய மவுனம் கரை உடைத்தது.

மெல்ல நிமிர்ந்தவள்,''நிச்சயமா நான் உங்களோட இருப்பேன் தீபன். என் இறுதி மூச்சு வரைக்கும்..ஐ லவ் யூ'' என்றபடி அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டவளுக்கு வெட்கம் முதன் முதலாக விடைபெற்றுச் சென்றது.

மறுநாள் காலையில் ஊருக்கு கிளம்பிச் சென்ற செல்லம்மா, ஜெயந்தியை அங்கேயே விட்டுச் சென்றார்.

''அண்ணா! ஜெயந்தி இங்கே ஒரு பத்து நாள் இருக்கட்டும். அவர் வந்து அழைச்சிட்டுப் போவாரு'' என்றபடி தேஜாவை ஒரு கோபப் பார்வை பார்த்து விட்டுக் கிளம்பினார்.

அவளுக்கு கோபம் வருவதற்கு பதில் சிரிப்பு தான் வந்தது. இந்த வயதில் எவ்வளவு அல்பத்தனமாக சினிமாக்களில் வரும் 'சீப்'பான ஒரு வில்லியைப் போல் யோசித்து செயல்பட்டு இன்று பூமராங் போல் திரும்பிச் செல்லும் அவரின் அறியாமை, மனதில் சிறு சஞ்சலத்தை வரவழைத்தது.

''அக்கா! இனிமே ஜாலிதான். நல்ல வேளை அம்மா போயிட்டாங்க'' என்ற ஜெயந்தியை அணைத்துக் கொண்டாள்.

''அப்படியெல்லா சொல்லக்கூடாது. என்ன இருந்தாலும் அவங்க பெரியவங்க இல்லையா? என் விஷயத்தில்



எப்படியோ உனக்கு நிச்சயமா அவங்க நல்லது தான் செய்வாங்க'' என சமாதானப்படுத்தும் விதமாகக் கூறினாள்.

உடனே அவள், ''இல்லக்கா எனக்கு மேல படிக்கணும்னு ரொம்ப ஆசை. டென்த்ல 85 சதவீதம் வாங்கி இருக்கேன். இந்த அம்மா தான் போன வருஷத்தோட என் படிப்ப நிறுத்திட்டாங்க'' என்றாள் குறையாக.

''சரி.. நான் உங்க மாமாகிட்டப் பேசிப் பார்க்கிறேன். அவர் சொன்னா ஒரு வேளை அவங்க கேப்பாங்களோ என்னவோ'' புன்னகையுடன் கூறினாள்.

மறு நிமிடத்திலிருந்து ஜெயந்தி அவளுடனே ஒட்டிக் கொண்டு சுற்றி வர, இதுவும் ஒரு வேளை அந்த செல்லம்மாவின் ஏற்பாடோ என்று கூட நினைத்தவள், மறுகணம் அந்த வெகுளிப் பெண்ணின் பாசத்தைப் புரிந்து கொண்டாள்.

அந்த வியாழனன்று மாலை இருவரும் டவுனுக்குக் கிளம்பும்போது, அதிசயமாக மில்லிலிருந்து சீக்கிரமே வந்து விட்டான் தீபன்.

இருவரையும் குறும்புடன் நோக்கியவன் ''எங்கே டவுனுக்கா? மஹாராணி உலாக் கிளம்பியாச்சா? கூட இவ என்ன தோழிப் பெண்ணா?'' இடுங்கிய கண்களுடன் கேட்டான்.

அவனுடைய கிண்டலும் கேலியும் புரிந்து மவுனமாக நின்றவளிடம், ''ஒரு நிமிஷம் இரு. நானும் வந்திடறேன்'' என்றபடி உள்ளே சென்று முகம் கழுவித் தயாராக வந்து அவளுடன் சேர்ந்து கொண்டான்.

''அக்கா.. அப்ப நாம காரில போறோமா?'' மகிழ்ச்சித் துள்ளலுடன் கேட்டவளிடம்,''ஆமாம் வாண்டு. என்ன சந்தோஷம் தானே?'' என்றபடி சிரித்தவனைப் பார்த்த போது, இருவருக்குமிருந்த வயது வித்தியாசம் ஏன் செல்வம்மாவுக்கு உறைக்கவில்லை என்ற கேள்வி எழுந்தது.

சென்னியப்பன் வழியனுப்ப மூன்று பேரும் காரில் கிளம்பினர். டவுனுக்குச் சென்று அங்கு ஜெயந்திக்கு நகபாலிஷ், வளையல், தோடு, மணி, கிளிப் எல்லாம் வாங்கிய பிறகு தனக்கு வேண்டியதையும் வாங்கிக் கொண்டாள்.

ஒரு துணிக்கடைக்கு அவர்களை அழைத்துச் சென்ற தீபன், அவர்களிருவரையும் சுடிதார் எடுத்துக் கொள்ளும்படி கூறிவிட்டு ஆண்களுக்கான பிரிவிற்கு சென்றான்.

தனக்கு நிறைய உடைகள் இருப்பதால் அவள் ஜெயந்திக்கு தேர்வு செய்ய ஆரம்பித்தாள். அவளுக்குப் பிடித்த மாதிரி இரண்டை எடுத்து வைத்த போது தான், எதிரில் தொங்க விடப்பட்டிருந்த சுடிதாரிடம் அவள் கவனம் சென்றது.

டசர் சில்க்கில் மிக அழகாக தையல் வேலைகள் செய்யப்பட்டு அவளுக்குப் பிடித்த வகையில் இருந்ததால் விலை விசாரித்து விட்டு அடுத்த வாரம் வந்து அதை வாங்கிச் செல்வதாக கூறி எடுத்து வைக்கச் சொன்னாள்.

இப்போது வாங்கினால் அதற்கு அவன் பணம் கொடுத்து விட்டால் பிறகு மறுக்க முடியாதென்று தோன்றவும், அங்கிருந்து நகர்ந்தபோது தன் வேலைகளை முடித்துக் கொண்டு தீபனும் வந்து விட்டான்.

தாங்கள் எடுத்து வைத்த சுடிதாரை பில்லுக்கு அனுப்பி விடும்படி கூறிவிட்டு பில் போடும் இடத்துக்கு வந்த போது



''நீங்க ரெண்டு பேரும் போய்க் காரில் இருங்க. நான் எடுத்திட்டு வரேன்'' என்றான்.

தான் கொண்டு வந்த கவர்களை டிக்கியில் வைத்து விட்டு வந்தவன் ''வேற எங்கேயாவது போகணுமா? இல்லைன்னா, நான் உங்களை ஒரு இடத்துக்கு கூட்டிட்டுப் போறேன்'' என்றபடி ஐஸ்கிரிமை வாங்கி வந்து இருவரிடமும் கொடுத்தான்.

பிறகு கார் வேறு வழியில் சென்று அந்த மலைக்கோயிலின் அடிவாரத்தில் நின்ற போது, மனம் சிலிர்த்துப்போனது.

''இன்னிக்குப் பவுர்ணமி! இந்த முருகன் கேட்டதைக் கொடுப்பவன். ரொம்ப விசேஷமான கோவில் இது. நான் ரொம்ப சந்தோஷமா இருந்தா, வர்ற ஒரே இடம் இது தான்'' மென்மையாகக் கூறினான் தீபன்.

மலையேறிச் சென்று இனிமையான பரவச உணர்வு மனதைத் தீண்ட முருகனை தரிசித்து விட்டுத் திரும்பியபோது தான், அங்கு வள்ளியையும், கந்தனையும் சந்தித்தனர்.

சிறிது நேரம் பேசியபிறகு, ஜெயந்தியை வள்ளி தங்களுடன் வைத்துக் கொள்ள, இயற்கையழகை ரசித்தபடி சென்று அங்கிருக்கும் சுனையருகே இருவரும் மவுனமாக அமர்ந்திருந்தனர்.

முழு நிலவு, பொற்சாரலாய் அந்த இடத்தை நனைத்திருந்தது. தன் கைகளை எடுத்து அவன் தன் பிடியில் வைத்துக் கொண்ட போது தேஜாவுக்கு சிறு நடுக்கத்துடன் காதலின் வலி கூட இன்பமாய் பறவைகளின் மொழி கூடப் புரிய ஆரம்பிப்பதாய்..

தீபன் குனிந்து அவள் முகத்தையே நோக்கியபோது, மின்னுகின்ற அவள் கன்னங்களில் இளம்பிறையாய் நிலவு ஒளிர்ந்தது.

''தேஜீ! என்னால இனிமே காத்திருக்க முடியாது. உனக்காக ஒவ்வொரு நிமிஷமும், என் மனசு துடியாத் துடிக்கிறப்ப, என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்கவே என்னால முடியலை. இது மாதிரி தெரியாம சந்திக்கறதெல்லாம் இனிமே வேணாம். நீ எந்த வீட்டுப் பெண்ணோ, ஏழையோ எனக்குக் கவலையில்லை. எனக்கு நீ வேணும். நான் நாளைக்கே அப்பாகிட்ட இதுபத்திப் பேசப் போறேன்'' என்றான் அவளையே ஊடுருவும் விழிகளுடன்.

''எனக்கு பயமா இருக்கு தீபன், அங்கிள் இதுக்கு சம்மதிப்பாங்களா?'' பயத்துடன் கிசுகிசுப்பாய் வந்தது அவள் குரல்.

''நிச்சயமா ஒத்துப்பார். நான் கல்யாணம் பண்ணிக்க மறுக்கறதிலே அவருக்கு ரொம்ப வருத்தம். இந்த நிலைமையில் ஒரு கழுதையக் கொண்டு போய் நிறுத்தினாக் கூட, உடனே சரின்னுடுவாரு'' என கேலியாகக் கூறினான்.

''ம்.. அப்ப என்னைக் கழுதைங்கறீங்களா?'' என்று செல்லமாக கோபித்தவளை, மென்மையாக அணைத்துக் கொண்டான் தீபன்.

## 13

**வீ**ட்டிற்குச் சென்ற பிறகு தன்னுடைய கவர்களைத் தனியே எடுத்த வைத்தவன், ஜெயந்திக்கு வாங்கியதை மட்டும் கொடுத்த



போது கூச்சத்துடன் ''தேங்க்ஸ் மாமா'' என்றபடி அதைப் பெற்றுக் கொண்டாள் அவள்.

சாப்பிட்டு விட்டு மாடிக்குச் சென்றபோது சிவநேசனின் நினைவு வந்து மனம் குற்றவுணர்ச்சியில் நிறைந்தது.

காதல் மனிதனை எவ்வளவு சுயநலப் படுத்துகிறது என்பது புரிந்தது.

அவரிடம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்கின்ற மனது, இதுவரை தன் காதலை மட்டும் பொக்கிஷமாய் நெஞ்சக் கூட்டுக்குள் மறைத்து வைத்தது மட்டும் ஏனென்று புரியவில்லை.

இன்று எப்படியாவது அவரிடம் எல்லாம் கூறிவிட வேண்டும் என்று பெட்டியிலிருந்து தன் 'செல்லை' உயிர்ப்பித்து அவருடைய எண்ணை அழுத்திய போது, உடனே எடுத்தவரின் குரலில் மிருந்த மகிழ்ச்சி!

''தேஜா! எப்படி இருக்கேம்மா'' குரல் விட்டு விட்டு வரவே சிக்னல் சரியாகக் கிடைக்காததால் ஜன்னலருகே சென்று பேச ஆரம்பித்தாள்.

''அங்கிள்.. போன வாரம் கூட ட்ரை பண்ணேன்... உங்க லைன் கிடைக்கவே இல்லியே? எப்படியிருக்கீங்க?''

''நல்லாருக்கேன்மா.. இப்ப நான் லண்டன்லே இருக்கேன். நேத்து தான் வந்தோம். கவிதாவுக்கு சீக்கிரமே டெலிவரியாயிடுச்சிம்மா! நானும் ஆண்ட்டியும் குழந்தையப் பார்த்துக்கறதுக்காக இங்கே வந்திருக்கோம். எட்டு மாசத்துலயே ப்ரிமெச்சூர் டெலிவரி! குழந்தை இன்கு பேட்டர்ல இருக்கு! ப்ளான் படி இல்லாம ஒரு மாசம் முன்னாடியே வரமாதிரி

ஆயிடுச்சி! அவசரமாகக் கிளம்பினதில உன்கிட்ட சொல்ல முடியலைம்மா..." என்றார்.

"பரவால்லை அங்கிள்! கவிதாவுக்கு கங்கிராட்ஸ் சொன்னேன்னு சொல்லுங்க... உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா? ஆண்ட்டியையும் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லுங்க."

"ம்.. சொல்லிடறேன்! நம்ம ப்ளான் எவ்வளவு தூரத்துல இருக்கு... அங்க நீ போய் கிட்டத்தட்ட எட்டு மாசமாகப் போகுது. தீபனை உனக்குப் பிடிச்சிருக்கா?"

"அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன் அங்கிள், அவர் எப்படி இருப்பாரோன்னு பயத்தோட தான் நான் இங்கே வந்தேன்... ஆனா நீங்க சொன்ன மாதிரி அவர் ரொம்ப நல்லவர்னு பழகினப்புறமா தெரிஞ்சிக்கிட்டேன்....ஒரு வருஷம் இங்கேயே தங்கிப் பார்த்து அப்புறம் என் முடிவச் சொல்றேன்னு உங்ககிட்ட நான் சொன்னேன் இல்லையா? ஓகே அங்கிள்! எனக்கு அவரைப் பிடிச்சிருக்கு.. சென்னி அங்கிளும் ரொம்ப நல்லவரா இருக்காரு...

"தீபனைக் கொஞ்சம் கொஞ்சமா அப்சர்வ் பண்ணி நல்லவர்னு தெரிஞ்சதுக்கப்புறம் தான், என் மனசு அவரை நம்பவே ஆரம்பிச்சது. அவர் காதலையும் ஏத்துக்கிட்டேன்!" என்று முடித்தாள்.

"அப்ப நான் இந்தியா வந்தவுடனே கல்யாணம் தான் அப்படின்னு சொல்லு" வாழ்த்திவிட்டுப் போனை வைத்தார் சிவநேசன். அவளுக்குப் பின்புறம் எதுவோ தொப்பென விழுந்த சப்தம் கேட்டுத் திரும்பினாள், துணிக்கடையிலிருந்து வாங்கி வந்த ஒரு கவர் கீழே விழுந்து கிடக்க, எதிரே



ரத்தமெனச் சிவந்த விழிகளுடன் அறை வாசலில் அவளையே உறுத்தபடி இரை தேடும் புலியைப் போல் நின்றிருந்தான் தீபன்.

"வெல்டன் மிஸ் தேஜஸ்வினி! ஒருத்தனைப் பார்த்துப் பழகி, அவன் நல்லவனா கெட்டவனா, வசதியானவனான்னு தெரிஞ்சிக்கிட்டு அப்புறம் காதலிக்க ஆரம்பிச்சேன்னு சொல்றியே.. உனக்கு வெக்கமா இல்லை? காதல்ங்கிற வார்த்தையோட புனிதம் தெரியுமா உனக்கு...? ஒருத்தரைப் பாத்தவுடனே எந்தத் தடையும் இல்லாம இயல்பா அப்படியே மனசு உருகிப் பிரவாகமா பொங்கி வரதுக்குப் பேர்தான் காதல்!

"என்னைப் பார்த்துப் பழகி, என் குணத்தை நல்லா ஆராய்ஞ்சு, அதுல நம்பிக்கை வந்ததுக்கப்புறம் தான் நீ காதலிக்க ஆரம்பிச்சேன்னு நினைக்கும் போதே, காதல்ன்ற அற்புதமான உணர்வை எவ்வளவு கொச்சைப் படுத்தியிருக் கேன்னு இப்பத்தான் எனக்குப் புரியுது.

"சே! நீ இவ்வளவு கேவலமா இருப்பேன்னு நான் நினைக்கவே இல்லை.. இந்த நிமிஷம், உலகத்திலேயே நான் வெறுக்கற ஒருத்தி இருக்கான்னா.. அது நீ தான்!

"என்ன சொன்னே? ஒரு வருஷம் இந்த வீட்டிலேயே தங்கி பழகிப் பார்த்தப்புறம் உன் முடிவச் சொல்றேன்னு தானே? என்ன நவீன சுயம்வரம் நடத்தறீங்களா ரெண்டு பேரும்...?

"எவ்வளவு ப்ளான் பண்ணி இங்கே வந்து, இன்ன சென்ட்டா நடிச்சி, எல்லாருக்கும் உதவற மாதிரி பாவனை பண்ணி நல்ல பெயர் வாங்கிட்டு என்னை வளைச்சிப்

போடலாம்னு பாத்திருக்கே? எல்லாம் என் பணத்துக்காகத் தானே?'' கோபமும் விரக்தியும் கலந்த குரலில் உறுமினான்.

கண்ணீர் வழிய பதட்டத்துடன நிமிர்ந்தவள் ''இல்லை! நிச்சயமா பணத்துக்காக இல்லை.. என்கிட்ட இல்லாத பணமா? இதை விட அதிகமா இருக்கு.. நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேக்கறீங்களா?'' ஒரு இயலாமையோடு கதறினாள்.

''ஓ.. அதிலயும் பொய்யா?'' இகழ்ச்சியும் விரக்தியும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன... அவன் வார்த்தைகளில்!

''ப்ளீஸ்... நான் எதனால அப்படி அங்கிள்கிட்ட சொல்லிட்டு இங்கே வந்தேன்னு காரணம் சொன்னாத்தான் உங்களுக்குப் புரியும், ஒரு அஞ்சு நிமிஷம் நான் சொல்றதக் கேளுங்க...'' தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டுமென்ற தவிப்பு தெரிந்தது அவளிடம்.

''பாவி.. இன்னும் எத்தனை பொய்களை உனக்குள்ளே ஒளிச்சி வச்சிருக்கே? ஓ காட்! எனக்கு மட்டும் ஏன் இப்படி? நான் உயிரா விரும்பின எல்லாருமே என்னை விட்டுட்டு உடனே விலகிப் போயிடறாங்க... முதல்லே அம்மா... இப்ப நீ...!

''என்னை உயிரோட கொன்னுட்டு, என் உணர்வுகளை ஒரு நாளில குழி தோண்டிப் புதைச்சிட்டே! சே. எவ்வளவு மெட்டீரியலிஸ்டிக்கா இருந்திருக்கே.. நான் தான் ஏமாந் திட்டேன்! ஆனா.. முதன் முதலா ஒரு துரோகிய, யநலவாதிய, சந்தர்ப்ப வாதிய, இனம் கண்டு கொள்ள டிஞ்சதேன்னு ஒரு சின்ன நிம்மதி!



''ஏய்.. இது தான் நான் உன்னைப் பார்க்கற கடைசி நிமிஷமா இருக்கணும்.. நாளைக்குக் காலையில உன் கணக்கை செட்டில் பண்ணிடறேன்.. நீ இங்கிருந்து கிளம்பிடணும்.. அதுவும் என் கண்ணில படாம! கெட்லாஸ்ட்!'' எரிமலையாய் தகித்த மனதுடன் கூறி விட்டுத் திரும்பிச் சென்ற தீபனை, அவள் பார்வை மறைத்தது.

அருவியாய் கண்ணீர் வழிய ஆரம்பிக்க,''ப்ளீஸ்... தீபன்... நான் என்ன சொல்றேன்னு...''

அதைக் கேட்பதற்கு அவன் அங்கு இல்லை. அவளை விட்டு அவன் வெகு தூரம் விலகிச் சென்றிருந்தான். அவளுடைய இதயத்தை மட்டும் சுமந்து அவன் சென்ற போது, தேஜா வேரினை இழந்த மரம் போல் சரிந்து விழுந்தாள்.

நெஞ்சம் இரண்டாகப் பிளக்க, ''தீபன்..'' என்று கதறியவள், தன் உயிரும் கரைந்து விடும் போல அழ ஆரம்பித்தாள்.

முதன் முதலாக அவளுடைய ஆசை புரிந்து அவன் வாங்கி வந்த முதல் பரிசான அந்த சுடிதார், அவளைப் போலவே தேற்றுவாரின்றித் தரையில் கிடந்தது.

## 14

தன்னுடைய அறைக்கு வந்த தீபனுக்கு மனம் முழுவதும் ரணமாகி வலித்தது.

தன் முதல் காதல். மொட்டிலேயே கருகிய கொடுமையைத் தாங்க முடியாமல் வாடிப் போயிருந்தாள் தேஜா.

அவனைத் தூக்கி எறிந்து விட்டுச் செல்ல ஒரு நிமிடம் கூட ஆகாது என்பது புரிந்து மறுநிமிடமே, தன் உயிருக்குள்ளி ருக்கும் அவனை அவ்வளவு சுலபத்தில் தன்னால் விடுவிக்க முடியாதென்ற நிஜம் புரிவதாய்!

படகின் இரட்டைத் துடுப்பைப் போல் மனம் காதலுக்கும் தன்மானத்துக்கும் இடையே போராடியது.

இரவு முழுவதும் அழுதவள் ஒரு நொடி கூடக் கண்ணயரவில்லை. தன் பக்கமுள்ள நியாயத்தை அவன் கேட்க மறுப்பது வேறு மனதை உலைக்களமாய் ஆக்கியது.

விடிந்தும் எழ முடியாமல் தீபனின் வார்த்தைகள் உளியாய் மனதில் துன்பத்தை செதுக்க, மெல்ல எழுந்து குளித்து விட்டுத் துணிகளை அடுக்கும் போது மனதின் மூலையில் சிறிதாய் ஒரு நப்பாசை!

இப்போது போய்ப் பேசினால் அவன் தன்னைப் புரிந்து கொள்வானா என்று குழப்பமாய் யோசிக்கும் போதே, ஜெயந்தி பதட்டத்துடன் ஓடி வந்தாள்.

''அக்கா.. பெரிய மாமாவுக்கு உடம்பு முடியலை. தீபன் மாமாவும் மில்லுக்குப் போயிட்டாங்க! பெரியம்மா உங்களை உடனே அழைச்சிட்டு வரச் சொன்னாங்க.''

அவள் பதறி எழுந்து கீழே சென்ற போது, பாத்ருமில் விழுந்து கிடந்த சென்னியப்பனைப் படுகையில் கிடத்தி யிருந்தனர். மயக்க நிலையில் உணர்வின்றி இருந்தவரைக் கண்டதும் பயந்து போய் உடனே காரை எடுக்கும்படி கூறிவிட்டு, முன்பு அவரை அனுமதித்திருந்த மருத்துவ மனைக்கே அழைத்துச் சென்றாள்.



தீபனிடம் போனில் தெரிவிக்கும்படி ஜெயந்தியிடம் கூறியவள், அவளுக்கு வள்ளியைத் துணைக்கு வைத்து விட்டு, பார்வதியையும் உடன் அழைத்துக் கொண்டாள்.

சென்னியப்பன் உடனே ஐ.சி.யூ.வில் அனுமதிக்கப்பட்டார். வெளியில், அவளும் பார்வதியும் தவிப்புடன் காத்திருந்த போது தீபன் வேகமாக வருவது தெரிந்தது.

நேரே பார்வதியிடம் வந்தவன் நடந்ததை விசாரித்து விட்டு உடனே சீஃப் டாக்டரின் அறைக்குச் சென்றான். இதய வீணையின் நரம்பொன்று அறுந்தது போல் தவிப்புடன் காத்திருந்த தேஜாவின் விழிகளில் கண்ணீர்த் துளிகள்!

திரும்பி வந்த தீபனின் முகம், கவலை ரேகைகளை சுமந்திருந்தன. அவளைக் கண்டதும் வெறுப்புடன் ஒரு கணம் கண்களை இறுக மூடித்திறந்தவன், கோபத்துடன் திரும்பிக் கொண்டான்.

அவனருகில் சென்ற பார்வதி,''அப்பாவுக்கு இப்ப எப்படிப்பா இருக்கு?'' டாக்டர் என்ன சொன்னார்?'' தவிப்புடன் கேட்ட போது,''டாக்டர் உள்ளே இருக்காரு.. ஒண்ணும் தெரியலை'' என்றான் கம்மிய குரலில்.

உடனே அவனருகில் சென்று, அவன் கோபம் துடைக்க வேண்டும் போல் ஒரு வேகமும், உனக்கு எந்தக் காலத்திலும் நான் இருக்கிறேன் என்று ஆறுதல் கூறி அவன் அலைப் புறுவதைக் குறைக்கவும் எண்ணிய மனது, நேற்றைய நினைவில் சிதறியது.

பிறகு காத்திருந்த மணித்துளிகள், அடுத்து என்ன நடக்குமோ என்ற பயத்தை விதைத்து, பெரும் நரகமாய்!

அப்போது வெளியில் வந்த சீஃப் டாக்டர், தீபனிடம் வந்தார்.

''அப்பாவுக்கு இப்ப ஒண்ணும் பயமில்லை. கீழே விழுந்ததில் கை மட்டும் ஃப்ராக்சர் ஆகியிருக்கு. உடனே கொண்டு வந்து அட்மிட் பண்ணிட்டதால ஒரு இன்ஜெக்ஷன் போட்டுட்டோம். ஸ்ட்ரோக் எதுவும் வரலை. இப்ப நினைவு திரும்பிருச்சி.. மாவுக்கட்டு போட்டிருக்காங்க. ரூமுக்கு வந்தப்புறம் நீங்க போய்ப் பாக்கலாம்'' என்றார்.

அவருக்கு நன்றி கூறிவிட்டுப் பார்வதியிடம் திரும்பியவன், ''நீங்க போய்க் கிளம்புங்க... நான் இங்கே பாத்துக்கறேன்'' என்றதும் அவர் கிளம்பினார்.

உடனே அவளிடம் திரும்பிய போது, அழுது சிவந்திருந்த அவன் விழிகளில் ஆழ்கடலளவு சோகம் தெரிந்தது. தன்னையும் மீறி அவளை சமாதானப்படுத்த விழைந்த மனதை அடக்கியவனுக்கு, முந்தைய நாளின் நினைவில் முகம் பாறையாய் இறுகியது.

''போதும் அழுதது! எனக்கு உன்னோட சுயரூபம் தெரியும். நீ கிளம்பலாம். ஒரு துரோகியோட முகத்தைப் பார்த்துட்டு இனி என்னால நிம்மதியா இருக்க முடியாது! அப்பாவை உடனே அட்மிட் பண்ணதுக்கு நன்றி!'' அடிக்குரலில் சீறினான்.

மனம் உடைந்து அவள் வெளியே வந்த போது காரில் பார்வதி தயாராகக் காத்திருக்க, வீடு வந்து சென்னியப்பன் ன்றாக இருப்பதைக் கூறி விட்டு மாடிக்குச் சென்று கண்ணீரில் ரைந்தாள் தேஜா.



யாரோ தன்னருகே அமர்வது புரிந்து அவள் நிமிர்ந்த போது, வள்ளிதான் அவளை சமாதானப்படுத்தினாள்.

''என்ன தேஜா? தீபன் சாருக்கும் உங்களுக்கும் பிரச்சனையா?'' எனும் போதே இன்னும் உடைந்து போனாள் அவள்.

என்ன சொல்வதென்று யோசித்தவளுக்கு எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள ஒரு துணை தேவையாய்...!

நடந்ததை எல்லாம் அவளிடம் கூறிவிட்டு அப்படியே சரிந்து அவள் மடியில் படுத்து அழ ஆரம்பித்த தேஜாவைத் பார்த்தபோது வள்ளிக்கு எல்லாம் புரிந்தது.

காயம்பட்ட மனம், யாரையும் நம்பாமல், சரியான இணை தேடி இங்கு வர, அதைத் தவறாகப் புரிந்து கொண்ட தீபனை நினைத்தாள் கவலையாய்!

''அழக்கூடாது தேஜா! எவ்வளவு பெரிய துன்பத்தை எல்லாம் தைரியமாகத் தாண்டி வந்திருக்கீங்க... தீபன் சாருக்கும் ஒரு நாள் உண்மை புரியும்'' என்று முதுகை வருடி சமாதானப்படுத்தினாள்.

அன்று மாலை வீட்டுக்கு வந்த தீபனின் ஓய்ந்து போன தோற்றமும், இறுகிய முகமும், சிவந்த விழிகளும், உயிர் வேதனையை அவளுக்குள் விதைத்தன.

அவளைக் கண்டவுடன்''நீ இன்னும் போகலையா? சே... இந்த வீட்டுல நிம்மதியே கிடைக்காது போலருக்கு'' ரௌத்ரமாய் கூறி விட்டு சென்றவனையே பார்த்து கொண்டு நின்றவளை, அணைத்து ஆறுதல் கூறினார் பார்வதி.

''உனக்கு இந்தக் குடும்பத்து மேல எவ்வளவு அக்கறைன்னு எனக்கு நல்லாத் தெரியும் தேஜா.. அண்ணன் நல்லாயிடுவாரு! ஏன் தீபன் தம்பி கோபமா உன்கிட்டப் பேசதுன்னுதான் தெரியலை.. ஆனா எதுவா இருந்தாலும், பொறுமையா இரு.. அண்ணன் ஆஸ்பத்திரியில இருந்து வந்தப்புறம் எல்லாம் பேசிக்கலாம்'' கனிவுடன் கூறினார்.

''சரிம்மா'' என்று கூறிவிட்டு மாடிக்குச் சென்ற தேஜாவின் மனதில் ஒரு முடிவு நிலை பெற்றது.

## 15

தீபன் வீட்டில் இருக்கும்போது, இனி அவனெதிரில் செல்லக் கூடாதென்ற வைராக்ய மும், சென்னியப்பன் வீட்டுக்கு வந்தவுடன் அவரிடம் சொல்லிவிட்டு உடனே கிளம்பிவிட வேண்டுமென்ற உறுதியும் வந்தது.

மறுநாள் காலையிலேயே செல்லம்மா வந்து விட, கீழே ஒரே அழுகையாக இருந்தது. தேஜா கீழே இறங்கி வரவே இல்லை. டிபனை மாடிக்கு எடுத்து வந்த ஜெயந்தி தன் அம்மா வுடன் மருத்துவமனைக்குக் கிளம்புவதாகக் கூறிவிட்டுச் சென்றாள்.

அன்று முழுவதும் அமைதியின்றிச் செல்ல, ஏனோ அன்று மாலையே செல்லம்மா ஊருக்குக் கிளம்பிவிட்டார். ஊருக்குப் போவதற்கு முன்பு ஜெயந்தி மட்டும் அவளிடம் வந்து நீண்ட நாள் பழகிய ஒரு தோழியைப் போல விடைபெற்றுச் சென்றாள்.

அப்போது அவள் கூறிய விஷயம் மனதுக்கு இதமாய்! மாமா அம்மாகிட்டப் பேசி என்னை ஸ்கூல்ல சேக்கச்



சொல்லியிருக்காங்க உங்களுக்குத் தான்க்கா நான் 'தேங்க்ஸ்' சொல்லணும்'' என்று கூறியபோது அவளைப் பாசத்துடன் அணைத்து விடை கொடுத்தனுப்பினாள்.

மனம் கனத்துப் போயிருக்க, வள்ளியுடன் சென்று ஆற்றங்கரையிலமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது, ஏதேதோ பேசிக் கொண்டு வேகச் சுழற்சியுடன் சென்று கொண்டிருந்தது, நதி நீர்!

மனதில் ஈரம் உலராத ஆற்று மணற் பரப்பாய் தீபனின் நினைவு! அன்பால் மட்டுமே எதையும் சாதிக்க வேண்டு மென்று நினைத்து இங்கு தான் வந்ததும், அது நிறைவேறாமலே தான் செல்லப் போவதும் நினைவு வர, கண்ணீர் முத்துக்கள் அரும்பின.

தன் மனதிலிருந்த உணர்வுகளை எல்லாம் சஞ்சலத்துடன் அவள் வள்ளியிடம் பகிர்ந்த போது அவளுக்குள்ளும் ஒரு நம்பிக்கை ஒளி!

''நான் சொல்றதைக் கேப்பீங்களா தேஜா? பேசாம உங்களோட கடந்தகால வாழ்க்கையைப் பத்தி, அதுல நடந்த சோகங்களை எல்லாம், நீங்க பெரியவர்கிட்டச் சொல்லிருங்க'' என்றாள்.

''வேணாம் வள்ளி! அவருக்கே உடம்பு சரியில்லை.. என் சுயநலத்துக்காக அவர்கிட்டப் பேசி அவரைத் தொந்தரவு பண்ண நான் விரும்பலை! எனக்கு என்ன நடக்கும்னு எழுதியிருக்கோ, அது தானே நடக்கும். ம்... பாப்போம்'' என்றபடி எழுந்தாள்.

வீட்டுக்கு வந்த போது, மனம் தெளிவடைந்திருந்தாலும், துணிகளை அடுக்கி வைத்த போது இதயப் பக்கங்களில் உயிரோவியமாய் அவன்!

மறுநாள் காலையில் சென்னியப்பனை அழைத்து வரச் சென்றிருந்தான் தீபன். வள்ளியின் வீட்டிற்குச் சென்று, தன்னிடமிருந்த புதுப்புடவை ஒன்றையும், தன்னுடைய ''செல்போனை''யும் தன் நினைவாக அவளுக்குக் கொடுத்தாள்.

பிரிவை எண்ணித் தவித்த மனதை அடக்கியபடி திரும்பி வந்த போது, பார்வதி அவளுக்காகக் காத்திருந்தார்.

''தேஜா! அண்ணன் வந்துட்டாரு.. உன்னைப் பாக்கணும் அப்படின்னு கேட்டார்... மாடிக்கு வந்து தேடினா உன்னைக் காணோம்... வள்ளி வீட்டுக்குப் போயிருந்தியா? அண்ணனைப் போய்ப் பாரு!'' என்றபடி சமையலறைக்குள் சென்றார்.

மெதுவாக அவரது அறைக்குள் சென்ற போது, அங்கு தீபன் அமர்ந்திருக்க, ''வாம்மா தேஜா.. ஏம்மா நீ ஹாஸ்பிடலுக்கே வரலை?'' என்று கேட்டார் சென்னியப்பன்.

உடனே எழுந்த தீபன்,''அப்பா.. ரெஸ்ட் எடுங்க.. அநாவசியமாப் பேசி உடம்பக் கெடுத்துக்காதீங்க! டாக்டர் சொன்னது ஞாபகமிருக்கட்டும்'' அவர் கையைப் பிடித்து அழுத்தி விட்டுச் சென்றான்.

அவள் ஒருத்தி அங்கிருப்பதையே உணராதவன் போல், அவன் முகம் திரும்பிச் சென்றது, இதயத்தை கனக்கச் செய்வதாய்!



தயக்கத்துடன் அவருக்கு அருகில் சென்றவள்,''அங்கிள்.. இப்ப எப்படி இருக்கு? பரவாயில்லையா...'' என்றாள் கலங்கிய விழிகளுடன்!

''நல்லாயிருக்கேன்மா...ரொம்பத் தேங்க்ஸ்! உடனே என்னை ஆஸ்பத்திரியிலே சேத்தது நீ தான்னு தீபன் சொன்னான்.. அப்புறம் ஏன் நீ அங்க வரவே இல்லை?''

''ம்.. ஜெயந்தி இருந்ததால வீட்டிலயே துணையா இருந்துட்டேன்... அப்புறம்.. நீங்க டிஸ்சார்ஜ் ஆகி வந்துடுவீங்கன்னு தீபன் சார் சொன்னாங்க.. அதான்!'' எனும் போதே அறைக்கதவு திறந்தது.

''அப்பா... நீங்க ரெஸ்ட் எடுங்க! அவர் ஒரு பேஷண்ட்.. பேசினது போதும்!'' கடுமையான குரலில் கூறினான்.

''சரி அங்கிள்.. அப்புறம் ஊரில என் ஃப்ரெண்டுக்குக் கல்யாணம்.. போயிட்டு வந்திடறேன்.'' என்றபோது ''என்னம்மா, நாளைக்கு தீபாவளி.. அது முடிஞ்சுதானே கிளம்பறே.. நான் உடம்பு சரியில்லாம படுத்திருந்ததாலே, வீடே எந்தக் கோலாகலமும் இல்லாமக் களையிழந்து கிடக்கு.. நீயும் போறேன்கிறியே'' குறையுடன் கூறினார்.

**நா**ளை விடிந்தால் தீபாவளி! அந்த நினைவே இது வரை மனதில் பதியவில்லை. உலகமே இருண்டு கிடக்கின்ற உணர்வு எழ, நாளை நவம்பர் ஒன்று என்பதும் அது தன்னுடைய பிறந்த நாள் என்பதும் மனதில் அறைந்தது.

''என்னம்மா.. ஒண்ணுமே பேச மாட்டேங்கிறே?'' என்றவரிடம் மௌனப் புன்னகையைப் பதிலளித்து விட்டு வெளியில் வந்தாள்.

ஒரு கவரை அவளிடம் கொடுத்த சன்னாசி,"சின்னய்யா இத உங்ககிட்ட குடுக்கச் சொன்னாங்கம்மா" என்றான்.

தன் அறைக்குச் சென்று பிரித்தவளுக்கு, அன்று மதியம் ரயிலுக்கான டிக்கெட்டும், அவள் பெற மறுத்த பணமும், செக்காக அதில் இணைக்கப்பட்டிருப்பது புரிந்தது.

ஈரோட்டிலிருந்து மதியம் மூன்று மணிக்குக் கிளம்பும் கோவை எக்ஸ்பிரஸிற்கு இன்னும் ஒருமணி நேரத்தில் கிளம்பினால் தான் சரியாக இருக்குமென்று தோன்றியது.

பார்வதி அம்மாவிடம் சென்று விடைபெற்றபோது, பதறி எழுந்தவர், "என்ன தேஜா... நாளைக்கு தீபாவளி... இப்ப கிளம்புறே? நீ கிளம்பறது அண்ணனுக்குத் தெரியுமா? உனக்கும் தீபனுக்கும் என்ன பிரச்னைன்னு என்கிட்ட சொல்லக் கூடாதா? எனக்கு ஒண்ணுமே புரியலையே" பரிதவித்துப் போனார் அவர்.

"அம்மா! அங்கிள் கிட்ட சொல்லிட்டேன்... எனக்கு டிக்கெட் புக் பண்ணித் தந்ததே தீபன் சார்தான்.. நான் திரும்பி வரேன்மா!" என்று கூறியதும் அவர் மனதிலும் குழப்ப ரேகைகள்!

"சரி...எப்ப திரும்பி வருவே? என்றவரிடம்,"நிச்சயமா வருவேம்மா! ஒரு முக்கியமான ஃபங்ஷன் அதான் போறேன்." என்று அவரை சமாதானப் படுத்திவிட்டு மாடிக்குச் சென்றபோது, அவள் சொன்ன பொய்யை அவளே வெறுத்தாள்.

மதியம் சாப்பிட்டு விட்டுக் கிளம்பிய போது, தீபன் தன் அறையை விட்டு வெளியே வரவே இல்லை.



டிரைவர் வந்து பொருட்களை எல்லாம் காரில் ஏற்றிவிட்டு, ஸ்டேஷனுக்கு அவளைக் காரில் கொண்டு விடச் சொல்லி தீபன் கூறியதாகச் சொன்னபோது அவளால் மறுக்க முடியவில்லை.

கண்ணீருடன் எல்லோரிடமும் விடைபெற்றுக் கிளம்பிய தேஜாவை அனைவரும் வாசலுக்கு வந்து வழியனுப்பினர். அவனுடைய முதல் காதல் பரிசான கடிதாரை அணிந்திருந்த வளுக்கு, ஏனோ அவன் தன்னுடனே வருவது போல ஒரு உணர்வு!

## 16

தேஜா மவுனக் குமுறலோடு காரில் ஏறியபோது, அந்த வீட்டு வாசலில் ஒரு கார் நின்றது.

அதை சுவாரசியமின்றி ஏறிட்டவளுக்கு, காரிலிருந்து இறங்கியவனைக் கண்டதும் பேரதிர்ச்சியாய்... அதிலிருந்து இறங்கிய சங்கர் அவளைக் கண்டதும் வேகமாக அவளருகில் வந்தான்.

"தேஜா! நீ எப்படி இங்கே?" என்ற போதே அவளிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரிய, "இது.. சிவா அங்கிளோட பிரெண்ட் வீடு. நான் இங்க தான் தங்கியிருந்தேன். நீங்க...?"

"ம்... இது என் பிரெண்ட் தீபனோட வீடு. பல வருஷங்களுக்கு முன்னாடி காலேஜ் படிக்கிறப்ப வந்தது. இப்ப ஒரு வேலையா ஈரோட்டுக்கு வந்ததாலே அப்படியே இங்க வந்தேன்" என்றவனிடமும், விடை பெற்றுக் கிளம்பினாள்.

கார் கிளம்பிச் செல்வதையறிந்த தீபனின் மனதில், சூனியமாக ஒரு வெற்றிடம் மனதை நிரப்பியது. மனம் கனத்து விட ஹாலுக்கு வந்த போது தான், சங்கரைப் பார்த்தான் அவன்.

''தீபன்...'' என்று வேகமாக முன்னால் வந்து சங்கர் அவனை அணைத்துக் கொண்டான்.

''எவ்வளவு நாளாச்சு. காலேஜ் முடியறப்ப பார்த்ததோட சரி...'' என்று கூறிய தீபனின் மனம், பகிர்ந்து கொள்ள ஒரு துணை வந்த சந்தோஷத்தில் துடித்தது.

பிறகு சென்னியப்பனிடம் சென்று சங்கரை அறிமுகப் படுத்தினான் தீபன்.

சிறிது நேரம் அவரிடம் பேசி விட்டுத் திரும்பி, தங்களின் அறைக்கு வந்தபிறகு, அவர்களுடைய கல்லூரி நாட்களின் ஞாபகங்கள் இருவரையும் முழுதாய் ஆக்கிரமித்தன.

நேரம் போவதே தெரியாமல் சங்கருடன் பேசிக் கொண்டிருந்தபோதும், ஒரு பார்வையால் மனதைப் பறித்துச் சென்றவளை நோக்கி மனம் சென்றது. அவன் மனதோடு போரிட்டுக் கொன்றது அவள் நினைவு!

யாரிடமும் சொல்லி ஆறுதல் பட முடியாத வேதனைத் துளிகள், உள்ளே சரம் கோர்க்க, அவனை சாப்பிட அழைத்துச் சென்றான் தீபன்.

மீண்டும் அவனுடைய அறைக்கு வந்த போது தான் சங்கருக்கு தேஜாவின் நினைவு வந்தது.

உடனே தீபனிடம் திரும்பி, ''தீபன்.. தேஜஸ்வினி இங்க எப்படி வந்தா?'' என்றான் யோசனையுடன்.



அவள் பெயரைக் கூறியதுமே இறுகிய முகத்தை இயல்பாக்க முயன்றவன், ''அவளை உனக்கு எப்படித் தெரியும் சங்கர்? அவ உன்னையும் ஏமாத்திட்டாளா?'' என்றான் கூர்மையாக.

''அப்படின்னா...? அவ என்னை ஏமாத்தலைடா. நான் தான் அவளோட வாழ்க்கையப் பாழாக்கிட்டேன். இந்த ஜென்மத்துல எனக்கு மன்னிப்பே கிடையாது. அதான் இப்ப இப்படி இருக்கேன்'' என்றபோது சுக்கு நூறாய் சிதறியது தீபனின் மனது.

''அப்ப... அவ உன்னைக் காதலிச்சாளா?'' பதறிப் போய்க் கேட்டான்.

''இல்லடா.. அவ ரொம்ப நல்லவ. நான் நடந்ததெல்லாம் ஆரம்பத்திலேருந்து சொன்னாத்தான் உனக்குப் புரியும்'' என்றபடி எல்லாவற்றையும் கூற ஆரம்பித்தான்.

தன் குடும்பத்தினரின் பணத்தாசை, தன்னுடைய போதை மருந்துப் பழக்கம், தன்னுடைய சுயநலம், பெரிய பணக்கார இடமாகத் தான் வலைவீசித் தேடியது. தேஜாவுடைய அப்பாவின் வசதி அறிந்து, அவரிடம் அலையாய் அலைந்து சம்மந்தம் பேசியது. பிறகு நடந்த நிச்சயம், சுவாமியின் சுருட்டலால் அவளுடைய அம்மா, அப்பாவின் மறைவு. பிறகு சிவநேசன் கூறியதை நம்பி, தன் குடும்பத்தினரும் தானும் செய்த கொடுமை, எல்லாவற்றையும் கூறியவனின் முகம் வெளிறிப் போயிருந்தது.

தன் தலையை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டவன், ''எனக்கு மன்னிப்பே கிடையாது தீபன். ஒரே நாளிலே அநாதையா நிர்க்கதியா நின்ன ஒரு பொண்ணை,

இன்னம் காயப்படுத்தி மனிதர்கள் மேல நம்பிக்கையே இல்லாம வாழ்க்கை மேல ஒரு பிடிப்பே இல்லாம செஞ்சது நான் தான்.

''அந்த நிமிஷம் ஆறுதலா இருந்திருக்க வேண்டிய எங்க குடும்பமே, அத சகுனத்தடையா சொல்லி அவளை இன்னும் நோகடிச்சி... சே! அதுக்கு எனக்கு கடவுள் நல்ல தண்டனை குடுத்திட்டாரு'' என்று முகத்திலறைந்து அழுதபோது, அவனை ஆறுதல் படுத்தினாலும் தீபனின் முகத்தில் கோடிப்பிரகாசம்.

தன் கண்மணி, தன்னை ஏமாற்ற இங்கு வரவில்லை. தன் மனதில் பட்ட காயத்தினால் யாரையும் நம்ப மறுத்து ஆறுதல் தேடித்தான் வந்திருக்கிறாளென்ற உண்மை தெரிந்த போது, அவளுக்காக உருகித் தத்தளித்தது மனது.

உடனே அவளை அணைத்து ஆறுதல் படுத்தி உனக்கு நானிருக்கிறேன் என்று கூறி அவள் துயர் துடைக்க வேண்டும் என்று மனம் பரபரத்தது.

உடனே, தன் செல்லை உயிர்ப்பித்து சிவா அங்கிளின் 'செல்'லுக்குத் தொடர்பு கொள்ள அவருக்கு லைன் கிடைக்காததால் தவித்துப் போனான் தீபன்.

''சங்கர்! நாம உடனே கிளம்பணும்டா, என்னை உயிரா நேசிச்ச ஒருத்திய மிஸ் பண்ணிடுவேனோன்னு பயமா இருக்கு'' பதறியவனை அமைதிப்படுத்தினான் சங்கர்.

''எனக்கு எல்லாம் புரிஞ்சிடுச்சி. நீ ஏன் அவளைப் பிரிஞ்சேன்னு எனக்குத் தெரியலை. ஆனா நான் பண்ணின தப்புக்கு பிராயச்சித்தம் செய்யற நேரம் வந்துடுச்சி. கிளம்பு உடனே போகலாம்''



இருவரும் வெளியே வந்தபோது, அவளை ஸ்டேஷனில் இறக்கி விட்டு விட்டு டிரைவர் வந்து கொண்டிருந்தான்.

இனி அங்கு சென்று பிரயோஜனமில்லை என்பது புரிய சங்கர் தான் அந்த யோசனையைக் கூறினான்.

''தீபன்! நான் இங்க உன் அப்பாட்ட பேசிக்கறேன். நீ கோயம்புத்தூருக்குப் போய் ஈவினிங் ப்ளைட்டப் புடிச்சி சென்னைக்கு போயிடு. இங்க நான் பார்த்துக்கறேன்'' என்றான்.

சென்னியப்பனிடம் சுருக்கமாக எல்லாவற்றையும் கூறியபோது, அவர் சங்கரையும் தீபனுடன் போகச் சொன்னார். அவனைத் தனியே அனுப்ப ஏனோ அவர் மனம் ஒப்பவில்லை.

தன் மனதில் இருந்த அந்த விருப்பம், தீபனுக்கும் வந்தது அறிந்து மகிழ்ந்து போனவர், உடனே சிவநேசனிடம் பேசினார்.

பிறகு தீபனிடம் கொடுத்த போது தன்னுடைய யோசனைப் படியே தேஜா அங்கு வந்ததையும், அவள் மேல் எந்தத் தவறும் இல்லையென்பதையும் அவர்கள் விரும்புவதை அறிந்ததும் தான் மிகவும் மகிழ்ந்ததையும் அவர்கூறியபோது, கலங்கிப் போனான் தீபன்.

''அங்கிள்.. இப்ப அவளோட வீட்டு சாவி யார் கிட்ட இருக்கு'' என்றான் ஒரு வித அவசரத்தோடு.

''வீட்டை இப்ப அவங்க கம்பெனி கெஸ்ட் ஹவுசா மாத்தி இருக்கறதாலே, அங்கே ஒரு கேர் டேக்கர் இருப்பாரு முரளின்னு! ஏம்ப்பா, எதுக்குக் கேக்கறே?''

''ஒன்னுமில்லை அங்கிள். இப்ப நானும் என் நண்பனும் அங்க போறோம். என் 'செல்' நம்பர் நோட் பண்ணிக்குங்க, அங்க போன் பண்ணி என் பெயரையும் நம்பரையும் சொல்லி என்னைக் கான்டேக்ட் பண்ணச் சொல்லுங்க. நான் அங்க வரதையும், நான் சொல்ற சில விஷயங்களையும் உடனே செய்யணும்னு மட்டும் சொல்லுங்க''

''ம்... ஓகேப்பா! சொல்லிடறேன். அப்புறம் ஹேப்பி தீபாவளி. நாளைக்கு நவம்பர் ஒண்ணுதானே, தேஜாவோட பிறந்த நாள் கூட நாளைக்குத்தான். மறக்காம விஷ் பண்ணிடு'' என்று கூறி வைத்தார்.

அவன் மனதில் பரவசம் இனிதாகப் படர ஆரம்பித்தது. இதயச் சுவடியில், வரிகளாய் அவள் நேசம். தேவதை போன்ற ஒரு பெண் உன்னை நம்பியே தன் மனதை ஒப்படைத்திருக்கிறாள்.

அவளைப் பொக்கிஷமாய் பாதுகாக்க வேண்டியது உன் பொறுப்பு என்ற முதல்வித்து, மனதில் விதையாக விழுந்து நெஞ்சக் கூட்டுக்குள் சிலிர்ப்பையும், காதலையும் ஒன்றாகத் துளிர்க்கச் செய்தன.

## 17

சங்கர் வந்த வாடகைக் காரிலேயே இருவரும் கோயம்புத்தூருக்குச் செல்லும் போது, சென்னையிலிருந்து கேர்டேக்கர் முரளி, தீபனிடம் பேசினான்.

அங்கு செய்ய வேண்டிய சில ஏற்பாடுகளைக் கூறி விட்டு, தேஜா அங்கு வருவதையும் கூறி விட்டு



வைத்தான் தீபன். இப்போதுதான் அவன் மனது, தியானத்தில் ஆழ்ந்து விட்ட ரிஷியைப் போல் அமைதியானது.

சங்கரிடம் திரும்பியவன்,''உன்னோட மீதிக் கதையச் சொல்லலையே?'' ஆவலுடன் கேட்டான்.

''ம்.. சொல்றேன். தேஜாவோட சொத்துக்களைப் பத்தி அப்ப சிவநேசன் பொய் சொல்றாருன்னு எங்களுக்குத் தெரியாது. அந்த நிச்சயத்தை நிறுத்தின உடனே, எங்க வீட்டுல ஒரு பாரின் அலயன்சா பாத்து அந்தப் பொண்ணு லீவுல வந்திருக்கறப்ப என் கல்யாணத்தை முடிச்சாங்க.

''என் திருமணத்துக்கு வந்திருந்த சிவநேசனோட நண்பர் ஒருத்தர் சொல்லித்தான், அவர் எங்களை ஜட்ஜ் பண்றதுக்காக ஒரு பொய்யச் சொல்லி இருக்கார்னு தெரிஞ்சது.

''அப்பக்கூட தேஜாவோட அழகும், அவ பணமும் என்னை அலைபாய வச்சது. சாரி தீபன்! தப்பா நினைச்சிக்காதே. அப்ப என் மனசுல இருந்ததை ஓபனா சொல்லிட்டேன். இப்ப நான் வாழ்க்கையில் அடிபட்டு ரொம்பவே மாறிட்டேன்.

''ஆனாலும் என்னோட வக்ரபுத்தியப் பத்தி நான் சொல்லித்தானே ஆகணும்'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தி விட்டுத் தொடர்ந்தான்.

''நான் என் மனைவியோட பாரின் போனப்புறம் தான் தெரிஞ்சது. அவளும் ஒரு 'ட்ரக் அடிக்ட்'டுன்னு! அவளுக்கு நிறைய பாய் பிரண்ட்ஸ்! எனக்கு எதிர்லயே அவ அவங்களோடல்லாம் சந்தோஷமாக இருக்க ஆரம்பிச்சா.

"ஒரு ரெண்டு மாசம் கூட என்னால அவளோட வாழ முடியலை. உடனே ம்யூச்சவலா விவாகரத்துக்கு அப்ளை பண்ணி பிரிஞ்சிட்டு ஒரு "டீ அடிக்ஷன் சென்டர்"ல சேந்து என்னோட போதை மருந்துப் பழக்கத்திலேருந்தும் வெளியே வந்தேன்.

"என் தப்பு அப்ப தான் உறைச்சது! ஒரு நல்ல பெண்ணை ஏமாத்தின பாவம் தான் என் வாழ்க்கையப் பலி வாங்கிடுச்சின்னு புரிஞ்சிட்டேன். ரொம்ப நாளா போதை மருந்துக்கு அடிமையா இருந்ததாலே, நான் ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிற தகுதியையும் இழந்துட்டதா அந்த டாக்டர் சொன்னப்ப தான், நான் நொறுங்கிப் போயிட்டேன். என் தவறுகளுக்குக் கிடைச்ச பலமான ஒரு அடியா அத நான் ஏத்துக்கிட்டேன்.

"போன மாசம் தான் இந்தியாவுக்கு வந்தேன். என் மனசை அமைதிப்படுத்திக்கலாம்னு.. தான், யோகா கத்துக்கறதுக்காக கோயம்புத்தூருக்கு வந்தேன். அப்பத் தான் உன் ஞாபகம் வந்தது. இங்க வந்தப்ப தேஜாவைப் பாத்தேன். ஆமாம்.. உங்களுக்குள்ளே என்ன பிரச்சனை?" என்ற கேள்வியுடன் முடித்தான் சங்கர்.

மெல்லிய குரலில் டிரைவர் அறியாமல் தனக்கும், தேஜாவுக்கும் இடையே நிகழ்ந்தவற்றை தீபன் கூறியபோது, குன்றியிருந்த சங்கரின் முகம் கறுத்துச் சிறுத்தது.

சிறு வயதில் தனை விட்டு நீங்கிச் சென்ற தாயின் உருவம், பேரன்பைச் சுமந்து அவனுக்காகவே திரும்பி வந்ததைப் போல் தீபன் உணர்ந்தான்.



விமானத்தில் ஏறி அமர்ந்த பிறகு தான் மூச்சே வந்தது அவனுக்கு! மனக்கோவிலில், உற்சவத்துச் சிலையாய் அவள் உருவம்.

அந்த ரயில், யாரோ துரத்துவது போல் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. பகலின் விளிம்பிலிருந்து எட்டிப் பார்க்க இரவின் வரவு தெரிந்தது.

கண்மூடி அமர்ந்திருந்த தேஜாவுக்குள் உணர்வுகளின் ஊர்வலம்! நாளைக் காலையில் தீபாவளி என்பதுடன், தன் பிறந்த நாளும் அன்று தான் என்ற எண்ணம் மனதை கனக்கச் செய்வதாய்!

போன வருடம் இதே நாளில் தன்னுடனிருந்த பெற்றோரை இழந்து. பிறகு தனக்குள் பொக்கிஷமாய் பூட்டி வைத்திருந்த தீபனின் அன்பையும் இழந்து தனிப்பறவையாய் பயணிப்பது பெரும் இழப்பாய்..!

இன்று தான், ஒரு அநாதை என்ற உணர்வே அவளுக்குள் ஆழமாய் வேரூன்றியது. மனதில் கண்ணீரின் வரவு தெரிய, அது தொற்று வியாதியாய் கண்களிலும் சட்டெனப் பரவியது.

ரயிலில் அருகிலிருப்பவர்களின் நினைவும், அழுகை தன்னை பலவீனப்படுத்திவிடுமென்ற எச்சரிக்கை உணர்வும் அவளுக்குள் விரவிப் பரவ அழுகையை அடக்கினாள்.

மனதை உறுதிப்படுத்த வேண்டும் என்ற வேகம் எழுந்தது. உறுதியான மனம் தன்னை உணரும். தன்னை உணர்தல் மனச்சலனங்களை நீக்கும். அமைதி பிறக்கும்! புனரபி ஜெனனம்... புனரபி மரணம் என்பது போல், இது தன்

வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் என்று எடுத்துக் கொள்ளப் பழக வேண்டுமென்று மனம் உருப்போட்டது.

ஆனால் எந்த நாளிலும், தன் மனம் தீபனின் மேல் கொண்ட காதலை மறக்காதென்று உணர்வுகள் புரிய வைத்தன.

ஒற்றைத் துளியாய் மார்பில் வீழ்ந்த கண்ணீர், நெஞ்சம் உலைக் களமாய் தகிக்க உடனே உலர்ந்தது. வீட்டிற்குச் சென்றவுடன் சிவநேசனிடம் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

மாடியில் அவளுடைய அறையும், ஹாலும் தங்களின் உபயோகத்திற்கென விட்டு வந்ததை எண்ணி மனம் நிம்மதியாக, உடனே தீபனுடைய நினைவு! சங்கர் வந்திருப்பது வேறு அவளை சஞ்சலப்படுத்தி, மனவானில் குழப்ப மேகங்களின் ஆதிக்கங்கள்.

பல இரவுகள் உறக்கத்தை தொலைத்திருந்ததால், கண்மூடிப் பின்புறம் சாய்ந்து உறங்கிப் போனாள் தேஜா.

பட்டாசுச் சத்தத்தில் கண் விழித்த போது, ரயில் பெரம்பூரில் நின்றிருந்தது. தன் பொருட்களை எடுத்து வைத்தவள், பிறகு சென்ட்ரலில் இறங்கி ஒரு ஆட்டோ பிடித்து வீட்டிற்குச் சென்ற போது மனம் இறுகிப் போயிருந்தது.

## 18

வீட்டு வாசலில் சென்று ஆட்டோ நின்றவுடன் இறங்கிய தேஜா நிமிர்ந்த போது, வீடு முழுவதும் கார்த்திகை தீபம் போல் அகல் விளக்குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன.



தங்கச்சரம் கோர்த்தாற் போல், மின்னல் தோரணங்களாய் ஜெகஜ்ஜோதியாய் அவளைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருந்தன தீபங்கள்!

''என்னம்மா... வீட்டுல ஏதாவது விசேஷமா?'' என்றபடி ஆட்டோ டிரைவர் பாக்கி பணத்தைக் கொடுத்து விட்டுக் கிளம்ப அவள் வியப்புடன் பெட்டியை தூக்கிய போது வாட்ச்மேன் ஓடி வந்தான்.

''வாங்கம்மா'' என்றபடி பெட்டிகளை எடுத்தவன்,''எப்படி இருக்கீங்கம்மா.. ரொம்ப நாளாச்சு பாத்து... மெலிஞ்சாப் போல தெரியறீங்க'' விசாரித்தபடி பவ்யமாய் பின்னே வந்தான்.

''நான் நலலாருக்கேன் பீட்டர்! வீடு முழுக்க ஏன் விளக்கேற்றி வச்சிருக்கீங்க..? நாளை தீபாவளி தானே.. கார்த்திகை தீபம் மாதிரி இருக்கு!''

''தெரியலைம்மா. முரளி அய்யா தான் எல்லா ஏற்பாடும் செஞ்சாங்க.''

கேர் டேக்கர் முரளி தான் இதை எல்லாம் செய்திருக்கிறான் என்பது புரிந்த போது, ஒரு வேளை கம்பெனி விஷயமாக வட இந்தியாவிலிருந்து யாராவது வந்திருப்பார்களோ என்ற எண்ணம் வந்தது.

அங்கு தான் தீபாவளியை, இந்த மாதிரி தீபங்கள் ஏற்றி,''பெஸ்டிவல் ஆப் லைட்ஸ்'' என்று கொண்டாடுவதாக ஒரு தோழி முன்பு கூறியது நினைவில் வர, நட்சத்திரங்களாய் மின்னிய தீபங்களை ரசித்துக் கொண்டே உள்ளே சென்றாள் தேஜா.

சோர்வுடன் முன் ஹாலுக்குள் நுழைந்ததுமே, எதிரில் நின்ற உருவத்தைக் கண்டதும், மின்சாரம் தாக்கியது போன்ற அதிர்ச்சி வந்தது அவளிடம்!

உதடுகளில் உறைந்த புன்னகையுடன், அங்கு அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான், அவளுடைய தீபன்!

பீட்டர் பொருட்களை வைத்து விட்டு கதவை சாத்தி விட்டு செல்ல, எதிர்பாராத அதிர்ச்சியில் பனிச்சிற்பமாய் உறைந்து நின்றிருந்தவளின் அருகே மெதுவாக வந்தான் தீபன்.

அவளுடைய பார்வை அவனிடமே பதிந்திருக்க, நம்ப முடியாத ஆச்சர்யமும், நிஜமின்றி வேறில்லை என்னிடமே என்ற தவிப்பும் தெரிந்தது அதில்!

எதிர்பாராமல் ஆழ்கிணற்றில் தள்ளப்பட்ட நிலையில், மூச்சு காற்றுக்கு ஏங்கித் தவித்துத் திணறுபவளின் நிலையிருந்தாள், அவள்.

அவனுடைய அருகாமை வேறு பதட்டத்தை ஏற்படுத்த, தீக்குச்சியின் உரசலில்லாமலே தகித்தது நெஞ்சம்.

"தேஜீ! சாரிடா.. என்னை மன்னிப்பியா? நான் உன்னை ரியாப் புரிஞ்சிக்காம, நீ சொல்ல வந்ததையும் கேக்காம ன்னை ரொம்பக் காயப்படுத்திட்டேன் இல்லை?

"சங்கர் வந்து சொன்னப்புறம் தான், எனக்கு எல்லா ண்மையும் தெரிஞ்சது. எனக்கு அம்மா கிடையாது. ஒரு வனை அம்மாவோட அரவணைப்புல வளர்ந்திருந்தா, இந்த ளவு முரட்டுத்தனமும் கோபமும் என்கிட்ட ருந்திருக்காதோ என்னவோ...?



"நீ தான் என்னை மாத்தணும் தேஜீ! உன் அன்பால மட்டும் தான் அது முடியும்னு நான் நினைக்கிறேன்.

"ஹாஸ்டல்லயே முக்கால்வாசி நாள் வளர்ந்து, இயந்திரத் தனமாவே இருந்த என் வாழ்க்கையில் தேவதையா வந்து எனக்கு ஒளிமயமான ஒரு வாழ்க்கையை அறிமுகப்படுத்தி, எனக்கு நேசம் தந்தவள் நீதானே...!

"எனக்கு நேசம் தந்த நீதான், என் எதிர்கால வாழ்க்கைக்கும் புது அர்த்தம் தரணும்னு நான் விரும்பறேன். எனக்கு இந்த நிமிஷம் மட்டும் பத்தாது. என் வாழ்க்கை முழுக்க எனக்கு மட்டுமே சொந்தமா நீ வேணும் தேஜீ!

"என் மனகல முதன் முதலா வசந்தத்தை அறிமுகப் படுத்திய ஒரு தேவதைக்கு நாளைக்குப் பிறந்த நாள். அந்த தேவதை எனக்கு ஒரு வரம் தரணும்னு தான், இவ்வளவு நேரமா தீபங்களோடக் காத்துட்டிருக்கேன். கிடைக்குமா?" என்றான் ஏக்கம் பார்வையுடன் உருக்கமாய்!

அவனுடைய வார்த்தைகள், அவளுக்குள் பூஞ்சிறகாய் வருடின. ஊடல் உடைந்த அந்த நிமிடமே, இருமனங்களும் ஒன்றாக இணைந்தன. தன் பரிசு, அவளை மேலும் அழகாக்கியிருப்பது புரிந்தது.

தேகமெங்கும் லட்சம் பூக்கள் மலர, ஒற்றைப் பார்வையாலேயே தன் மனக்காயங்களை ஆறச் செய்யும் சக்தி அவனுக்கிருப்பது புரிந்து, மனம் சிலிர்த்தது.

அவன் தன்னைப் புரிந்து கொண்டதில், மனம் ஜதியாய்த் துள்ளல் போட, "தீபன்..." என்றபடி, அவள் தவித்து நின்றாள்.

''தேஜீ... என் கண்மணி'' என்றபடி, தீபன் அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

பிறகு,''தேஜீ... அட்வான்ஸ் ஹாப்பி பர்த்டே விஷஸ்'' என்றபடி, அவள் இதழ்களில் மென்மையாகத் தன் உதடுகளைப் பதித்தான், தீபன்.

தனக்குள் நேசத்தை விதைத்து, மென்மையான காதல் உணர்வுகளைத் துளிர்க்கச் செய்தவளைத் தன் உயிராய் வரித்துக் கொண்டது, அவன் இதயம்!

'என் புன்னகை நீ.. என் வசந்தம் நீ... என் வாழ்க்கை நீ... என் உயிரும் நீ' என்ற மௌனச் செய்தியுடன், தன் கண்மணியை மெல்ல அணைத்து, அவளுடைய உச்சியில் தன் கன்னத்தை பதித்துக் கொண்டான் தீபன்.

தோட்டத்தில், வசந்தத்தின் வனப்பாய் மலர்கள் புன்னகை செய்ய உலகுக்கே ஒளி தரும் தீபமாய் நிலவு வானில் ஒளிர்ந்து கொண்டிருக்க, வீடு முழுவதும் ஏற்றப்பட்டிருந்த தீபங்கள் மகிழ்ச்சியுடன் கண் சிமிட்டின...!